விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144.
பிறவுன் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:kalyaanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே



சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 06 செவ்வாய்க்கிழமை (20.06.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 183

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் பேரெழுச்சி; பெற்றுத்தந்த பெருவெற்றி

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்ட போது நம் தமிழ் மக்கள் கொண்ட பேரெழுச்சி மிகப்பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை தேர்தலுக்காக நீங்கள் அழைத்து வந்திருக்கலாம்.

ஆனால் அவரை முதலமைச்சராக்கியது நாங்கள். எனவே அவரை நீக்குகின்ற அதிகாரம் எதுவும் உங்களுக்கு கிடையாது.

அவரை நீக்க நினைத்தால் நாங்கள் எப்படிப் பதிலளிப்போம் என்பதை பூரண ஹர்த்தால் மற்றும் ஆதரவுப் பேரணி மூலமாக மக்கள் தம் பேரெழுச்சியை வெளிப்படுத்தினர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் மீது தமிழ் மக்கள் கொண்ட பாசம் தமிழ் அரசியல்வாதிகளை மட்டுமன்றி தென்னிலங்கை அரசியல்வாதிகளையும் கதிகலக்கியது.

தன்மீது தமிழ் மக்கள் இத்துணை நம்பிக்கையும் பற்றும் வைத்துள்ளனரா? என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் கூட நினைக்குமளவில் உள்நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் தமிழ் மக்கள் தங்கள் தலைவன் விக்னேஸ்வரன் என்பதை உறுதிபட உரக்கச் சொல்லியுள்ளனர்.

சுருங்கக்கூறின் தலைவர் பிரபாகரனுக்கு ஈடாக தங்கள் அகிம்சை வழித் தலைவனாக தமிழ் மக்கள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனைப் பார்க்கின்றனர் என்ற உண்மையை இனிமேலாவது தமிழ் அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேநேரம் மக்கள் தலைவன் என்று புகழிட்டுக் கூறக்கூடிய வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்கு ஆதரவாக தமிழ் மக்கள் நடத்திய பேரெழுச்சி தமிழ் அரசியல் தலைமையை, தமிழ் அரசியல்வாதிகளை நிச்சயம் நெறிப்படுத்தும் என நம்பலாம்.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் போருக்குப் பின்பான தங்களின் வாழ்வு அச்சமற்றதாக - செழுமையுடையதாக அமைய வேண்டும் என்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தங்கள் வாக்குகளை அளித்தனர்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம் உரிமை தொடர்பில்; போர்ப் பாதிப்புத் தொடர்பில் தமிழ் மக்களின் நம்பிக்கையை வெற்றி கொள்ளும் வகையில் செயற்படவில்லை. இது தமிழ்த் தலைமை மீது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியிருந்தது.

எனினும் மக்கள் பொறுமை காத்தனர். அந்தப் பொறுமையைச் சோதிப்பதாக முதலமைச்சர் விக்னேஸ்வரனின் பதவி மீது கைவைத்த போது தமிழ் மக்கள் வீறு கொண்டு எழுந்தனர்.

ஆக, தமிழ் அரசியல்வாதி எவர் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டாலும் மக்கள் எழுச்சி கொள்வர் என்பது நிரூபணமாகியுள்ளதால் சகல தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ் இனத்தின் - தமிழ் மக்களின் சுபீட்சத்துக்காக பாடுபட முன்வர வேண்டும்.

# மக்கள் பேரெழுச்சி
# நம்பிக்கையில்லா தீர்மானம் வாபஸ்

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் நேற்று தமிழரசுக் கட்சியால் வாபஸ் பெறப்பட்டது.**

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கடந்த 14.06.2017 அன்று இரவோடு இரவாக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயிடம் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தால் கையளிக்கப்பட்டது.

இதனையடுத்து கடந்த 15ஆம் திகதி முதலமைச்சருக்கான தமது ஆதரவைத் தெரிவித்து இளைஞ 23

## அமைச்சர்கள் பணியிலிருக்க விசாரணைகள் தொடரும்

### சம்பந்தனுக்கு விக்னேஸ்வரன் கடிதம்



(யாழ்ப்பாணம்)

விசாரணைக் குழுவினால் குற்றம்சுமத்தப்படாத இரண்டு அமைச்சர்களையும் கட்டாய விடுப்பில் செல்ல நான் வலியுறுத்த மாட்டேன் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று தெரிவித்துள்ளார். 24

## முதல்வரின் நிபந்தனைக்கு இணங்கிக் கொள்கிறோம்

### விக்னேஸ்வரனுக்கு சம்பந்தன் பதில் கடிதம்

(கொழும்பு)

வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை மீளப் பெறப்படும் என்றும் அது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேக்கு தொலைபேசி 24



## நடுவுநிலை தவறிய அவைத்தலைவர் விசாரணைக்குழு குறித்து மீளாய்வு

### ஊடக சந்திப்பில் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களை விசாரணை மேற்கொண்ட விசாரணைக்குழு தொடர்பில் மீளாய்வு ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், கடந்த சில நாட்களாக இழுபறியில் இருந்த பிரச்சினை முடிவுக்கு வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

“குருகுலராசா விரைவில் இராஜினாமா”

நேற்றைய தினம் இரவு 7 மணியளவில் 23

## ஆதரவாளர்கள் நேற்று மோதல்

(குருமன்காடு)

வட மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் ஆதரவாளர்களுக்கும், வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்தின் ஆதரவாளர் 23

## சுமுகமான தீர்வு; மாவை இணக்கம்

(யாழ்ப்பாணம்)

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் எங்களை பயன்படுத்த அனுமதிக்க முடியாது என்பதுடன் எமக்குள் பிளவை ஏற்படுத்தவும் விட முடியாது என் 23

## கர்ப்பிணி கொலை; சட்டத்தரணிகள் ஆஜராக வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையில் கர்ப்பிணித் தாயொருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் ஆஜராக வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் நீத 23

### சம்பந்தன், மாவை, விக்னேஸ்வரனுக்கு

## மூன்று ஆலோசனைகளுடன் மதத் தலைவர்கள் கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை தொடர்பில் ஏற்பட்டுள்ள குழப்பகரமான நிலைமை தொடர்பில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும், தமிழரசுக் கட்சிக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்த மதத் தலைவர்கள், இவ்விடயம் தொடர்பில் மக்களின் கருத்துக்களை பிரதிபலிக்கும் 3 ஆலோசனைகளை குறிப்பிட்டு சம்மந்தப்பட்ட தரப்புக்களுக்கு கடிதம் மூலம் நேற்று அனுப்பியுள்ளனர்.

வணக்கத்துக்குரிய மதத் தலைவர்கள் சார்பில் நல்லை ஆதீன குரு முதல் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாவிதம்

# த.தே.கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தன் இனி இருக்க முடியாது

## தன்னிச்சை முடிவுகளால் வாய்ப்பு தவறிவிட்டது - ஆனந்தன் எம்.பி

(வவுனியா)

த.தே.கூட்டமைப்பின் தலைவராக இருப்பதற்குரிய தகைமையை இரா.சம்பந்தன் இழந்திருக்கின்றார் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் செயலாளர் நாயகம் பத்மநாபாவின் 27ஆவது நினைவு தினம் நேற்று வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் செயலாளர் நாயகம் பத்மநாபாவின் 27ஆவது நினைவு தினத்தில், அவரின் மனப்பதிவுகளை சொல்ல எண்ணுகின்றேன். முக்கியமாக தமிழ் மக்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும்.

தமிழ் இயக்கங்கள் மற்றும் கட்சிகளுக்கிடையே ஒரு ஐக்கியத்தை உருவாக்க வேண்டுமஉட்பட வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண அரசை உருவாக்குவதிலே அவர் மிகப்பெரிய பணியினை செய்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாண சபை உருவாக்கத்திலே கிட்டத்தட்ட ஆயிரத்திற்கு மேற்பட்ட எமது கட்சி தோழர்கள் ஆதரவாளர்கள் உயிர் நீத்திருக்கின்றார்கள்.

வடகிழக்கு மாகாண சபை இரண்டாக பிரிக்கப்பட்டிருந்தாலும் கூட இன்றைய தினம் வடக்கு மாகாண சபையில் ஏற்பட்டிருக்கின்ற சர்ச்சைகள் தமிழ் மக்கள் மத்தியிலேயும் குறிப்பாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமைப்பாகத்தை வகிக்கின்ற தமிழரசு கட்சியினுடைய தலைவர்கள் ஏனைய பங்காளி கட்சிகளின் ஆலோசனைகள், அபிப்பிராயங்கள் கேட்காமல் தன்னிச்சையாக எடுத்த முடிவுகளாகும்.

குறிப்பாக மாகாண சபை தொடர்பாகவும் அதன் அமைச்சர்கள் தொடர்பாகவும் எடுத்த முடிவுகளால் பாரியதொரு நெருக்கடியினை உருவாக்கியுள்ளதுடன், விமர்சனங்களையும் உருவாக்கியுள்ளது.

வடகிழக்கு இணைந்த மாகாண சபையானது தமிழ் மக்களிற்குரிய தற்காலிகமான தீர்வாக தோழர் பத்மநாபா ஏற்றுக் கொண்டார்.

இதற்கு காரணம் அன்று ஏற்பட்ட சர்வதேச மாற்றங்களினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட இருந்த பாரிய அழிவுகளையும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வை அளிக்க வேண்டும் என்பதற்காக தற்காலிகமாக பத்மநாபாவின் தலைமையிலே வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபை உருவாக்கப்பட்டது.

பல முயற்சியாளர்களிற்கு நடுவே உருவாக்கப்பட்ட இந்த மாகாண சபையை முன்னெடுத்து செல்வதில் தமிழரசு கட்சியின் தலைமை விட்ட பாரிய தவறானது மாகாண சபை மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை தொடர்பாகவும் பாரிய கேள்விக்குறியை உருவாக்கியுள்ளது.

குறிப்பாக கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற மூன்று பங்காளி கட்சிகளின் கருத்தை கூட தலைவர் சம்பந்தன் நிராகரித்துள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினுடைய தலைமையினால் இந்த மாகாண சபையிலே ஏற்பட்டிருக்கின்ற சர்ச்சையைக் கூட சரியாக தீர்க்கப்படாது இழுபறி நிலையில் தான்இரா.சம்பந்தனை நாங்கள் பார்க்கின்றோம்.

கூட்டமைப்பிற்கு என உயர்மட்ட குழு இருக்கின்றது. இக்குழுவை கூட்டி வெளிப்படையாக ஒரு முடிவெடுக்காமல் தன்னிச்சையாக முடிவெடுத்திருக்கின்ற தன்மையானது பங்காளிக் கட்சியான எங்களுக்கு ஏமாற்றத்தை அளித்திருக்கின்றது.

எதிர்காலத்தில் சம்பந்தர் ஐயா கூட்டமைப்பின் தலைவராக இருப்பதற்குரிய வாய்ப்பை இழந்திருக்கின்றார். தமிழ் மக்களுக்கிடையில் ஒற்றுமை வேண்டும். தமிழ் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை வேண்டும் என்பதை தோழர் பத்மநாபா காட்டிய வழியில் கடந்த பதின்னான்கு வருடமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக செயற்பட்டு வந்துள்ளோம்.

எங்களிற்கு பல்வேறுபட்ட அநீதிகள் கூட்டமைப்பின் தலைவராலும் தமிழரசு கட்சியாலும் இழைக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் தமிழ் மக்களிற்கு நிரந்தரமான அரசியல் தீர்வை காணுவதற்கு பத்மநாபா காட்டிய வழியில் ஒற்றுமை ஐக்கியம் தேவை என்பதன் அடிப்படையில் நாம் பயணிக்கின்றோம்.

தமிழ் மக்களுக்கு மாற்று தலைமை தேவை என்பதை தற்போதைய நிலைமை இட்டுச்செல்கின்றது. எதிர்காலத்திலே தமிழ் மக்களுக்கான புதிய தலைமை தமிழ் மக்களும் ஏனைய கட்சிகளையும் இணைத்து உருவாக்க வேண்டிய பாரிய கடமை அனைவருககும் இருக்கின்றது என ஆனந்தன் எம்.பி தனது உரையில் குறிப்பிட்டார். (செ-250)

# விக்னேஸ்வரனுக்கு எதிரான சதியே நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடகம்

## ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆயுத வழிப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்பு ஜனநாயக வழியில் அடுத்த கட்டத்திற்கு தமிழர்களின் போராட்டத்தை கொண்டு செல்லுவதற்கு ஒருதலைவர் தேவைப்படுகிறார். அந்தத் தலைவர் விக்னேஸ்வரனாக அமைந்துவிடக் கூடாது. அவ்வாறு அமைந்துவிட்டால் அது அரசாங்கத்திற்கும் பேரினவாதிகளுக்கும் உள்ளூர் ஆட்சியாளர்களுக்கும் பாதிப்பாக அமைந்து விடும் என்பதனாலேயே நம்பிக்கையில்லா பிரேரணை என்ற நாடகம் அரங்கேற்றப்பட்டது என வடக்கு மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அவரது வாசஸ்தலத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையில் தற்போது இடம்பெற்றிருக்கக்கூடிய குழப்பமான சூழ்நிலையானது வெறுமனே ஊழல் நிதி மோசடி போன்ற குற்றச்சாட்டுக்குள் மாத்திரம் சுருக்கி விடப்பட்டுள்ளது.ஆனால் உண்மை என்னவெனில் இதன் பின்னணி வேறு.

இந்நிலையில் இப்பிரச்சினையின் மையமாக நானும் வடக்கு முதலமைச்சரும் இருப்பதால் இது தொடர்பில் தெளிவு படுத்த வேண்டிய கடப்பாடு எனக் குள்ளது. முதல மைச்சருக்கு எதிராக நம்பிக்கை யில்லாப் பிரேரணையானது வட க்கு மாகாண சபை யின் உறுப்பினர் கள் சிலரால் ஆளு நரிடம் கையளிக்கப்பட்டமை தொடர் பாக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பத்திரிகை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். ஊழல் பணமோசடி மற்றும் இலஞ் சத்திற்கு எதிரான தமது தீவிரமான செயற்பாடாகவே முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்ட தாக அவரது அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இதனடிப்படையில் ஊழல் இலஞ்சம் மற்றும் நிதி மோசடி எனக் கூறிக் கொண்டாலும் உண்மையில் முதலமைச்சருக்கு எதிராக அரசியல் ரீதியாக நீண்ட காலமாக திட்டமிடப்பட்டு அவரை அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒன்றே தவிர இலஞ்ச ஊழல் பணமோசடிக் குற்றச்சாட்டுடன் தொடர்புபட்டதல்ல. அவர் ஒரு சட்ட வல்லுநர். இவ்வாறான நிலையில் அவருக்கு தெரியாதது இல்லை.

எனவே அவர் பொய் உரைத்துள்ளார். விசாரணை அறிக்கையானது வெளிவந்த பிற்பாடு முதலமைச்சர் தனக்கு நெருக்க மானவர்களை காப்பாற்றவேண்டும் என் பதற்காக அவர் அவ் அறிக்கையை மறைத் தார் என்ற குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டது. ஆனால் இவ் அறிக்கை முதல மைச்சருக்கு கையளிக்கப்பட பிற்பாடு நானும் முதலமைச்சரும் இது விடயமாக எதுவும் பேசியிருக்கவில்லை.

வெளியிடப்பட்ட விசாரணை அறிக்கையில் எந்தவெரு இடத்திலும் வடக்கு விவசாய அமைச்சர் ஊழல் மோசடி செய்தார் என்றோ இலஞ்சம் வாங்கினார் என்றோ குறிப்பிடப்படவில்லை. குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் ஒரு வருடங்களுக்கு முன்பு நன்கு திட்டமிடப்பட்டு ஆதாரமில்லாமல் சபையில் கொண்டு வரப்பட்டது.

இப் பிரேரணையான்து வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் ஒருவரின் ஊடாக கொண்டுவர முயற்சிக்கப்பட்டபோதும் அவ் உறுப்பினர் அதன் உண்மை நோக்கம் அறிந்து அதனைத் தவிர்த்திருந்தார்.

இதன் பின்னர் வேறு ஒரு உறுப்பி னர் ஊடாக குற் றச்சாட்டு முன்வைக் கப்பட்டது. இவ் அறிக்கையில் தெளி வாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதிக் குற்றச்சாட்டு இலஞ் சம் மோசடி எதுவும் நிகழ்ந்ததற்கான ஆதாரம் எதுவும் இல்லை என குறிப் பிட்டதன் பின்னரும் நிதிக் குற்றச்சாட்டு நிரூபக்கப்பட்ட அமை ச்சர் என என்னை பாராளுமன்ற உறுப் பினர் சுமந்திரன் குறிப்பிட்டதானது அவர் பொய் உரைத்த மையை தெளிவுபடுத்துவதுடன் அவரது சட்ட நீதியை கேள்விக்கும் உள்ளாக்கி யுள்ளது.

என் மீதான குற்றச்சாட்டு விசாரணை அறிக்கையில் முடிவுரையில் நிரூபிக்கப்படாத ஆதாரமில்லாத குற்றச்சாட்டுக்களுக்கு அமைச்சர் பதவி விலக வேண்டும் என பரிந்துரை செய்துள்ளார்கள். இது தொடர்பில், இவ் விசாரணைக் குழுவானது ஏதோ ஒன்றுக்கு சோரம்போன விசாரணையாளர்களாகவே இவர்கள் இருந்துள்ளார்கள் என நான் பதிவு செய்கிறேன்.

மாறாக என் மீதான நிதிமோசடியை அவர்கள் நிரூபித்திருந்தால் அவர்களது தீர்ப்பை நான் ஏற்றுக் கொண்டிருப்பேன். என்னைப் பொறுத்த வரையில் இவ் விசாரணை அறிக்கையானது நூற்றுக்கு நூறு வீதம் ஏற்கெனவே திட்டமிடப்பட்டு ஓர் நிகழ்ச்சி நிரலின் அடிப் படையில் முடிவை எடுத்து கொண்டு ஆதாரங்களை தேடியுள்ளார்கள்.

இவ் ஆதாரங்கள் கிடைக்காத நிலையில் இலஞ்சம் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரங்கள் இல்லை என்பதையே காரணமாக வைத்துக் கொண்டு இத் தீர்ப்பை எழுதியிருக்கிறார்கள்.

எதிர்காலத்தில் விவசாய அமைச்சர் நிதிக் குற்றச்சாட்டுக்களில் நிரூபிக்கப்பட்டவர் என செய்திகள் வெளியாகுமாக இருந்தால் அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் இவர்கள் மீது மாத்திரமன்றி இவ் விசாரணை அறிக்கையின் உண்மைத் தன்மை தொடர்பில் நீதிமன்றம் செல்லவுள்ளேன்.இது என்னால் தவிர்க்கமுடியாத ஒன்று. நான் சுத்தவாளி என நிரூபிக்க வேண்டும் என்பதற்காக நீதிமன்றம் செல்லவேண்டியதில்லை. எனது மனச்சாட்சிக்கு என்னை ஆதரித்தவர்களுக்கு என் பின்னால் உள்ளவர்களுக்கு நான் யார் என்று தெரியும். ஆனால் நான் நீதிமன்றம் செல்வது திணைக்களம் சார்ந்த வடக்கு மாகாணத்தின் நன்மைக்காகவே இவ் விசாரணை அறிக்கயின் உண்மைத் தன்மை தொடர்பில் நீதிமன்றம் செல்ல வுள்ளேன.இவர்கள் கொள்கை ரீதியான சில முடிவுகளை பிழை எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

விசாரணையாளர்கள் ஏனோதானோ என எழுதியுள்ள இவ் அறிக்கை பொய் என்பதை சாதாரண மாகாணசபை உறுப்பினரான சாதாரண பொதுமகனாக நீதிமன்றம் செல்லவேண்டிய தேவை எழுந்துள்ளது. எதிர்காலத்தில் இப் பிழையான தீர்ப்பின் மூலம் வடக்கு மாகாணத்திற்கு ஏற்படக்கூடிய நன்மைகள் பாதிப்படையக் கூடாது என்பதற்காகவே நான் நீதிமன்றம் செல்லவுள்ளேனே தவிர மீண்டும் அமைச்சுப் பொறுப்பை ஏற்பதற்காக அல்ல. விசாரணையாளர்கள் ஐங்கரநேசன் தனக்கு அதிகாரம் இல்லாத விடயங்களில் தலையிடுவதாகக் குற்றம் சாட்டியுள்ளார். உண்மையில் சுற்றுநிருபங்களுக்கு கட்டுப்பட்டு இவ் ஆட்சி நடைபெறு


23ஆம் பக்கம் பார்க்க....

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை**
**பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்**
**மூாதகல்**

## ஆதனப் பெயர் மாற்ற அறிவித்தல்

**வட்டாரம்:- 06**
**உத்தேச ஆதன இல: 14A**
**வீதி: வாய்க்கால் ஒழுங்கை**
**கிராமசேவையாளர் பிரிவு: J/152**

வட்டாரம் 06, வாய்க்கால் ஒழுங்கை, உத்தேச ஆதன இல. 14A இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்கு (தற்போது தென்மேற்கு) பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாதகல் இறை **"வேப்பொல்லையும் மறுபிரிவும்"** என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குளி 4.07 கொண்ட இவ்வாதனம் மாதகல் பிரதான வீதியைச் சேர்ந்த ஸ்ரனிஸ்லாஸ் மஸ்கிரிஞஸ் கைம்பெண் திரேசம்மா ஆகிய இவர்களால் மாதகல் கனால் வீதியைச் சேர்ந்த கந்தையா விஸ்வலிங்கம் பெண் மில்கிரட் திலகவதி அவர்களுக்கு நன்கொடை உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திருமதி C.T.யேசுதாசன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 32ம் இலக்க 30.10.2004ம் திகதிய நன்கொடை உறுதி மூலம் தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு.A. சந்தியாப்பிள்ளை அவர்களால் வரையப்பட்ட 415ம் இலக்க 01.03.1980ம் திகதிய நில அளவைப்படத்தின் Lot 06இன் பிரகாரம் இவ்வாதனமானது **"வேப்பொல்லையும் மறுபிரிவும்"** நிலப்பரப்பு 01 குளி 4.07 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கந்தையா விஸ்வலிங்கம் பெண் மில்கிரட் திலகவதி எனும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.




**செயலாளர்**
**வலி.தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்**
(9494)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கை தமிழ் மக்கள் உரிமை கோர முடியாது

## அமைச்சர் சம்பிக்க எதிர்ப்பு

(கொழும்பு)

வடக்கு தமிழ் மக்களின் பூர்வீக நிலம் அல்ல. சிங்கள, முஸ்லிம் மக்களும் வடக்கில் தைரியமாக வாழ முடியும். ஆகவே வடக்கை தமிழ் மக்கள் மட்டும் உரிமை கோர முடியாது என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.



சிங்கள பௌத்த இனவாதத்தை கட்டுப்படுத்த முன்னர் வடக்கில் தமிழர்களின் இனவாத செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமய அமைப்பின் செய்தியாளர் சந்திப்பு நேற்று கொழும்பிலுள்ள அக்கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## முஸ்லிம்கள் மீது தொடரும் தாக்குதல்

## கனடாவாழ் இலங்கை முஸ்லிம்கள் அந்நாட்டுப் பிரதமருக்குக் கடிதம்

கனடா வாழ் இலங்கை முஸ்லிம்கள் அந்நாட்டு பிரதமருக்கு கடிதம் ஒன்றை எழுதியனுப்பி வைத்துள்ளனர். இலங்கையில் முஸ்லிம்களை இலக்கு வைத்து தாக்குதல்கள் நடத்தப்படுவதாகக் குற்றம் சுமத்தி இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் தலையீடு செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் வாழ்ந்து வரும் சிறுபான்மையின மக்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான தாக்குதல்களை நடத்துவோருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்குமாறு கனேடிய பிரதமர் ஜஸ்டின் கோரியுள்ளனர்.

கடும்போக்குவாத பௌத்த பிக்குகள் மற்றும் சில குழுக்கள் இவ்வாறு தாக்குதல்களை நடத்தி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளனர். முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவர்களின் மதவழிபாட்டுத் தலங்கள், வர்த்தக நிலையங்கள் வீடுகள் உள்ளிட்டவற்றை இலக்கு வைத்து தாக்குதல்கள் நடத்தப்படுவதாகத் தெரிவித்துள்ளனர். (இ-7)

## விமலுக்கெதிரான வழக்கு குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனை

அரச வாகனங்களை அதிகார துஷ்பிரயோகம் செய்தமையால் 9 கோடி ரூபாவுக்கும் அதிக நட்டத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில், முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட விசாரணை ஆவணங்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேற்று குறித்த வழக்கு கொழும்பு - கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இந்த விடயம் தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக, பொலிஸ் நிதி குற்ற விசாரணைப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனையடுத்து, அடுத்த கட்ட வழக்கு விசாரணைகளை ஒக்டோபர் 23ஆம் திகதி மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நீதவான் தீர்மானித்துள்ளார்.

அன்றையதினம் சம்பந்தப்பட்ட விசாரணை அறிக்கை தொடர்பாக சட்டமா அதிபரால் வழங்கப்பட்ட ஆலோசனைகளை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

## இருதய நோயுடைய குழந்தைகளுக்கான வைத்தியசாலை அமைக்க நிதிசேகரிப்பு



படங்கள்:-மகாலிங்கம்

இருதய நோயுடைய குழந்தைகளுக்கான வைத்தியசாலை ஒன்றினை காலியில் அமைப்பதற்காக நிதிசேகரிக்கும் முகமாக தெய்வேந்திர முனையிலிருந்து ஆரம்பமான துவிச்சக்கரவண்டிப்பவனி நேற்றுதிங்கட்கிழமை பருத்தித்துறை முனையினை வந்தடைந்தது. சிறுவர்களிற்கான இதயம் சம்பந்தமான சிகிச்சையினை மேற்கொள்வதற்காக நவீன சத்திரசிகிச்சைச் கூடம், நவீன ஆய்வு கூட வசதிகள், பிறந்த குழந்தைகளிற்கான சிகிச்சை நிலையம் என்பவற்றை உள்ளடக்கி பத்து மாடிக்கட்டடம் ஒன்று காலியில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதிசேகரிப்புக்காக லண்டனைச் சேர்ந்த இருதய சத்திரசிகிச்சை நிபுணர்களும் அவர்களது நண்பர்களும் இணைந்த காலி தெய்வேந்திர முனையில் இருந்து 700 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள பருத்தித்துறை முனையை நோக்கிப் பயணித்து பருத்தித்துறை கொடிகம்பத்தை வந்தடைந்தனர்.

பருத்தித்துறை நகரில் இருந்து அவர்களது பவனியுடன் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரிமாவணவர்களும் இணைந்து கொண்டனர். அவர்கள் பருத்தித்துறையினை வந்தடைந்த போது யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலை குழந்தைகள் இருதய சத்திர சிகிச்சை நிபுணர் ரெஜினோல்ட் ரகுநாதன், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி ஜி.செந்துரன் உள்ளிட்ட வைத்திய நிபுணர்கள் அவர்களை வரவேற்றனர். இப்பவனிக்கான பாதுகாப்பினை அப்பகுதிக்குப் பொறுப்பான பொலிஸ் நிலையங்கள்வழங்கியிருந்தன.இ-60)

## கீதா;மனு; விசாரணை; ஐந்து பேர் கொண்ட நீதவான்குழு நியமனம்

நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்கவால் தாக்கல்செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்வதற்கு ஐந்து பேர் கொண்ட நீதவான் குழு அமைக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ப்ரிய சாத் தலைமையில் இந்த குழு குறித்த மனுவை விசாரணைக்கு உட்படுத்த உள்ளனர்.

இதன்படி கீதாவின் மனு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரட்டை பிரஜாவுரிமையை கொண்டுள்ள கீதா நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்க தகுதியற்றவர் என நீதிபதி அறிவித்ததுடன், நாடாளுமன்ற கூட்டத்தொடர்களில் பங்கேற்க அவருக்காக செலவு செய்யப்பட்ட தொகையை மீள அறவிடவும் உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்த தீர்ப்புக்கு எதிராக கீதா குமாரசிங்க மேன்முறையீட்டு மனுவை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்தார்.

குறித்த மனுவை விசாரிப்பதற்காகவே இந்த ஐந்து பேர் கொண்ட நீதவான் குழு அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## கொழும்பு உள்ளிட்ட

## பல பகுதிகளில் தேடியும் ஞானசாரர் சிக்கவில்லை

கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 650 இற்கும் அதிகமான குற்றவாளிகள் கைது செய்யப்பட்ட போதும், பொது பல சேனாவின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் இன்னமும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளிகளைத் தேடி நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு சுமார் நான்கு மணிநேரம் மேற்படி தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மிகத்தீவிரமாகத் தேடப்பட்டுவரும் நபர்களின் பட்டியலில் ஞானசார தேரரின் பெயரும் உள்ளடக்கப்பட்டிருப்பதால் மேற்படி தேடுதல் நடவடிக்கைகளில் அவரைத் தேடியும், அவர் தொடர்பான தகவல்கள் எதனையும் பெற முடியவில்லையென குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசப்பற்று ஏன் கிரிக்கெட்டை சுற்றியே உள்ளது என்பது புரியவில்லை என மோர்த்தசா ஆதங்கம்




தேசப்பற்று ஏன் கிரிக்கெட்டை சுற்றியே உள்ளது என்பது புரியவில்லை என்று பங்களாதேஷ் அணித் தலைவர் மோர்த்தசா கூறியுள்ளார்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் தலைவர் மோர்த்தசா. இவர் தலைமையிலான பங்களாதேஷ் அணி ஐ.சி.சி. சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடரில் அரையிறுதிக்கு முதன் முறையாக முன்னேறியது. ஆனால், இந்தியாவிடம் தோல்வியடைந்து இறுதி வாய்ப்பை இழந்தது.

சமீப காலமாக இந்தியா - பாகிஸ்தான், பாகிஸ்தான் - பங்களாதேஷ், இந்தியா - பங்களாதேஷ் கிரிக்கெட் போட்டியின்போது ரசிகரகள் அதிக எதிர்பார்ப்புடன் உள்ளனர். தங்கள அணி வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். அதற்குமேல் கிரிக்கெட்டை தேசப்பற்றாக நினைக்கிறார்கள்.

இந்நிலையில் தேசப்பற்று ஏன் கிரிக்கெட்டை சுற்றியே உள்ளது என்பது எனக்கு புரியவில்லை என்று பங்களாதேஷ் அணித் தலைவர் மோர்த்தசா கூறியுள்ளார்.

இதுகுறித்து மோர்த்தசா கூறுகையில் நான் ஒரு கிரிக்கெட் வீரர். ஆனால், என்னால் உயிரை காப்பாற்ற முடியுமா? டொக்டரால்தான் உயிரை காப்பாற்ற முடியும். ஆனால், நாட்டின் சிறந்த டொக்டரை யாரும் பாராட்டுவதில்லை. டொக்டர்களை சுற்றி நம்பிக்கையை உருவாக்க வேண்டும். நிறைய உயிர்களை காப்பாற்றுவார்கள். அவர்கள்தான் சூப்பர் ஸ்டார்கள்.

தொழிலாளர்கள்தான் சூப்பர் ஸ்டார்கள். அவர்கள்தான் நாட்டை உருவாக்குகிறார்கள். கிரிக்கெட்டை பயன்படுத்தி எதை கட்டுகிறீர்கள்? கிரிக்கெட்டை பயன்படுத்தி ஒரு செங்கல் உருவாக்க முடியுமா? கிரிக்கெட் மைதானத்தால் நெற்கதிர்களை வளர்க்க முடியுமா?.

செங்கலை யார் உருவாக்குகிறார்களோ, தொழிற்சாலைகளை உருவாக்குகிறார்களோ, வயல்வெளியில் கதிர்களை வளர்க்கிறார்களோ, அவர்களே உண்மையான ஸ்டார்கள்.

ஒரு நடிகர் அல்லது பாடகர் சம்பளம் வாங்கிக் கொண்டு வேலை செய்வதுபோல் நாங்கள் சம்பளம் வாங்கிக் கொண்டு விளையாடுகிறோம். இதைவிட மேலும் ஒன்றுமில்லை.

சிலர் தேசப்பற்று, தேசப்பற்று என்று கிரிக்கெட்டை சுற்றியே சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அனைவரும் ஒருநாள் வாழைப்பழத்தோலை ரோட்டில் வசாமலும் அல்லது தெருக்களில் துப்பாமலும், போக்குவரத்து விதியை மீறாமலும் இருந்தால், நாடு கட்டாயம் மாற்றமடையும்.

கிரிக்கெட்டால் உங்களுடைய சக்தியை வீணாக்கிவிடக்கூடாது. நேர்மையான வேலைக்காக பயன்படுத்த வேண்டும். மக்களின் தேசப்பற்று வரையறைய்யை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

# ஹர்திக் பாண்டியாவிற்காக ஜடேஜா விட்டுக் கொடுத்திருக்க வேண்டும்

## சங்கக்கார கருத்து



பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் ஹர்திக் பாண்டியாவிற்காக ஜடேஜா ரன்அவுட் ஆகி, அவரை விளையாட விட்டிருக்க வேண்டும் என சங்கக்கார கூறியுள்ளார்.

சம்பியன்ஸ் டிராபி இறுதிப் போட்டியில் நேற்று முன்தினம் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதின. 339 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா களம் இறங்கியது. முன்னணி வீரர்கள் சீட்டுக்கட்டு போல் சரிய இந்தியா 72 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 6 விக்கெட்டை இழந்து திணறியது.

7-வது விக்கெட்டுக்கு ஹர்திக் பாண்டியா உடன் ஜடேஜா ஜோடி சேர்ந்தார். ஹர்திக் பாண்டியா அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 43 பந்தில் 4 பவுண்டரி, 6 சிக்சர்களுடன் 76 ஓட்டங்கள் குவித்து துரதிஷ்டவசமாக ரன்அவுட் ஆனார்.

ஜடேஜா பந்தை ஆஃப் சைடு அடித்தார்.




எதிர்முனையில் இருந்த ஹர்திக் பாண்டியா விரைவாக ஓடி வந்துவிட்டார். இந்த குழப்பத்தில் பாண்டியா ஆட்டமிழந்தார். இந்திய வீரர்கள் யாரும் இதை விரும்பவில்லை. மேலும், ஜடேஜா அடுத்த ஓவரில் ஆட்டம் இழந்தார்.

இதுகுறித்து இலங்கை அணியின் முன்னாள் ஜாம்பவான் கூறுகையில் இந்த ரன்அவுட் இந்தியா விரும்பவில்லை. ஜடேஜா இந்த ரனஅவுட்டில் ஒரு வீரர். அவர் ஹர்திக் பாண்டியாவிற்காக தனது விக்கெட்டை விட்டுக் கொடுத்திருக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.



# இந்திய அணியின் படுதோல்வி மனமுடைந்த ரசிகர் தற்கொலை

லண்டன் ஓவல் மைதானத்தில் நடந்த சம்பியன்ஸ் கிண்ண இறுதிப் போட்டியில் இந்திய அணியை 180 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி பாகிஸ்தான் அணி முதன் முறையாக கிண்ணத்தை வென்றது.

இந்திய அணி தோல்வியடைந்ததால், பங்களாதேஷத்தைச் சேர்ந்த இந்திய அணியின் ரசிகர் ஒருவர் ரயில் முன்பாய்ந்து தறகொலை செய்துகொண்டுள்ளார்.

பங்களாதேஷ் ஜமல்பூர் நகரைச் சேர்ந்தவர் 25 வயதான பிட்யூத். இந்திய அணியின் தீவிர ரசிகரான இவரால், சம்பியன்ஸ் கிண்ண இறுதிப் போட்டியில் பாகிஸ்தானிடம் தோறறதை ஏற்க முடியவில்லை.

இந்திய அணியின் தோல்வியால் மனமுடைந்து காணப்பட்ட பிட்யூத், ஓடும் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்துகொண டதாக ரயில்வே பாதுகாப்புப் படையைச் சேர்ந்த நசிருல் இஸ்லாம் தெரிவித்தார்.

# தலை நிமிர்ந்தே தாயகம் திரும்புகிறோம் - ஹோலி




பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் தந்த அழுத்தமே இந்திய தோல்விக்கு முக்கியக் காரணம் என அணித் தலைவர் விராட் ஹோலி கூறியுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை நடந்த சம்பியன்ஸ் கோப்பை இறுதிப் போட்டியில் இந்திய அணி பாகிஸ்தான் அணியிடம் 180 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது. முதலில் ஆடிய பாக். அணி 338 ஓட்டங்கள் அடிக்க, இலக்கை எட்ட முடியாமல் இந்திய அணி 158 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

33 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தத்தளித்த இந்திய அணி மேற்கொண்டு பாகிஸ்தான் பந்துவீச்சு தந்த அழுத்தத்தை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தது. பாகிஸ்தானின் பந்துவீச்சு எங்களை அது போன்ற தவறான ஷாட்களை ஆட வைத்தது, அப்படியொரு அழுத்தம் உருவாக்கியது என ஹோலி கூறியுள்ளார்.

மேலும் இது குறித்து பேசுகையில், துவக்க வீரர் ஃபகர் சமன் போன்ற வீரர்கள் போட்டியில் இப்படி ஆடும்போது அவர்களைத் தடுப்பது முகவும் கடினமாக ஆகிவிடும். அவரது 80 சதவத ஷாட்கள் அதிக ரிஸ்க் ஆனவை. ஆனால் அவை வீண் போகவில்லை.

சிலசமயங்களில் இது போன்ற சூழலில் ஒரு பந்துவீச்சாளராக, ஒரு அணித் தலைவனாக, இன்று அவர் எதையும் சமாளிக்கும் வல்லமையுடன் உள்ளார் என்பதை ஒப்புக் கொள்ளவேண்டும்.

நாங்கள் அவர்களை தவறாக ஆட வைக்க முயற்சித்தோம் ஆனால் எங்கள் உத்தி எதுவும் கைகொடுக்கவில்லை.

என்ன இருந்தாலும் நாங்கள் தலை நிமிரந்தே தாயகம் திரும்புகிறோம். இறுதிப் போட்டி வரை முன்னேற உழைத்த அனைவருக்கும் அந்த பெருமை சேரும். இறுதிப் போட்டியில் எல்லா விதத்திலும் எங்களை விட அவர்கள் சிறப்பாக ஆடினார்கள். கடைசியில் நாம் கண்டிப்பாக எதிரணியின் திறமையை ஏற்றுக்கொண்டு மதிக்கவேண்டும்.

இவ்வாறு ஹோலி பேசியுள்ளார்.

இந்திய அணி அடுத்து மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் அணித் தலைவர் சப்ராஸின் குழந்தையுடன் தோனி



ஐ.சி.சி சம்பியன்ஸ் டிராபி தொடரின் இறுதி ஆட்டத்தில் நேற்று இந்தியா - பாகிஸ்தான் அணிகள் லண்டன் ஓவல் மைதானத்தில் மோதின.

ஆக்ரோஷமான இந்த ஆட்டத்தைக் கோடிக்கணக்கான ரசிகர்கள் மனப்போராட்டத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிலையில் மிஸ்டர் கூல் என வர்ணிக்கப்படும் இந்திய அணியின் நட்சத்திர வீரரான மகேந்திர சிங் தோனி போட்டி தொடங்கும் முன்னதாகவே இரு நாட்டு மனங்களையும் வென்றெடுத்துள்ளார்.

பாகிஸ்தான் அணியின் தலைவர் சப்ராஸ அகமதுவின் குழந்தையை, தோனி தன் கையில தூக்கி வைத்தபடி நிற்கும் புகைப்படம் ஒன்று நேற்று முன்தினம் சமூக வலைதளங்களில் வெளியானது.

அடுத்த நிமிடமே இது வைரல் ஆனது. விளையாட்டு என்பது எல்லைகளுக்கு அப்பாற்பட்டது. இதை உணர்த்தும் விதமாகவே சப்ராஸின் மகன் அப்துல்லாவை, தோனி கைகளில் ஏந்தியபடியான படத்தைப் பகிர்ந்துள்ளதாக சமூக வலை தளங்களில் பாராட்டுகள் குவிந்த வண்ணம் உள்ளன. அப்துல்லாவுடன தோனி இருக்கும் படம் பாகிஸ்தான் நாட்டிலும் வைரலாக பரவி வருகிறது.

# இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் முதல் இரண்டு போட்டிகளின் அணி அறிவிப்பு

இந்தியாவிற்கு எதிரான முதல் இரண்டு ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா மேற்கிந்தியத் தீவுகள் சென்று ஐந்து ஒருநாள் போட்டி மற்றும் ஒரேயொரு இருபது - 20 கிரிக்கெட் போட்டி கொண்ட தொடரில் விளையாட இருக்கிறது. இதற்கான இந்திய அணி ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுளளது. இந்நிலையில் முதல் இரண்டு போட்டிக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கு எதிராக முதல் இரண்டு போட்டிகளில் விளையாடும் மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் விவரம்,

ஜேசன் ஹோல்டர் (அணித் தலைவர்), தேவேந்திர பிஷூ, ஜோனாதன் கார்ட்டர், ராஸ்டன் சேஸ், மிகுயெல் கம்மின்ஸ், ஷாய் ஹோப் (விக்கெட் கீப்பர்), அல்சாரி ஜோசப்,




எவின் லெவிஸ், ஜேசன் மொகமது, அஸ்லே நர்ஸ், பொவேல், ரோவ்மன் பொவேல், கேஸ்ரிக் வில்லியம்ஸ்.

காயம் காரணமாக வேகப்பந்து வீச்சாளர் கேப்ரியல் அணியில் இடம்பெறவில்லை.

இந்திய அணி வீரர்கள் விவரம்,

விராட் ஹோலி (அணித் தலைவர்), ஷிகர் தவான், ரிஷப் பந்த், ரகானே, தோனி, யுவராஜ் சிங், கேதர் ஜாதவ், ஹர்திக் பாண்டியா, அஸ்வின், ஜடேஜா, மொகமது ஷமி, உமேஷ யாதவ், புவனேஸ்வர் குமார், குல்தீப் யாதவ், தினேஷ் கார்த்திக்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தென்மராட்சி சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நிறுவப்பட்ட திருவள்ளுவர் திருவுருச் சிலை திறப்பு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கலாமன்றத் தலைவர் க. மோகன ராஜலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனால் சிலை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. (படங்கள்:-விஜயவாசன்)

# பாதுகாப்பற்ற பகுதியில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்துவோம்

## காணி அமைச்சர் கயந்த தெரிவிப்பு



பாதுகாப்பற்ற இடங்களில் வசித்து வருவோருக்கு பாதுகாப்பான இடங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

இதற்குப் பொருத்தமான காணிகளை இனங்காணும் பொறுப்பு மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர், இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சிறிகொத்தாவ கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

மேலும், அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களது வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்காக அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியிருப்பதாகவும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

அரசாங்க அமைச்சுக்களுக்கான பொறுப்புக்கள் பற்றி பேசும் சிலர் கடந்த் அரசாங்க காலத்தில் மௌனம் சாதித்ததாக அவர் சுட்டிக் காட்டினார். எந்தவொரு பொறுப்பும் வழங்கப்படாத பல சிரேஷ்ட அமைச்சர்கள் அந்த ஆட்சியில் இருந்ததை அவர்கள் மறந்திருப்பதாகவும் அமைச்சர் கயந்த கருணாதிலக இதன்போது தெரிவித்தார். (இ-7)

# பசுவும் கன்றும் திருட்டு

(கரண்வாய்)

மேய்ச்சலுக்கு விடப்பட்ட பசு ஒன்று மாலையில் காணாமல் போக இரவு கன்றையும் திருடிச் சென்ற சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

கரவெட்டி அத்துளு அம்மன் கோவிலடிப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கடந்த சனிக்கிழமை பசு ஒன்றினை மேய்ச்சலுக்கு விட்டுள்ளார். மாலையில் வீடு திரும்ப வேண்டிய மாடு வீடு திரும்பவில்லை. இதனால் மனமுடைந்திருந்த அவருக்கு மேலும் அதிர்ச்சி காத்திருந்தது.

அந்தப் பசுவின் கன்று வீட்டில் கட்டியிருந்த நிலையில் அன்று இரவே அதுவும் திருடப்பட்டுள்ளது. இது தொடர்பில் மாட்டின் உரிமையாளர் நெல்லியடிப் பொலிஸில் முறையிட்டுள்ளார். (இ-60)

# விழிப்புணர்வு ஊர்வலம்

யாழ். மருதங்கேணி பிரதேச செயலகமும் சமூக அபிவிருத்தி பிரிவும் இணைந்து நடத்தும் சர்வதேச புகைத்தல் மற்றும் போதைப் பொருள் விழிப்புணர்வு ஊர்வலம் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு வடமராட்சி கிழக்கு உடுத்துறையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு மருதங்கேணி பிரதேச செயலகத்தை சென்றடையுமென விழா ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (இ-5-19)

அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்
நீங்கள் அறிந்த
◆செய்திகள்
◆புகைப்படங்கள்
◆நிகழ்வுகள்
◆பேசும் படங்கள்
போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.
VIBER செயலி இல
076 636 3378
Viber

# ஐ.நா.பிரதிநிதி அறிக்கையில் துல்லியமான விடயங்கள் உள்ளடக்கப்படவில்லையாம்

## நீதியமைச்சர் கூறுகிறார்



ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட பிரதிநிதி மொனிகா பின்டோவின் அறிக்கையில் துல்லியமான விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அண்மையில் மொனிகா பின்டோ இலங்கை தொடர்பிலான அறிக்கை ஒன்றை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பித்திருந்தார்.

எனினும் இந்த அறிக்கையானது தன்னார்வ தொண்டு நிறுவனமொன்றின் தேவைக்கு அமைய தயாரிக்கப்பட்டது என குற்றம் சுமத்தியுள்ள நீதியமைச்சர் இந்த விடயம் குறித்து பாராளுமன்றில் விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அநுராதபுரம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட நிகழ்வு ஒனறில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.(இ-7)

# இராசி பலன்

20.06.2017
(ஆனி 06, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
ஏகாதசி மாலை 6.45 மணிவரை
அச்சுவினி பிற்பகல் 12.16 மணிவரை
சுபநேரம் 10.24- 11.54 மணிவரை
இராகுகாலம் 2.54- 4.24 மணிவரை
ஏகாதசி விரதம்
உலக அக்திகள் தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சுக் சந் | | செவ்,புத சூரி |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அத்தம் -சித்திரை | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மீனம்:** சுப காரியப் பேச்சுகளில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், எதிர்பாராத தனவரவுகள் இடம்பெறலாம்.

**மேடம்:** தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், பெரியோர் ஆதரவுண்டு.

**இடபம்:** விருப்பங்கள் நிறைவேற கண்ணனை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், பங்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**மிதுனம்:** எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், உடன்பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டும் நாள்.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், செய்தொழில் மேன்மையுண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** விழாக்களில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**சிம்மம்:** தொழிலில் ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவகள் மனம் மாறுவர், வருங்காலத்திற்கான திட்டமொன்றை தீட்டுவீர்கள், பேச்சில் இனிமை தென்படும்.

**தனுசு:** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்:** பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், மனக்குழப்பம் அகலும், திட்டமிட்ட காரியங்கள் கைகூடும், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**துலாம்:** எதிர்பார்ப்புக்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, சுற்றத்தினரின் வருகையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வடமராட்சி கிழக்கு யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்திலுள்ள வறிய மாணவர்களின் பாடசாலைக்கான போக்குவரத்தைதைக் கருத்தில் கொண்டு புலம்பெயர் நாட்டிலுள்ள உறவுகளால் எட்டு துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. இத் துவிச்சக்கரவண்டிகள் மாணவர்களுக்கு வழங்கும் நிகழ்வு பாடசாலையின் கலையரங்கில் கடந்த சனிக்கிழமை பாடசாலை அதிபர் த.செல்லக்குமார் தலைமையில் இடம்பெற்றது. (படங்கள்:- பொற்பதி செய்தியாளர்)

# வீதியைப் புனரமைக்குமாறு மாதகல் மக்கள் கோரிக்கை

(கட்டுடை)

மாதகல் சந்தியிலிருந்து மாதகல் வடக்கு காஞ்சிபுர பகுதி வரையான சுமார் 3.5 கிலோ மீற்றர் நீளமுடைய வீதி நீண்டகாலமாக செப்பனிடப் படாமையால் குன்றும் குழியு மாகக்காணப்படுகின்றது.



மேலும் மழைகாலத்தில் இவ் வீதியில் மழை நீ தேங்கி நிற்பதால் விபத்துக்களும் ஏற் படுகின்றன எனபிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் உரிய நட வடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(இ-5-102)




# கோப்பாய் வாதரவத்தையில் ஆட்டுத் திருட்டு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வாதரவத்தை வீரவாணிக் கிராமத்தில் பகல் வேளைகளில் மேய்ச்சலுக்காக விடப்படும் ஆடுகள் கடத்திச் செல்லப்படுவதாககிராம மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேற்படி கிராம மக்களின் வாழ்வாதாரமாகக் காணப் படும் ஆடுகளே இவ்வாறு கடத்திச் செல்லப்படுகின்றன. இதனால் அப்பகுதியில் ஆடு வளர்போர் பகல் வேளைகளில் ஆடுகளை மேய்ச்ச லுக்கு விட பெரும் அச்சமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பந் தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-101)

# 'இதயக்கனல்' நூல் வெளியீட்டு விழா

கவிஞர் தா.நாகேஸ்வர னின் ''இதயக்கனல்'' நூல் வெளியீட்டு விழா நாளை மறு தினம் 22 ஆம் திகதி வியா ழக்கிழமை பிற்பகல் 3 மணிய ளவில் தென்மராட்சி இலக்கிய அணி தமிழ்க் கோட்டம் கம்பன் கல்லூரி வளாகத்தின் தென்ம ராட்சி இலக்கிய அணியின் அமைப்பாளர் அ.வாசுதேவா தலைமையில் நடைபெறவுள் ளது. இக் கவிதை நூல் வெளி யீட்டுவிழாவுக்குஆசியுரையினை அகில இலங்கை கம்பன் கழ கத்தின் அமைப்பாளர் இ.ஜெய ராஜ், தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலை வர் ஆறு.திருமுருகன் ஆகி யோரும் வாழ்த்துரை யினை வலம்புரியின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவு ரையாளர் ஸ்ரீ.பிரசாந்தன், பருத் தித்துறை வடமராட்சி வடக்குப் பிரதேசசெயலர் இ.த.ஜெயசீலன் ஆகியோர்நிகழ்த்துவர். (இ-5-10)

# யாழிலுள்ள நகைக்கடைகளை பதிவு செய்தலும் புதுப்பித்தலும்

தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையை சேர்ந்த அதிகாரிகள் 4.7. 2017 (செவ்வாய்க்கிழமை) காலை 9 மணிக்கு 165, மானிப்பாய் வீதியில் அமை ந்துள்ள யாழ். வணிகர் கழக பணிமனையில் தங்களது நடமாடும் சேவை நிலைய மொன்றை நடத்தவுள்ளனர்.

எனவே யாழ். மாவட்டத் தைச் சேர்ந்த நகைக் கடை வர்த்தகர்கள் இச் சந்தர்ப்பத் தைப் பயன்படுத்தி தங்களது நகைக் கடை வர்த்தக நிலை யங்களுக்கு இதுவரை அனு மதி பெறாது விடின் தேசிய இரத்தினக்கல் ஆபரண அதி காரசபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக் கொள் கிறது. ஏற்க னவே 2016 ஆம் ஆண்டுக்கான அனும தியைப் பெற்றவர்கள் 2017 ஆம் ஆண்டிற்காக தங்க ளது அனுமதியை புதுப்பிப்ப தற்கு வசதியாக 2016 ஆம் ஆண்டில் பெற்ற அனுமதிப் பத்திரத்தின் புகைப்படப் பிரதி யுடன் விண்ணப்பிக்கலாம். இந்த நடமாடும் சேவையைப் பயன்படுத்தி நகைக் கடை வர்த்தகர்கள் வர்ண அடையாள அட்டைக்கும் விண்ணப்பிக்க முடியும். புதிதாக நகைக்க டையைப் பதிவு செய்வோர் வியாபாரச் சான்றிதழ் மூலப் பிரதி, அடையாள அட்டை பிரதி, பதிவுக் கட்டணம் ரூபா 5000/- (வரி நீங்கலாக) ஆகிய வற்றுடன் சமுகமளிக்க வேண் டும். வர்ணப் புகைப்படத்தினா லான அடையாள அட்டை யைப் பெற விரும்புவோர் மட்டும் மேலதிகமாக ரூபாய் 1173/- பணத்துடன் பாஸ் போட் அளவிலான வர்ணப் புகைப்படம் மற்றும் அடை யாள அட்டையின் மூலப் பிரதி என்பவற்றை சமர்ப்பித்தல் வேண்டும். மேலதிக விபரங் களுக்கு 021 222 8593 க்கு தொடர்பு கொள்ளலாம் என யாழ். வணிகர் கழக செயலாளர் இ. ஜனக்குமார் அறிவித்துள்ளார். (இ

# இரத்ததான முகாம்

கரவெட்டி யா/விக்னேஸ்வரக் கல்லூரியின் நூற்றாண்டை முன்னிட்டு நடத்தப்படும் இரத்ததான முகாம் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் பி.ப. 3 மணிவரை பாடசா லையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. ( இ-3-60)

# மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறு வனத்தின் 2017 ஆம் ஆண் டிற்கான முதலாம் பருவகால மீள் பரீட்சைக்கான (1st semester -2017-Repeat Exam) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவ் விண்ணப்பங்களை இன்று செவ்வாய்க்கிழமை முதல் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்பங்களை சமர்ப் பிக்க வேண்டிய இறுதித் திகதி 16.07.2017 ஆகும். எனவே அதற்கு முன் விண் ணப்பங்களை நிறுவனத்தில் பெற்றுப் பூர்த்தி செய்து நிர் வாகப் பகுதியில் வழங்கு மாறு உதவிப் பதிவாளர் யோ. ரிசாந்தன் அறிவித் துள்ளார். (இ-3)

# வலிகாமம் வடக்கு பிரதேச சபையால் மக்கள் பங்கேற்புடன் அபிவிருத்திப்பணி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிர தேச சபைக்குட்பட்ட மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டம் தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

இதனடிப்படையில் வலி காமம் வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட மல்லாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி ஆகிய பிரதேசங்களில் மக் கள் கலந்துரையாடல் நடத் தப்பட்டு அக் கிராமத்தின் தேவைகள் இனங்காணப் பட்டு அவர்களின் கருத்துக் களின் அடிப்படையில் அபி விருத்தி திட்டங்கள் முன்னுரி மைப்படுத்தப்பட்டு மக்கள் பங்கேற்புடனான அபிவி ருத்தித் திட்டம் தயாரிக்கும் வேலைத்திட்டம் மேற்கொள் ளப்பட்டு வருகின்றது.

இப் பிரதேசங்களில் கிராம உட்கட்டமைப்பு வசதி களுக்குரிய தேவைகள் இனங்காணப்பட்டு அபிவி ருத்தித் திட்டம் தயாரிக் கப்பட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (இ-5-104)

# தேரும் தீர்த்தமும்

மீசாலை வடக்கு இராமாவில் கந்தசுவாமி ஆலய மஹோற்சவம் கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமாகி திருவிழா இடம்பெற்று வருகிறது. நாளை மறுதினம் 22 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-3)

# வெற்றிபெற்றோர் இலக்கங்கள்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செய லக முதியோர் பேரவையால் நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களது இலக் கங்கள் வெளியிடப்பட்டுள் ளன.

முதலாம் பரிசு 0946, இரண்டாம் பரிசு 1069, மூன் றாம் பரிசு 1990 மற்றும் ஆறு தல் பரிசுகளாக 1469, 0324, 1323, 1835, 0871, 0177, 0985, 0097, 2477, 1057 ஆகிய இலக்கங்கள் வெற்றி பெற்றுள்ளன. இதற் கான பரிசில்கள் நாளை 21 ஆம் திகதி காலை 9 மணிக்கு சமூக சேவைப் பகுதியில் வைத்து வழங்கப்படும் என சமூக சேவை உத்தியோகத் தர் வரத பாஸ்கரன் அறிவித் துள்ளார். (இ-60)

# யாழ். மனவளக்கலையின் சர்வதேச யோகா தினம்

யாழ். மனவளக்கலை மன்ற அறக்கட்டளை ஏற் பாட்டில் சர்வதேச யோகா தினம் நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு அறி வுத் திருக்கோவிலில் இடம் பெறும். மனவளக் கலை பேராசிரியர் அருள்நிதியர் காவலர் அருள்நிதி சி.முரு கானந்தவேல் தலைமை யில் இடம்பெறும். இந் நிகழ் வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ண குமார் கலந்து கொள்வார். இந் நிகழ்வில் மனவளக் கலை பேராசிரியர் அருள் நிதி வே.பாஸ்கரன் உடற் பயிற்சியும் அதன் விளக் கமும் வழங்கவுள்ளார். (இ-3)

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

பொலிகண்டி கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி ஆலய வருடாந்த மஹோற் சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர் வரும் 7.7.2017 வெள்ளிக் கிழமை காலை 7.30 மணி க்கு தேர்த்திருவிழாவும் 8.7. 2017 சனிக்கிழமை தீர்த்தத் திருவிழா என்பன இடம் பெற வுள்ளன. (இ-7)



வேள்ட்விசன் நிறுவன அனுசரணையில் சாவகச்சேரி பிரதேச செயலக ஒழுங்குபடுத்தலில் புத்தாக்க அரங்க இயக்கத்தின் தயாரிப்பில் எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரனின் நெறியாள்கையில் உயிர்ப்பு தெருவெளி நாடக ஆற்றுகை தென்மராட்சி பிரதேசத்திற்கு [illegible] குறிச்சி , மந்துவில், கொடிகாமம் , மட்டுவில் ஆகிய இடங்களில் சுற்றுச் சூழல் விழிப்புணர்வு செயற்பாடாக ஆற்றுகை செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



வாசகர்களுக்கு அன்பு வணக்கம்!

தமிழர் தலைவிதி எப்படியாகும் என்ற தொடர் சில நாட்கள் வெளிவர முடியவில்லை.

எங்கள் வட மாகாண அரசில் ஏற்பட்ட தகிடதத்தோம் நிகழ்வு இத் தொடரை சில நாட்கள் இடைவெளிப்படுத்தி விட்டது.



எனினும் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. தமிழர் தலைவிதியை எழுதிக் கொண்டிருக்கும் போதே தமிழர் தலைவிதியை நாம் அனைவரும் தெரிந்து கொள்ள முடிந்தது.

இருந்தும் எங்கள் தமிழினம் தன் தலைவிதியை மதியால், மனத்தால்,உள்ளன்பால், உணர்வால் மாற்றியமைக்கும் என்பதை அண்மைய நிகழ்வுகள் உறுதி செய்துள்ளன.

வடக்கின் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து அதனை ஆளுநரிடம் கையளிக்கும் அளவில் தமிழரசுக் கட்சியின் இன்றைய நிலைமை உள்ளதெனில், அந்தக் கட்சிக்கும் தென்பகுதிக்கும் உள்ள தொடர்பு எவ்வாறு உள்ளதென்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

போருக்குமுன்பு தமிழினத்தை அழிப்பதற்கு ஆயுதங்களும் படையினரும் பயன்படுத்தப்பட்டன. எனினும் இந்த முறைமை போராக தமிழினத்திற்குச் செய்யும் துரோகமாக வெளியுலகில் உணரப்பட்டது.

ஆனால் இப்போது தமிழனைக்கொண்டே தமிழனை அழிப்பதென்ற தந்திரோபாயம் நடைமுறையில் உள்ளது.

தென்பகுதியில் விலை போனவர்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட பணக்கூலிக்கு கைம்மாறாக தமிழினத்தை அழிப்பதில் கடுமையாகப் பாடுபடுகின்றனர். அதிலும் அழிப்பதென்பது எங்களுக்கு உதவுவது போல செய்யப்படுகிறது.

அதாவது எங்களுக்காகப் பாடுபடுவதுபோல எங்களையே அழிக்கும் நிகழ்ச்சித்திட்டம் நடந்து கொண்டிருக்கின்றது. இதன் ஓர் உச்சகட்டம்தான் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை பதவியிலிருந்து வெளியேற்றும் திட்டமாகும்.

அதிலும் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் வரைவுகள் வெளியாக இருக்கின்ற நேரத்தில் முதலமைச்சர் விக்னேஸ்வரனை வெளியேற்றிவிட்டால், தாங்கள் நினைத்ததை எங்கள் இடுப்புகளில் செருகிவிட்டுப் போகலாம் என்பது அவர்களின் நினைப்பு.

இருந்தும் தமிழ்மக்கள் தங்கள் தலைவனாக நீதியரசர் விக்னேஸ்வரனை மானசீகமாக ஏற்றுக்கொண்டு விட்டனர்.

நம்பிக்கைக்குரிய தங்கள் தலைவனுக்கு ஆபத்து எனும் போது இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை கொதித்தெழுந்து தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

எனினும் எதிலும் விசுவாசம் இல்லாத சில பிரகிருதிகள் அதற்கும் விமர்சனம் செய்யத் தலைப்படுகின்றனர்.

இத்தகைய விமர்சனங்கள் எழுவதன் பின்னணியில்கூட, தமிழரசுக் கட்சிக்குள் இருந்து கொண்டு தமிழினத்திற்கு அநியாயம் இழைக்கும் சதிகாரர்களுடன் தொடர்புடையவர்கள் இருப்பதும் வெளிப்படை.

எது எப்படியாக இருந்தாலும் தமிழ் மக்களுக்கு ஏற்படவிருந்த மிகப்பெரியதொரு அநியாயம் தடுக்கப்பட்டுள்ளது. எவர் எந்த விமர்சனத்தைச் செய்தாலும் தமிழர்கள் நாம் மிகவும் விழிப்பாக இருந்தால் அது எங்களை, எங்கள் இனத்தைக் காப்பாற்றும் என்பது நிறுதிட்டமான உண்மை.

ஆக, தமிழ்மக்களின் இன்றைய அவசர தேவை. ஒற்றுமையும் நிதானமான சிந்தனையும் விரைந்தெடுக்கும் தீர்மானமும் உடனடித் தொடர்பாடலுமாகும். இந்த விடயங்களில் நாம் கண்ணும் கருத்துமாக இருக்கும் போது எங்களுடன் இருந்து கொண்டு எங்களை வேரறுக்க நினைப்பவர்களின் சதித் திட்டங்களை நாம் இலகுவாக இனங்காணவும் அதைத் தகர்த்தெறியவும் முடியும் என்பதால் தமிழ்மக்கள் எப் போதும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

அதேவேளை வடக்கு மாகாண சபையில் இருக்கக் கூடிய தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் தமது கட்சி என்ற நோக்கில் தமது ஆதரவை அக்கட்சிக்கு வழங்குகின்றனரேயன்றி முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்களின் உள்நோக்கம் என்ன? முதலமைச்சர் விக்னேஸ்வரனின் பதவியை இழக்கச் செய்தால் அதன் இழப்பு தமிழினத்திற்கு எத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பன தொடர்பிலும் தமது சிந்தனைப்புலத்தைச் செலு த்த வேண்டும்.

இல்லையேல் எதுவும் தெரியாதவர்களாக அக்கிரமத்திற்கும் அநியாயத்திற்கும் ஆதரவு வழங்குபவர்களாக இருந்துவிட்டு போவதைத் தவிர வேறு எதுவும் இல்லை என்றாகிவிடும்.

தமிழர் தலைவிதி என்ற இத்தொடரில் இத்தகவலை இங்கு தருவது எங்களின் தலைவிதி ஏற்படுத்தக்கூடிய பாதகத் தன்மையைக் குறைக்கும் என்பதால் இக்கருத்தை இங்கு பிரஸ்தாபித்தோம். நாளை முதல் தொடர் தொடராக வெளிவரும்.

## தமிழர் தலைவிதியை மதியால் வெல்லும் சக்தி வேண்டும்

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொருவரிடமும் காணப்படுகின்ற திறமைகள் பயன்படுத்தப்படும் போது அது முழுமை பெறுகின்றது

## முன்னாள் எம்.பி.சந்திரகுமார்

ஒவ்வொருவரிடமும் காணப்படுகின்ற ஆளுமை பண்புகள், அதன் திறமைகள் சமூகத்திற்கு பயன்படுகின்ற போதே அது முழுமையடைகிறது என சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி திருநகர் கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தில் லண்டன் லிட்டில் எய்ட் மற்றும் திங் டு வைஸ் நிறுவனத்தின் அமைப்பினரால் நேற்று முன்தினம் நடத்தப்படுத்தப்பட்ட ஆளுமை விருத்தி கல்விச் செயலமர்வும் அதன் அறிமுக நிகழ்வும் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வி வளர்ச்சியில் இலங்கையிலேயே கிளிநொச்சி மாவட்டம் கடைசி நிலையில் உள்ளது துரதிஷ்டவசமானது. பின்னோக்கிச் செல்லும் கல்வியை மேம்படுத்த வேண்டும். இந்த மாவட்டத்தின் கல்வி நிலை கீழ்மட்டத்தை நோக்கி செல்வதை காப்பாற்ற வேண்டும் என்ற ஆர்வம் கல்வி சார்ந்த எல்லோருக்கும் உள்ளது. ஆனால் அதனை எப்படி மாற்றியமைத்து முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும் என்பது தொடர்பாக எங்களுக்குள் நிறைய வேற்றுமைகள் காணப்படுகின்றன.

கிராமப்புறங்களின் கல்வி நிலைமை மிகவும் மோசமாக காணப்படுகின்றது. ஆசிரிய வளப்பற்றாக்குறை இருக்கின்றது.

மாகாணத்தின் பட்டியலில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு திருப்திகரமான ஆசிரிய வளம் இருப்பதாக கூறப்படுகிறது. ஆனால் உண்மை அதுவல்ல. போதுமான ஆசிரியர் வளம் வழங்கப்பட்டாலும் முக்கியமான பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவி வருகிறது. எனத் தெரிவித்தார்.

தென்னிலங்கையில் கல்வியில் பின்னிலையில் காணப்பட்ட பல மாவட்டங்கள் தற்போது வேகமாக வளர்ந்து வருகின்றன. ஆனால் நாங்கள் இன்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாகாணம் என்று சொல்லிக்கொண்டு கல்வியின் பின்னடைவை நியாயப்படுத்திக் கொண்டிருக்கின்றோம் என்றார். (2-312)




# தியாகிகள் தினம் மன்னாரில் நினைவுகூரல்



(மன்னார்)

ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் ஸ்தாபக தலைவர் கே.பத்மநாபா மற்றும் போராளிகள், பொதுமக்களின் 27ஆம் ஆண்டு நினைவு தினமான தியாகிகள் தினம் மன்னாரில் நினைவுகூரப்பட்டுள்ளது.

குறித்த நினைவு தின அனுஷ்டிப்பு நேற்றுக்காலை ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் மாவட்ட அலுவலகத்தில், அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர். குமரேஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது உயிர் நீத்த ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் ஸ்தாபக தலைவர் கே.பத்மநாபா, போராளிகள், பொது மக்கள் ஆகியோரை நினைவு கூர்ந்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜீ.குணசீலன், ஈ.பி.ஆர்.எல்.எப்'அமைப்பின் மத்திய குழு உறுப்பினர் ஜேம்ஸ் ஜேசுதாசன், மன்னார் நகர சபை முன்னாள் உறுப்பினர் மெரினஸ் பெரேரா உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-250)



# இலவச நடமாடும் மருத்துவ முகாம்



(மல்லாவி)

தென்னிந்திய திருச்சபை நிறைவாழ்வு மையத்தின் ஏற்பாட்டில் கடந்த 17ஆம் திகதி சனிக்கிழமை இலவச நடமாடும் மருத்துவ முகாம் இடம்பெற்றது. கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள தெளிகரை, செம்மங்குன்று ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் குறித்த இலவச சிகிச்சை முகாமில் பயன்பெற்றனர்.

நிறைவாழ்வு மையத்தினால் 12ஆவது இலவச மருத்துவ முகாமில் யாழிலிருந்து 3 மருத்துவர் அடங்கிய குழுவினர் ஈடுபட்டனர். டாக்டர் தயாளினி தியாகராஜா தலைமையில் குறித்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டது. குறித்த மருத்துவ முகாமில் 120 பேருக்கு மேல் மருத்துவ சேவையை பெற்றுக் கொண்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டும், போக்குவரத்து பிரச்சினை மற்றும் வைத்திய சாலைகளற்ற கிராமங்களை தெரிவு செய்து இவ்வாறான மருத்துவ சேவைகளை முன்னெடுப்பதாக அதன் இயக்குநர் தெரிவிக்கின்றார். நிறைவாழ்வு மையத்தினால் வாழ்வாதார உதவிகள், மருத்துவ சேவைகள், பாலர் பகல் பராமரிப்பு நிலையங்கள், பெண்களுக்கான அபிவிருத்திப் பணிகள் மற்றும் உளநல மருத்துவ பணிகள், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கிளிநொச்சியை தலைமையாக கொண்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (2-15)

# முல்லையில் உறவுகளைத் தேடும் தவிப்பு 104ஆவது நாளாகவும் தொடர்கின்றது



(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று 104 ஆவது நாளை எட்டியுள்ள போதும், தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தீர்வு கிடைக்கும் வரை கவனயீர்ப்புப் போராட்டத்தை தொடரப் போவதாக தெரிவித்து கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி காலை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் முன்பாக சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்து தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தின் போது மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

இந் நிலையில், நேற்று 104 ஆவது நாளாகவும் தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில் தொடர்ந்து தமது போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த உறவுகள் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு இன்று 104 ஆவது நாளை எட்டியுள்ள போதும், தீர்வு எதுவும் கிடைக்காத நிலை காணப்படுகின்றது.

அண்மையில் ஜனாதிபதியை நாங்கள் யாழ்ப்பாணத்தில் சந்தித்து கலந்துரையாடிய போது, எமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகள் தொடர்பில் முப்படையினருக்கும் அறிவித்து தகவல் சேகரித்து முடிவுகளை விரைவில் வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

எனவே, இதற்கு மதிப்பளித்து இன்று 104 ஆவது நாளை முன்னிட்டு எங்களால் முன்னெடுக்கப்படவிருந்த விசேட போராட்ட விஸ்தரிப்புக்களை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில், எமது சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றோம் என தெரிவித்துள்ளனர். (2-15)

# ஒட்டுசுட்டானில் கவனயீர்ப்புப் பேரணி

வடமாகாண சபை-தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களிடையே ஏற்பட்டுள்ள முரண்பாட்டை களைந்து ஒற்றுமையாக செயற்படுங்கள் என வலியுறுத்தி ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் கவனயீர்ப்புப் பேரணியில் ஈடுபடவுள்ளனர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்களிடையே உள்ள முரண்பாட்டை களைந்து அவர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி, தமிழ் இனம் தலைகுனியாது வாழ்வதற்கு கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஒற்றுமையான அரசியல் பயணத்தை முன்னெடுக்க வலியுறுத்தி ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன் கிழமை மாலை 3 மணிக்கு ஒட்டுசுட்டானில் பேரணியை மேற்கொள்ளவுள்ளனர். இதில் அனைவரும்கலந்து கொண்டு ஒற்றுமையை வெளிப்படுத்துவோம். இப் பேரணி ஒட்டுசுட்டான் நீர்ப்பாசனச் சந்தியில் இருந்து ஆரம்பமாகி பேரணி ஒட்டுசுட்டான் சிவன் கோயில் சந்தியில் நிறைவடையும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களுக்கும் ஒட்டுசுட்டான் மக்களால் மகஜர்கள் அனுப்பி வைக்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (2-281)

# சுகாதாரத் தொண்டர்களின் போராட்டம் வவுனியாவில் தீர்வின்றி தொடர்கின்றது



தமக்கான நிரந்தர நியமனத்தைக்கோரி வவுனியாவில் சுகாதாரத் தொண்டர்கள் முன்னெடுக்கும் போராட்டம் 47ஆவது நாளாக நேற்று தொடர்ந்தது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சரினால் உள்வாங்கப்பட்டு வவுனியா மாவட்டத்தில் பல ஆண்டுகளாக சுகாதாரத் தொண்டர்களாக பணியாற்றி வந்த சுகாதாரத் தொண்டர்கள் கடந்த 47 நாட்களாக தமது நிரந்தர நியமனத்திற்காக போராட்டத்தை மேற்கொண்டு வருகின்ற போதிலும் இதுவரை எவ்வித தீர்வுமின்றி தமது போராட்டம் தொடர்ந்த வண்ணமே உள்ளன என போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கவலை வெளியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலைப்பாணி கிராமத்திற்கு வசதிகளை ஏற்படுத்துங்கள்

## பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் கோரிக்கை

(மல்லாவி )

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள பாலைப்பாணிக் கிராமத்திற்கான பிரதான வீதிப் புனரமைப்பு மற்றும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி தர துறை சார்ந்த அதிகாரிகள் முன்வர வேண்டும் என பாலைப்பாணி கிராம பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் இணைந்து கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

இந்த கிராமத்திற்குச் செல்வதற்கு பயணிகள் போக்குவரத்துச் சேவையோ அல்லது ஏனைய போக்குவரத்து வசதிகளோ இன்று வரை கிடையாது.

மீள் குடியேற்றத்தின் பின்னர் பயணிகள் போக்குவரத்துச் சேவையை முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினால் ஒரு சில மாதங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அதுவும் பின்னர் வருமான ரீதியாக நட்டம் ஏற்படுவதாக கூறி நிறுத்தப்பட்ட நிலையில் மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை.

இதேவேளை, இறுதி யுத்தத்தின் போது, இப்பிரதேசங்களில் இரண்டு தரப்புக்களுக்கும் இடையே கடுமையான மோதல் நடவடிக்கை இடம் பெற்ற காரணத்தால் வீதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மக்கள் மீள் குடியேற்றத்தின் பின்னரான காலங்களில் வீதிப் புனரமைப்பு பெரியளவில் மேற் கொள்ளப்படாத நிலையில், தற்காலிகமாக திருத்தங்கள் செய்யப்பட்ட நிலையிலேயே தற்போதும் காணப்படுகின்றது.

இக் கிராமத்தில் உள்ள பாடசாலையில் 17 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். பாடசாலையில் அதிபர் உள்ளடங்கலாக 3 ஆசிரியர்கள் கடமை யாற்றுகின்றனர்.

மேல் நிலைப் படிப்பிற்காக வன்னிவிளான்குளம் அல்லது மாங்குளம் ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளிற்கு துவிச்சக்கர வண்டிகள் மூலமாகவோ அல்லது நடந்தோ சென்று வரவேண்டும்.

இவ்வாறு செல்லும் போது அடர்ந்த காட்டுப் பாதை ஊடாக அச்சத்துடன் சுமார் 13 கிலோமீற்றர் தூரம் பயணிக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு காணப்படும் பாலைப்பாணிக் கிராமத்தில் இரு பெரும் குளங்களும் அதிக வயல் நிலங்களும் உள்ள நிலையில், யானைகளிடம் இருந்து பாதுகாப்பு இன்றி வாழ்ந்து வருகின்றனர்.

இதனால், போதிய விவசாயம் நடைபெறுவதில்லை இதனால் பயனுள்ள அதிக விவசாய நிலங்கள் தரிசாகவே கானப்படுகின்றது.

எனவே கிராமத்தில் மீள் குடியேற வீதிப்புனரமைப்பு உட்பட போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தர துறைசார்ந்த அதிகாரிகள் முன்வர வேண்டும் என பாலைப்பாணி கிராம பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் இணைந்து கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (2-15)




# கடுகதி புகையிரதம் மாட்டுடன் மோதுண்டு முன்பகுதி சேதம்

## கிளிநொச்சியிலிருந்து தாமதித்தே பயணத்தை தொடர்ந்தது

(பரந்தன்)



கொழும்பிலிருந்து யாழ்.நோக்கிப் பயணித்த கடுகதி புகையிரதம் கிளிநொச்சியில் ஒன்றரை மணித்தியாலங்கள் தாமதமாகி பின்னர் பயணத்தைத் தொடர்ந்தது.

நேற்று அதிகாலை 5.45 மணியளவில் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து யாழ். நோக்கிப் புறப்பட்ட கடுகதி புகையிரதம் முறுகண்டிப் பகுதியில் வந்து கொண்டிருந்த வேளை மாடு ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது

இதன்போது குறித்த மாடு இறந்துள்ளதுடன் புகையிரதத்தின் முன்பகுதியில் (பவர்) பகுதியில் சேதம் ஏற்ப்பட்டமையால் புகையிரத்தை நகர்த்துவதில் சிரமம் ஏற்பட்டிருந்தது

அதன் பின்னர் கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் புகையிரதம்நிறுத்தப்பட்டு இலங்கை புகையிரத சேவைப் பணியாளர்களினால் புகையிரதத்தின் பவர் கழற்றப்பட்டு சீர் செய்ததன் பின்னர் குறித்த பாகத்தையும் புகையிரதத்தில் ஏற்றி தாமதமாக யாழ்.நோக்கி புகையிரதம் பயணித்தது.

முற்பகல் 11.05 இற்கு கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் இருந்து புறப்பட வேண்டிய கடுகதி புகையிரதம் பிற்பகல் 12.40 மணிக்கே புறப்பட்டது. இதனால் பயணிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளானதாக தெரிவித்தனர். (2-312)

# தேனீ வளர்ப்போரின் எண்ணிக்கை வவுனியா மாவட்டத்தில் அதிகரிப்பு

## மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் (வவுனியா) தெரிவிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தேன், தேனீ என்பவற்றின் முக்கியத்துவத்தை அறிந்து நாளுக்கு நாள் தேனீ வளர்ப்போரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்வதை அவதானிக்க முடிகின்றது என மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் (வவுனியா) தெ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கடந்த 2016 ஆம் ஆண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் எட்டு விவசாயப் போதனாசிரியர் பிரிவைச் சேர்ந்த 93 பயனாளிகளுக்கு 50 வீதம் மானிய அடிப்படையில் தேனீப் பெட்டி வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட பெட்டிகளில் 95 வீதத்திற்கு அதிகமான பெட்டிகளில் தேனீச் சமுதாயமானது உரிய இடங்களில் வைக்கப்பட்டு சரியான முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. குறித்த இடங்களை அண்டிய பிரதேசங்களில் பாலை, வீரை, வாழை, தென்னை மற்றும் அழகு பூத்தாவரங்கள் போன்ற பல்வேறு வகைப்பட்ட வருடம் பூராகவும் பூக்கும் தாவரங்கள் காணப்படுவதனால் வளர்க்கப்படுகின்ற தேனீச் சமுதாயத்துக்கு தேவையான அளவு உணவு கிடைப்பதனாலும் சரியான முறையில் பராமரிக்கப்படுவதனாலும் அக்குடித்தொகையானது இடம்பெயராமல் இருப்பதற்கு சாத்தியமான விடயமாக அமைகின்றது.

இதே போல் 2017 ஆம் ஆண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் 30 பயனாளிகளுக்கு அவர்களது மிகக் குறைந்த பங்களிப்புடன் தேன்பெட்டிகள், புகையூட்டி, தேன் பிரித்தெடுக்கும் கருவி என்பன வழங்குவதற்கென தீர்மானிக்கப்பட்டு வவுனியா மாவட்டத்திலுள்ள 11 விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளிலும் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் தேசிய தேனீ வளர்ப்பு அபிவிருத்தி திட்டம்- 2017 இல் 3 தேனீ வளர்ப்பு கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு கிராமத்திலும் 20 பயனாளிகள் வீதம் 60 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு உரிய இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் அவர்களுக்கான பயிற்சிகள் வழங்கல் தொடர்பான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

தற்போது வவுனியா மாவட்டத்தில் தேன், தேனீ என்பவற்றின் முக்கியத்துவத்தை அறிந்து நாளுக்கு நாள் தேனீ வளர்ப்போரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்வதை அவதானிக்க முடிகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# வித்தியாலய கட்டடம் திறப்பு

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் வலயத்தின் மு/அனிஞ்சியன்குளம் தமிழ் கலவன் வித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

குறித்த கட்டடத்தை வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் திறந்து வைத்தார்.

பாடசாலையின் அதிபர் திருமதி கீதா பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வலயக்கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் செல்வரத்தினம் உட்பட பிரமுகர்கள் கட்டடத்தின் வகுப்பறைகளை திறந்து வைத்தனர்.



முன்னதாக பெற்றோர், பாடசாலை அதிபர், ஆசிரியர் ஆகியோர் பாடசாலையின் விளையாட்டுத்திடல் திருத்தம் தொடர்பாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனுடன் கலந்துரையாடினார்கள் அதற்கமைய ரவிகரன் தனது உரையின்போது பாடசாலையின் வளர்ச்சிக்காக அடுத்தாண்டுக்கான தனது நிதி ஒதுக்கீட்டில் இரண்டு இலட்சம் தருவதாக தெரிவித்திருந்தார். (2)

# தமது பூர்வீக மண்ணில் குடியேற்றக் கோரி இரணைதீவு மக்கள் தொடர்ந்து போராட்டம்

(மல்லாவி)

கிளிநொச்சி இரணைதீவு மக்களின் போராட்டம் நேற்றுடன் 50 ஆவது நாளை எட்டியுள்ள நிலையிலும் தீர்வின்றி தொடர்கின்றது, தமது பூர்வீக மண்ணில் மீள் குடியேற்றக் கோரி குறித்த பகுதி மக்கள் தொடர் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

மீள்குடியேற்றத்தின் பின்னர் குறித்த பகுதியிலில் தங்கி நின்று தொழில் புரிவதற்கு கடற்படை அனுமதி அளிக்காத நிலையில் அப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக அரசிடம் கோரிக்கை விடுத்து வந்தனர்.

மக்களின் கோரிக்கைகளை அரசு செவிமடுக்காத நிலையில் இரணைதீவு மக்கள் போராட்டத்தினை ஆரம்பித்திருந்தனர்.




இயற்கையாக கடல் வளத்தினை கொண்ட இரணைதீவில் தம்மை மீள்குடியேற்றம் செய்யக் கோரி முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டத்திற்கு அரசியல்வாதிகள் ஆதரவு வழங்கியிருந்த நிலையில் தீர்வின்றி மக்கள் தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த பகுதியில் தங்கி நின்று மீன்பிடியில் ஈடுபடுவதற்கு தம்மை அனுமதிக்கும் வரை தாம் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடப் போவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

யுத்தம் காரணமாக குறித்த பகுதியை விட்டு வெளியேறிய மக்கள் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் இரணைமாதா நகர் என்ற கிராமத்தை உருவாக்கி அங்கு குடியேறியிருந்தனர். குறித்த பகுதியில் குடியேறியிருந்த மக்களில் பெருமளவானோர் இரணைதீவில் மீளக்குடியேறுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள நிலையில் அவர்களின் மீள்குடியேற்றம் அரசினால் தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குப்பை அகற்றும் பணியை ராணுவம் மேற்கொள்ளாது

## ராணுவ ஊடகப் பிரிவு தகவல்

குப்பைகளை சேகரிக்கும் நடவடிக்கைகளுக்கு படையினர் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள் என இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. குப்பைகளை முகாமைத்துவம் செய்யும் முனைப்புக்களில் இராணுவத்தினரின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும் என்ற போதிலும், நேரடியாக குப்பைகளை சேகரிப்பதில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள்.

நாள்தோறும் அதிகளவில் குப்பைகள் திரளும் இடங்களை அடையாளம் கண்டு அது குறித்து பிரதேச சபைகளுக்கு அறிவிக்கும் பொறுப்பினை இராணுவத்தினர் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதற்கென கொழும்பு நகரை அண்டிய பகுதிகளில் இராணுவக் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. சட்டவிரோதமான முறையில் குப்பைகளை அகற்றுவோரை கைது செய்ய பொலிஸாருக்கு இராணுவத்தினர் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

# நல்லிணக்க முனைப்புக்களை சீர்குலைக்கத் தீவிர முயற்சி

## ஐ.தே.க. அமைச்சர் குற்றச்சாட்டு

நல்லிணக்க முனைப்புக்களை சீர்குலைக்கத் தீவிரமாக முயற்சிக்கப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம குற்றம்சாட்டியுள்ளார்.



நல்லாட்சி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்க முயற்சிகளை முறியடிக்க இவ்வாறு முயற்சிக்கப்படுகின்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இலங்கை அடையாளத்தை உருவாக்கும் நோக்கில் மெய்யாகவே அனைத்து சமூகங்களுடனும் இணைந்து செயற்படுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முனைப்புக் காட்டி வருவதாகத் அவர் தெரிவித்துள்ளார்.

இன மற்றும் மத குரோத செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். இலங்கையில் இன முரண்பாடுகளுக்கு எவருக்கும் இடமளிக்கப்பட முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இருதய நோயுடைய குழந்தைகளை காப்பாற்றுவதற்கான திட்டம்

(நேற்றைய தொடர்ச்சி)

கட்டட நிர்மாணம் CECB யினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது.

8.ஏன் இத்திட்டத்திற்கு நிதியை இலங்கை அரசாங்கம் வழங்க முடியாது?

இலங்கை அரசு ஏற்கனவே 500 மில்லியன் ரூபாய்களை ஒவ்வொரு வருடமும் LRH இருதயவியல் பிரிவுக்கு வழங்கி வருகிறது. இதைவிட ஒவ்வொரு இலங்கைக் குடிமகனுக்கும் இலவச மருத்துவ வசதிகளை அரசாங்கம் வழங்குகிறது.

மேற்கொண்ட காரணங்களினால் இக்கட்டடத்திற்கு தேவையான 2 பில்லியன் நிதியை முழுமையாக இலங்கை அரசினால் ஒதுக்க முடியாது.

இலங்கை அரசினால் இத்திட்டத்திற்கு முழுமையாக நிதிஉதவி செய்து முடிப்பதற்கு அண்ணளவாக 10 வருடங்களேனும் தேவைப்படலாம். இக்காலப்பகுதியில் எத்தனை சிறுவர்களை நாங்கள் இழப்போம் என்பதனை நினைத்துப் பாருங்கள். எனவே சிந்தித்து செயலாற்றி சின்னஞ்சிறு உயிர்களைக் காப்பாற்ற இத்திட்டத்திற்கு நிதியுதவி செய்ய முன்வாருங்கள்.

9.நான்கு சத்திரசிகிச்சைக் கூடங்களையும் நடத்துவதற்கு தேவையான ஆளணியை வைத்தியசாலை கொண்டுள்ளதா?


தற்சமயம் ஆளணிப்பற்றாக்குறைநிலவுவதுஉண்மை. 2003 ஆம் ஆண்டில் முதலாவது இருதய சத்திர சிகிச்சை நிபுணர் LRH இற்கு நியமிக்கப்பட்டார். ஆனால் சத்திரசிகிச்சைக் கூட வசதியின்மையினால் 4 வருடங்களின் பின்னே சத்திர சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆகவே போதியளவு சத்திர சிகிச்சைக் கூடங்கள் இருப்பின் தேவையான வைத்திய நிபுணர்களை சுகாதார அமைச்சிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

10.யார் இக்கட்டடத்தை பராமரிக்கப் போகின்றனர்?

இக்கட்டடமானது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு திட்டமாகும். ஆகவே இக்கட்டடத் தொகுதியில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வருடாந்த பராமரிப்பை சுகாதார அமைச்சே மேற்கொள்ளும்.

11.இத்திட்டம் (Little Heart Project) தோல்வி அடைவதற்கு சாத்தியக்கூறுகள் உண்டா?

இல்லை. அதற்கான காரணங்கள்




a)இத்திட்டம் தேவையற்றது என மேற்கூறிய காரணங்களினால் எவராலும் வாதிட முடியாது.

b) இத்திட்டமானது அரசாங்கத்தின் நிகழ்ச்சிக்கமையவே நடத்தப்படுகிறது. எமது பங்களிப்பு இத்திட்டத்திற்கு துரிதப்படுத்தவே மேற்கொள்ளப்படுகிறது.

c)இன்றுவரை இத்திட்டமானது மிகவும் முன்னேற்றகரமான பாதையிலேயே சென்றுகொண்டிருக்கிறது. தற்போது வரைக்கும் 135 மில்லியன் ரூபாய்கள் இந்தத் திட்டத்திற்கு கிடைக்கப்பட்டுள்ளது. இலங்கை கடற்படை கட்டட வேலைகளை ஏற்கனவே ஆரம்பித்து விட்டது.

d) இவ்விலக்கை நாம் எட்டாவிட்டால் இது இத்திட்டத்தின் தோல்வி அல்ல. ஒரு ஆக்கபூர்வமான திட்டத்திற்கு இலங்கை மக்களின் பங்களிப்பின்மையால் நாட்டு மக்களுக்கு ஏற்படும் தோல்வியாகும். இலங்கையானது தாராள மனமுடைய நன்கொடை நாடுகளின் பட்டியலில் (World Giving Index) 5 ஆம் இடத்தை வகிக்கின்ற நாடு. எனவே இத்திட்டம் தோல்வி அடைய வாய்ப்புக்கள் இல்லை.

12.ஏன் குழந்தைகளுக்கான சத்திரசிகிச்சைப்பிரிவு நாட்டின் ஏனைய பாகங்களில் ஆரம்பிக்க முடியாது?

மிக அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கூட குறைந்தளவு சத்திரசிகிச்சைப் பிரிவுகளே பாவிக்கப்பட்டு வருகின்றன. பிரித்தானியாவில் இருந்த 11 நிலையங்களானது 7 ஆக குறைக்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியா இலங்கையை விடவும் 117 மடங்கு பரப்பளவைக் கொண்டாலும் 6 இருதய சத்திரசிகிச்சை நிலையங்களை மாத்திரமே அந்நாடு கொண்டுள்ளது.

எனவே ஒருங்கிணைக்கப்பட்ட சேவைகளை ஒரு சத்திரசிகிச்சைப் பிரிவில் வழங்குவதே நீண்ட நோக்கில் செயற்றிறன் வாய்ந்ததாக இருக்கும்.

13.இத்திட்டத்தின் மூலம் சேகரிக்கப்படும் நிதி எவ்வாறு கையாளப்படுகின்றது.

14.உங்கள் பங்களிப்பு என்ன?

இது இலங்கை மக்களினால் குழந்தைகளைக் காப்பாற்றும் திட்டமாகும். எனவே இயலுமான அளவு உங்களின் பங்களிப்பைச் செய்து இத்திட்டத்தை வெற்றியடையச் செய்யுங்கள்.

அனைத்து மதத்தலைவர்களும் பொது நிறுவனங்களும் இத்திட்டத்தை ஆதரித்து எமது சிறுவர்களின் உயிரைக் காக்க உதவுங்கள்.

15.நன்கொடை வழங்கும் வழிமுறைகள்

இத்திட்டத்திற்கான உங்கள்நன்கொடைகளை வழங்குவதற்கு பல வழிகள் உள்ளன. இத்திட்டத்திற்கு 2 பில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. நீங்கள் வழங்கும் ஒவ்வொரு ரூபாயும் ஒரு உயிரைக் காப்பாற்றும். உங்கள் உதவி சிறிதாக இருந்தாலும் அது ஒரு உன்னத இலட்சியத்துக்கு வழிகோலும்.

☞ வங்கி வைப்பினூடான நன்கொடை

- இலங்கை வங்கி பொறளை சுப்பர்கிரேட் கிளையில் "Little Hearts" எனும் கணக்கின் பெயரில் 79738633 எனும் கணக்கிலக்கத்திற்கு அனைத்து இலங்கை வங்கி கிளைகளிலும் பணத்தை வைப்பிடலாம்.

. SWIFT Code: BCEYLKLX, Bank Code: 7010, Branch Code: 38

- சம்பத் வங்கியில் "Sri Lanka College of Paediatricians" எனும் கணக்கின்பெயரில்002930026126 எனும் கணக்கிலக்கத்திற்கு அனைத்து சம்பத் வங்கி கிளைகளிலும் பணத்தை வைப்பிடலாம்.

☞ ஒன்லைன். ஊடான நன்கொடை

- http://littlehearts. lk/donation என்ற இணையத்தளத்தில் கடனட்டை ஊடாக நன்கொடையைச் வழங்கலாம்.
- சம்பத் வங்கியின் விஸ்வா எனும் தளத்தினூடாக நன்கொடையை வழங்கலாம்

☞ mCASH ஊடான நன்கொடை

- அனைத்து மொபிட்டல் பாவனையாளர்களும் Dial#111# டைப் செய்து Little Hearts என்று தெரிவு செய்து உங்கள் PIN இலக்கத்தையும் எங்கள் கையடக்க தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்து உங்கள்நன்கொடைத்தொகையை வழங்கலாம்.

☞ ஒரு தடவை SMS ஊடான நன்கொடை

- அனைத்து டயலொக் மற்றும் ஹச் முற்கொடுப்பனவு/பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்கள் தமது நன்கொடையை வழங்குவதற்கு LH, இடைவெளி, நன்கொடை தொகை. என டைப் செய்து 77100 இற்கு அனுப்பவும். ரூபா 5 இலிருந்து ரூபா 2,500 வரை செலுத்தலாம்.

☞ மாதாந்தம் SMS ஊடான நன்கொடை

- அனைத்து டயலொக் மற்றும் ஹச் முற்கொடுப்பனவு/ பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்கள் தமது நன்கொடையை வழங்குவதற்கு REG.இடைவெளி, LH, என டைப் செய்து 77100 இற்கு அனுப்பவும். உங்கள் மாதாந்த கொடுப்பனவு பட்டியலில் ரூபா 90 அறவிடப்படும்.



☞ டயலொக் Star Points ஊடான நன்கொடை

- Dialog Selfcare App இனை பாவித்து Loyalty,Star Points, Donate, Institution "Little Hearts" இற்கு சென்று நீங்கள் வழங்கும் புள்ளிகளை பதி விடவும்.
- சகல டயலொக் வாடிக்கையாளர்களும் #141*6*4# என டைப் செய்து உங்கள் நன்கொடைத் தொகையை குறிப்பிடவும்.

☞ கீல்ஸ் சுப்பர் ஊடான நன்கொடை

- நன்கொடைத் தொகையை எந்தவொரு கீல்ஸ் சுப்பர் மையங்களிலும் வழங்கலாம்.

☞ இணையமூடான நன்கொடை

www.giftsmart.lk எனும் இணையத்தளத்தினூடாக உங்கள் நன்கொடையைச் செலுத்தலாம்.

தாராள மனம் படைத்தோர்கள் தங்கள் பெறுமதிமிக்க நிதிப்பங்களிப்பினை இத்துவிச்சக்கரவண்டி பவனியின் போது கையளித்து எமது சின்னஞ்சிறார்களின் எதிர்காலம் ஒளிமயமாக்கும் இத்திட்டம் வெற்றி பெற உதவி புரியமுடியும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச்செய்ய வேண்டும்-ஐ.தே.க.

நாட்டில் புதிய அரசியல் அமைப்பு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்ய வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதியமைச்சருமான அஜித் பி.பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு இது குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதுள்ள அரசியலமைப்பு முறைமையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மாற்றங்கள் போதுமானதாக இல்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இது குறித்து ஐக்கிய தேசிய கட்சி கலந்தாலோசித்து வருவதாகவும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்வதற்கு கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## குப்பை விவகாரத்தில் கூட அரசியல் நாடகம் தான் அரங்கேற்றப்படுகிறது

### அமைச்சர் திகாம்பரம் விசனம்

ஹற்றன், டிக்கோயா நகர சபையினால் சேகரிக் கப்படும் குப்பைகளைக் கொட்டுவதற்கான இடத்தைத் தெரிவு செய்வது தொடர்பிலான அமைச்சரவை பத்திரத்தைச் சமர்ப்பித்து, அதற்கான அங்கீகாரத்தை யும் பெற்றுள்ளோம். குப்பை களைக் கொட்டுவதற்கு, எந்த இடத்தைத் தெரிவு செய்வதென, நானும் அமைச்சர் நவீன் திஸாநாயக்கவுமே தீர்மானிக்க வேண்டும். ஆனால், அதிகாரமற்ற சிலர், அதற்கான இடத்தைப் பெற்றுத் தருவதாகக் கூறி அரசியல் நாடகமொன்றை அரங்கேற்றி வருகின்றனர் என, மலையகப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு, மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம் பரம் தெரிவித்தார்.

ஹற்றன் புகையிரத நிலையம் மற்றும் நவீன கடைத் தொகுதிக்கான அடிக்கல்நாட்டும் நிகழ்வு, நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)


### ஏல விற்பனை

யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் முற்றத்தில் 05.07.2017 காலை 10 மணியளவில் பொருட்களை விற்பதற்கான ஏலவிற்பனை நடைபெறவுள்ளது.

(9494) அதிபர்


## உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் ஐந்து பேருக்கு உடனடி இடமாற்றம்

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் பரிந்துரைக்கமைய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் 5 பேர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றப்பட்டுள்ளனர்.

தங்கல்லை, மட்டக்களப்பு, காலி, பொலநறுவை பொலிஸ் வலயத்தைச் சேர்ந்த நான்கு அதிகாரிகளுக்கும் மற்றும் கொழும்பு குற்றவியல் விசாரணைப் பிரிவு அதிகாரி ஒருவருக்குமே இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

சேவை நிமித்தம் மேற்கொள்ளப்படும் இந்த இடமாற்றத்துக்கு தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)


### நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

கலைமாமணி

Dr.S.S.சர்மா குருஜீ

82/4 கலட்டி அம்மன் கோவிலடி, வண்ணார்பண்ணை.

077 784 1558 (8817)


## 3 இடங்களில் தீ விபத்துக்கள்

இராஜங்கன, நாரங்கஸ் வெவ காட்டுப் பகுதியில் தீ பரவியதால், சுமார் 50 ஏக்கர் காடு முற்றாகச் சேதமடைந்துள்ளது. இதனால் எந்தவொரு உயிராபத்தும் ஏற்படவில்லை.

இதேபோன்று தம்புள்ள, மெனிக்தென மலைப் பகுதியிலும் தீ பரவியுள்ளது. இதில் 5 ஏக்கர் காடு சேதமடைந்துள்ளது. குறித்த தீயினை பொலிஸ், இராணுவம் மற்றும் பிரதேசமக்கள் ஒன்றிணைந்து அணைத்துள்ளனர்.

அடுத்ததாக மாவதகம, மல்லியகொட பகுதியிலுள்ள வியாபார நிலையமொன்றில், திடீர் தீ விபத்து இடம் பெற்றுள்ளது. இதன் சேத விபரங்கள் இன்னும் மதிப்பிடப்படவில்லை.

இவ்வாறு மூன்று இடங்களிலும் இடம்பெற்ற தீ விபத்துகள் தொடர்பில், காரணம் ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா : 14 செவ் 4 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:IT<br>அவுஸ்திரேலியா<br>தொ.இ: B/7458 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>கி.பா :56 செவ் 1ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:LLB/சட்டத்தரணி<br>தொ.இ: G/6525 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி சூரிசெவ் 3ல்<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7462 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 20<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு :வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6526 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி.பா: 25செவ் 8 ல்<br>தகைமைதொழில்:A/L தனியார் தொழில்<br>தொ.இ: B/7463 | பிறப்பு: 1982இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 31 செவ் 1 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Diploma ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு :விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/6529 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>சூரிசெவ் 3ல்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7464 | பிறப்பு: 1985இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 33செவ் 7 ல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/6530 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## ஜப்பான்-இலங்கை நட்புறவு மன்றத்தினால் இலங்கை விமானப்படைக்கு அம்புலன்ஸ் அன்பளிப்பு



மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரணவின் வேண்டுகோளுக்கமைய ஜப்பான்- இலங்கை நட்புறவு மன்றத்தினால் 450 இலட்சம் பெறுமதியான தீயணைப்பு இயந்திரம் மற்றும் 350 இலட்சம் பெறுமதியான நவீன தொழிநுட்பத்துடனான அம்புலன்ஸ் ஆகியவை இலங்கை விமானப்படைக்கு வழங்கப்பட்டுள்ளது. அவற்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தியோகபூர்வமாக வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

ஜப்பான்- இலங்கை நட்புறவு மன்ற தலைவர் கலாநிதி லால் திலகரத்ன மற்றும் திருமதி எரங்கா திலகரத்ன ஆகியோரால் அவற்றுக்குரிய ஆவணங்கள் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டன. (இ-7)

## மாகாணசபை உறுப்பினர்கள் மூவர் திடீரென வெளிநடப்பு

(கொழும்பு)

நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி இணைப்புக் குழு கூட்டத்தின்போது, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மூன்று உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்துள்ளனர்.

நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி இணைப்புக் குழு கூட்டம், நுவரெலியா மாவட்ட செயலகத்தின் ஆச்சர்ய கேட்போர்கூடத்தில், நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் பழனி திகாம் பரம், கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்களான முத்து சிவலிங்கம், கே.கே. பியதாச, மத்திய மாகாண சபை அமைச்சர் மருது பாண்டி ராமேஸ்வரன், மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, ஹற்றன் குப்பை விவகாரம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், மத்திய மாகாண சபையின் இ.தொ.கா. உறுப்பினர்களான ஏ.பி. சக்திவேல், பிலிப்குமார், கணபதி கனகராஜ் ஆகிய மூவரும் கூட்டம் நடைபெறும் முறை தவறானது, எனக்கூறி வெளிநடப்பு செய்தனர்.

மத்திய மாகாண சபை உறுப்பினர் ஏ.பி.சக்திவேல் குறித்த விடயம் தொடர்பாக சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த கூட்டத்தில் இணைத்தலைவர்களான நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆறுமுகன் தொண்டமானும் மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவும் கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் மனநிலை இதுவே

# வடக்கின் முதலமைச்ச

**திருச்செந்தூரன் திருகோணமலை**
தொடர்ச்சியாக தமிழர்களின் ஆணைகளை மீறியே தமிழரசுக் கட்சி செயற்படுகின்றது.
சில ஊடகங்களும் செய்திகளை மறைத்து தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுகின்றமை மனவருத்தத்திற்குரியதே.

**லிங்கரட்ணம் புதுக்குடியிருப்பு**
"சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி" தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுவிட்டது தமிழரசுக் கட்சி.

**யோகதாஸ் புதுக்குடியிருப்பு**
இதுமக்களுக்கு இரண்டாவது முள்ளிவாய்க்கால். தமிழன் வைக்கோல் பட்டடை நாய்.

**ராஜன் கொக்குவில்**
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வெளியேற வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினையை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்.

**எஸ்.ராஜன் வரணி**
முதலமைச்சருக்கு எதிரான தமிழரசுக் கட்சியின் செயற்பாடு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தர்மத்திற்காக போராடி வரும் பத்திரிகை நிறுவனங்களுக்கு நன்றிகள்.

**கஜன் கோண்டாவில்**
தமிழரசுக் கட்சியிலுள்ள சிலர் வீணான கால இழுத்தடிப்புச் செய்கின்றனர்.

**யோகேஸ்வரன்**
எங்கள் முதலமைச்சர் போன்று இன்னும் ஐந்து பேர் இருந்தால் தமிழனின் நிகர் வேறு.

**துரைலிங்கம் வட்டக்கச்சி**
தமிழரசுக் கட்சி தமிழருக்குச் செய்யும் துரோகத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக கிளிநொச்சி கச்சேரியில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுப்பேன்.

**சிவா மிருசுவில்**
தமிழரசுக் கட்சியை ஓரம்கட்டி 3ம் தரப்பு அரசியலாக தமிழ் மக்கள் பேரவை இன்றைய காலத்தின் தேவை.

**கரன் தையிட்டி**
இப்படிப்பட்ட முதலமைச்சரை நாங்கள் இனிக்காணமுடியாது. தமிழரசுக் கட்சியில் முதலமைச்சருக்கு இணையாகச் செயற்பட ஒருவராலும் முடியாது.
எவராலும் விக்னேஸ்வரன் ஐயாவின் இடத்தை நிரப்ப முடியாது. அவர் பதவி விலகக்கூடாது.

**முத்துக்குமாரசாமி பன்னாலை**
முதலமைச்சரைப் படிக்கும் காலத்தில் இருந்தே தெரியும். அவர் ஒரு நேர்மையான மனிதர்.

**மனோ அக்கராயன்**
தமிழரசுக் கட்சியின் சதிச்செயலை ஏற்றுக்கொள்ள முடியாது. விக்னேஸ்வரனை நாங்கள் முழுமையாக ஏற்றுக் கொள்கின்றோம்.

**தேன்மொழி வல்வெட்டி**
தமிழரசுக் கட்சி துரோகம் இழைத்து விட்டது.
விக்னேஸ்வரன் ஐயா நீண்டகாலம் வாழ வேண்டும்.

**ரூபானந்தன் நெல்லியடி**
"முதலமைச்சர் நெருப்புடா, நெருங்கினால் புலியடா"

**சாந்தகுமார் ஊரெழு**
தமிழர்களின் நலனுக்காக உருவாக்கப்பட்ட கட்சி இன்று தடம்மாறிப் போய் விட்டது.
விக்னேஸ்வரன் ஐயா தலைமையில் புதிய கட்சி உருவாக வேண்டும்.

**மலர் மூளாய்**
வலம்புரியைப் படிக்கும்போது பூரிப்பாக இருந்தது. தொடர்ந்து அவருக்கு ஆதரவாக இருக்கவேண்டுகின்றேன். முதலமைச்சர் தொடர்பாக எடுக்கப்படும் அரசியல் சதி முயற்சிகள் கதி கலங்க வைக்கின்றன.

**தியாகராஜா கிளிநொச்சி**
தந்தை செல்வாவுக்குப் பிறகு தமிழரின் தலைமைத்துவம் தன்னலம் நோக்கிச் சென்றிருக்கிறது. விக்னேஸ்வரன் ஐயாவுடன் சுயநலமற்று பொதுநலத்துடன் செல்ல வேண்டும் என்பது எமது ஆசை.

**லவணிக்கா விந்தன் கனகரட்ணம்**
எங்கள் தெரிவு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனே...

**விமல் மட்டுவில்**
இவ்வளவு நாளும் நம்பிக்கைக்கு என்று இருந்தது கட்சி...இனியாவது நல்லவன் யார்? நரி யார்? என்று நம்ம சனம் தெரிந்து கொள்ளட்டும்.
விக்னேஸ்வரன் ஐயா எங்களுக்கு முதலமைச்சராக வேண்டும்.இது எச்சரிக்கை இல்லை, கட்டளை..!

**மா.வசந்தன் ஆனைக்கோட்டை**
விக்னேஸ்வரன் ஐயாவை திட்டம் போட்டு பதவியில் இருந்து துரத்தப் பார்க்கிறார்கள்.அரசாங்கத்திடம் எவ்வளவு காசு வாங்கினார்களோ?

**ரூபன் யாழ்ப்பாணம்**
ஐயா, குற்றவாளிகளை வெளியேற்றுங்கள். நாங்கள் உங்களுக்காகக் குரல் கொடுப்போம்.

**உ.கிருத்திகன் வற்றாப்பளை**
நரிக்கூட்டம் நீதியரசர் முன் எதிர் நிற்பதா???
அதன் முறையற்ற செயலை நாம் வரவேற்பதா???.

**சமரபாகு புலேந்திரன்**
விக்கி ஐயா நாம் இருக்கும் வரை இருக்கனும். he is a good person

**ரி.அற்புதன் நல்லூர்**
துரோகிகள் எல்லோரையும் எமது தாயக மண்ணைவிட்டு நாம் விரட்ட வேண்டும்.

**ரி. சுஜீபன் மல்லாவி**
தமிழ் மக்களை வழிநடத்த சிறந்த பொருத்தமான தலைவர் விக்னேஸ்வரன் ஐயா.
இவரை பணிநீக்கம் செய்ய வேண்டாம்.

**மாதுளன் திருநெல்வேலி**
பதவியாசை கொண்டவன் பாதை மாறினான். எம் பைந்தமிழ் இனத்தையே நாசமாக்கினான்.
தமிழரசுக் கட்சியினருக்கு சமர்ப்பணம்.

**ஜெயநேசா நெல்லியடி**
தமிழரசுக்கட்சி தமிழர்களுக்குச் செய்வது துரோகத்தனமானது. தமிழன் நடுத் தெருவில் நிற்பது நிச்சயம். முதல்வரை ஆதரிப்போம். அவரை எதிர்ப்பவரை தூக்கி எறிவோம்.

**ந.நந்தகுமார் மானிப்பாய்**
விக்னேஸ்வரன் போன்றோரை மாற்றுவதற்கு எடுத்த முயற்சி மாதிரி நூறு நாட்களை கடந்தும் இன்னும் ஒரு போராட்டம் முடிவில்லாமல் இருக்கு. இந்த முயற்சியை அங்கு செய்திருந்தால் மக்கள் பாராட்டி இருப்பர்.
அதைவிடுத்து நல்லவர் வல்லவர் முற்றும் அறிந்தவர் நீதியரசர்.அவரை வெளி எடுத்தால் மக்களால் தெரிவு செய்யப்பட்டவரை நீங்கள் எப்படி நீக்கமுடியும். தமிழுக்கு விக்னேஸ்வரன் ஐயா என்றால் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவர் ஐயா சம்பந்தர் இருப்பதுபோல் விக்னேஸ்வரன் ஐயா போன்றோர் இருந்தால் நிலைமைகள் வேறுவிதமாக மாறி இருக்கும்.என்ன செய்ய தமிழன் தலைவிதி இதுதான் என்றால் யாரால் மாற்ற முடியும்.

**ஜனா கந்தர்மடம்**
எங்களுக்கு என்ன வேண்டும், என்ன வேண்டாம் என்பதை தமிழர்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.
"தமிழ் அரசு கட்சி அல்ல"
எமது கலை,கலாசாரத்தை,பண்பாடுகளை பிரதிபலிக்கும் ஓர் தலைவர் அவர்.
எம் முதல்வர் விக்னேஸ்வரன் ஐயா வேண்டும் "பதவி ஆசையை கொண்ட விஷமிகள் எமக்கு வேண்டாம்"

**கோபிநாத் உடுப்பிட்டி**
நீதியின் மறுவிம்பத்தை மாற்ற எவராலும் முடியாது. என்றும் முதலமைச்சரே எமது தலைமை.

**சுந்தர் மட்டுவில்**
"விக்னேஸ்வரனே எங்கள் முதல்வர்", "மக்களின் தெரிவை மறுக்க நீங்கள் யார்", "துரோகம் செய்துவிட்டு மக்கள் முன்வர துணிவுண்டா?"

**ரூபன் புன்னையூர்**
தமிழனுக்கு என்று தலைவன் உருவாக தமிழனே விடமாட்டான்.

**சஞ்சீவ்**
தமிழரசுக் கட்சி மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தொடர்ந்தும் பதவியில் இருப்பதை வைத்தே...
இதை உணர்ந்துகொண்டு தமிழரசுக் கட்சி தன்னிலையை மாற்றி முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்குத் தொல்லைகொடுக்காமல் விட்டால் நல்லது.

**வி.சுமித்திரன் அளவெட்டி**
தமிழ் மக்களின் பெரும் ஆதரவுடன் வந்த முதலமைச்சரை த.அ.க. கொஞ்சப் பேர் எப்படிபோகச் சொல்லமுடியும். அதை சனம் தான் சொல்லவேண்டும் ஐயா.

**க.சி.நடராசா ம.வ.கி.அ.ச.**
சத்தியமே இலட்சியமாய் கொள்ளடா, செல்லடா" என்னும் கவிஞர் கண்ணதாசனின் பாடலுக்கேற்ப நேர்மையுடன் செயற்படும் முதலமைச்சரின் செயற்பாட்டில் குள்ளநரிக் கூட்டம் குறுக்கிட்டு நிற்பதை தமிழ் மக்கள் நாம் தகர்த்தெறிவோம். வாழ்த்துக்கள் முதலமைச்சர்.
தொடர்க தங்கள் செங்கோல் ஆட்சி.

**எஸ்.கே.ராஜ்**
பதவி ஆசை தமிழரசு கட்சி தமிழர்களை படுகுழியில் வீழ்த்தியுள்ளது. வாக்குப் பிச்சை கேட்டு வந்த போது சொன்னதெல்லாம் மறந்து போச்சு.. முதல்வரை மாற்றும் எண்ணத்தை விட்டு விடுவது நல்லது.. அப்படி இல்லையாயின் ஆளுநர் சபையை கலைக்க முடிவெடுக்க வேண்டும்.

**தி.தாருஜன்**
நீங்க பழனிக்கே பால் காவடி எடுத்தாலும் உங்கட பல்லு தான் மின்னுமே தவிர, இங்க ஒன்றையும் செய்ய முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# …ர் விக்னேஸ்வரனே!

# தமிழ் மக்களின் மனங்களில் இவரே




**கஜாணனன்** சங்கானை

தமிழரசுக்கட்சியை இன்றளவும் சகித்துகொண்டு இருக்குறம்ணா அதுக்கு ஒரே ஒரு காரணம் முதலமைச்சர் ஐயா மட்டுமே!! அவரையும் …நவி விலக்கினா தமிழரசு கட்சி என்ற ஒன்று இல்லாமலே போகும். ஒரு நல்ல தீர்ப்பை …குடுப்பார்கள் மக்கள்.

**கோபி** கோப்பாய்

எங்க்ள் தலைவர் விக்னேஸ்வரன் ஐயா தான். யாராலும் இதனை மறுக்கவோ, மாற்றவோ முடியாது. எல்லோரும் உங்கள் பின்னால் வருவோம்.மீண்டும் எழுவோம்.

**பிரணவன்** துன்னாலை

தாங்கள் செய்த ஊழலை மூடி மறைப்பதற்கே இந்த நாடகம். இனி வாக்கு கேட்டு வாங்க பார்ப்போம்.ஐயா... நியாயத்தின் குரல் நீங்கள்... உங்களுக்கு ஆதரவாக நாங்கள் இருக்கிறம்..

துரோகிகளை விரட்டியடிப்போம்..

**மயூரன்** மாதகல்

தமிழரசு கட்சி கொம்பனல்ல. மக்கள் விரோத செயற்பாடென்றால் அவர்களையும் மக்கள் அடித்து துரத்துவார்கள்...

சிங்களத்துக்கும் இது நெத்தியடி. ... எழுக தமிழினம்

**நிதர்சன்** பூநகரி

தமிழரின் அரசினை அழிப்பதற்கு கொழும்பு படும் பாடே இது. முதல்வரை யாராலும் வெல்லமுடியாது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பினை பிரித்தாள மத்திய அரசு கையாளும் இராஜதந்திரமே இது. இது முதல்வரை பதவிலக வைக்கும் நடவடிக்கையே ஆகும். பதவி ஆசையின் உச்சமே இது. ஏனென்றால் தமிழருக்கு இருக்கும் ஒரே பலம் அவர் மட்டுமே.எங்கள் ஆதரவு விக்கி ஐயாவுக்கே ஆகும்.

**ஜெ.சுபாகரன்** முல்லைத்தீவு

வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவை பதவி விலக்கல் கருத்துத் தொடர்பில் தமிழரசுக் கட்சி எழுந்தமான முடிவு எடுக்கக்கூடாது. அப்படி எடுத்தால் மக்கள் அனைவரும் தமிழரசுக் கட்சியை நிராகரிக்க வேண்டி வரும்.

**இரத்தினவடிவேல்** புதுக்குடியிருப்பு

வலம்புரி ஆசிரியருக்கு. ஐயா வணக்கம். தமிழரசுக்கட்சியின் செயல் மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்கது. தமிழினத்தின் சாபக்கேடான கட்சி. தந்தையின் பெயருக்கே அவமானம்.

மாண்புமிகு முதலமைச்சர். சி.வி. விக்கினேஸ்வரன் ஐயா தமிழ் மக்களின் விடிவெள்ளி.

**தி.சுதாமாறன்** பண்ணாகம்

முதலமைச்சர் அவர்களின் செயல் வரவேற்கத்தக்கது.

**தேவா** காரைநகர்

இன்று நேற்றல்ல தமிழரசுக்கட்சி துரோகத்தனமாகவே செயற்பட்டு வருகின்றது.

**கே.ராஜன்** சுன்னாகம்

விக்னேஸ்வரன் ஐயாவே தொடர்ந்தும் முதலமைச்சராக இருக்கவேண்டும்.

**தங்க முகுந்தன்** மு.யா.மா.ச.உ

வடக்கு மாகாண சபை தேர்தலில் 4 கட்சிகள் அவரைக் கூட்டிவந்து இப்போது நடுரோட்டில் வைத்து அவரது மானத்தை, மரியாதையை தூற்றும் தமிழரசுக் கட்சிக்கு எந்தவிதமான அருகதையும் கிடையாது! 2013 செப்டெம்பர் 21 இல் இடம்பெற்ற வட மாகாணசபைத் தேர்தலில் இவர் அதிகூடிய விருப்பு வாக்குகள் (132,255) பெற்று முதலாவதாக வந்தார். இது இலங்கையில் நாடாளுமன்ற, மாகாணசபைத் தேர்தல்களில் தமிழர் ஒருவர் பெற்ற அதிகளவு விருப்பு வாக்குகளாகும். நாம் அவரை வாக்களித்தே முதல் வராக்கினோம்! அவரை மாற்ற எவராலும் முடியாது! அப்படி ஏதாவது அவர் மீது நடவடிக்கை எடுத்தால் பாரிய எதிர் விளைவுகளை தமிழரசுக் கட்சி எதிர் நோக்க வேண்டிவரும்!

**சிவகுமார்** ஆனைக்கோட்டை

நீதியரசர் நீதிக்கு தலை வணங்குகிறார். தமிழரசுக்கட்சி ஊழலுக்கு தலை வணங்குகின்றது.

**சு.யசோதரன்** பண்ணாகம்

விலைபோகாத வீரன் விக்னேஸ்வரன் ஐயா.

**இராஜேஸ்வரன்** பண்டத்தரிப்பு

தமிழரசுக் கட்சி தங்கள் முடிவை யோசிக்க வேண்டும். மீண்டும் பிரச்சினை வராதபடி பார்க்க வேண்டும்.

**இளவழகன்** விசுவமடு

மாகாண உறுப்பினர்களே, பாராளுமன்ற பெரியோரே! மக்கள் ஏன் உங்களுக்கு வாக்கு போட்டார்கள். தர்மத்தின் தேவனான விக்னேஸ்வரனை ஓரம்கட்டவா?

சுயநலவாதிகளே! தமிழ்த்தாய் மண்ணிலும் மக்கள் மனங்களிலும் நெருப்பையல்லவா அள்ளிக் கொட்டி விட்டீர்கள்.

**தவராசா** சாவகச்சேரி

விக்னேஸ்வரன் ஐயாவே எமக்கு வேண்டும். அவருக்காக எதுவும் செய்யத் தயங்கமாட்டோம்.

**சாந்தன்** நவாலியூர்

நேர்மையான, சிந்தனையான நோக்கம் கொண்ட விக்னேஸ்வரன் ஐயாவை நீக்கத் துணிந்த இவர்கள் தமிழீழப் போராட்டத்தையும் தலைவர் பிரபாகரனையும் விரும்பாதவர்களாகவே கருதப்படுகின்றனர். இவர்களைத் தமிழினம் துரோகிகளாகவே பார்க்கிறது.

**துரை** கரவெட்டி

முதலமைச்சர் விக்னேஸ்வரனை மாற்றுவது பிழையான விடயம்.

**ரமேஸ்** பண்டத்தரிப்பு

முதலமைச்சர் இந்த மண்ணுக்குத் தேவை.

**ராஜ்குமார்** யாழ்ப்பாணம்

தமிழரசுக் கட்சிக்கு அஸ்தமனமா?

தமிழ் மக்களுக்கு அஸ்தமனமா?

**சரவணன்** சங்குவேலி

முதலமைச்சர் விக்னேஸ்வரனைப் பாதுகாப்போம். அவரை ஏனைய கட்சி பயன்படுத்துவதைத் தவிர்க்கவேண்டும்.

**கண்ணன்** வடமராட்சி

முதலமைச்சர் விக்னேஸ்வரனை நிறுத்தினால் கூட்டமைப்பு சார்பில் வாக்குக் கேட்டு யாரும் வரமுடியாது.

**சகி** கொற்றையூர்

முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஐயா மீது மேலும் நம்பிக்கையை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

**என்.சிவா** நீர்வேலி

தமிழரசுக்கட்சி தங்கள் சுயரூபத்தைக் காட்டிவிட்டார்கள். நல்லம். இனி எம் வீட்டுக்கு வருவார்களா?

**ந.நாகேந்திரம்** சங்கானை

அற்ப சொற்ப சலுகைகளுக்காக எம் இனத்தின் எதிர்காலத்தை குழி தோண்டிப் புதைக்கும் தமிழரசுக் கட்சிக்கு, தமிழர்களுக்காக தமிழரின் நலன்சார்ந்து பேசும் முதலமைச்சர் விக்னேஸ்வர்ன் ஐயாவை எப்படிப் பிடிக்கும்? விலைபோன் உங்களுடன் கூட்டுச்சேர்ந்ததுதான் முதலமைச்சர் செய்த ஒரே பிழை. அதற்காய் பிழை செய்தவர்களை நியாயவாதிகளாக்க நினைக்கும் தமிழரசுக்கட்சிக்கு எங்கள் மனதில் இடமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெந்தவிதாரணவிடம் மீண்டும் விசாரணை

(கொழும்பு)

முன்னாள் தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் மேஜர்ஜெனரல்கபில ஹெந்தவிதாரணவிடம் மீண்டும் விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவராக மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண பதவியில் இருந்த போது, அவரது வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட 3.2 மில்லியன் ரூபாய் தொடர்பாக நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.



கடந்த 14ஆம் திகதி மேஜர் ஜெனரல் ஹெந்தவிதாரணவிடம், 8 மணிநேரத்துக்கு மேல் விசாரணை நடத்தப்பட்டது. அதன் பின்னர், மீண்டும் மறுநாளான 15ஆம் திகதியும், அவரிடம் தொடர்ந்து விசாரிக்கப்பட்டது.

மீண்டும் அவர் இந்த வாரம் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினால் விசாரணை செய்யப்படவுள்ளார்.

தனிப்பட்ட வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட பணம் தொடர்பாகவே அவரிடம் விசாரிக்கப்பட்டது.

அத்துடன் அது யாரிடம் இருந்து எதற்காக, எப்படி வைப்பிலிடப்பட்டது என்றும், அந்த நிதி எவ்வாறு செலவிடப்பட்டது என்றும் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தகவல்களைத் திரட்டி வருகின்றனர். (இ-7)

# வெடிபொருள் வெடித்ததில் ஒருவர் காயம்

(கொழும்பு)

லிந்துல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊவாக்கலை தோட்டத்தின் வெள்ளி மலை பிரிவில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் காயமடைந்த நபர் லிந்துல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தனது வீட்டின் முன்வாசலில் கிடந்த பொதி ஒன்றினை தடி ஒன்றினால் தள்ளிய போது பொதியினுள் காணப்பட்ட வெடிபொருள் வெடித்து தான் காய மடைந்ததாக அவர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் லிந்துல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (இ-7)

# இந்திய முதலீடுகளை அதிகரிப்பது குறித்து அருண் ஜெட்லியுடன் மங்கள சமரவீர பேச்சு

(கொழும்பு)

இலங்கையில் எதிர்காலத்தில் முதலீடுகளை அதிகரிப்பது தொடர்பாக, இந்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லியுடன், இலங்கை நிதியமைச்சர் மங்கள சமரவீர பேச்சுக்களை நடத்தியுள்ளார். ஆசிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வங்கியின் இரண்டாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை தென்கொரியாவின், ஜேஜு தீவில் இடம்பெற்றது. இதில் இலங்கை, இந்திய நிதியமைச்சர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



இதன் பக்க நிகழ்வாக, இந்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லிக்கும், இலங்கை நிதியமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் இடையிலான பேச்சுக்கள் இடம்பெற்றன.

இதன்போதே எதிர்காலத்தில் இலங்கையில் இந்திய முதலீடுகளை அதிகரிப்பது குறித்து முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (இ-7)

# பொதுபல சேனாவின் மீது சிங்கள மக்கள் வெறுப்பு

## அமைச்சர் அமரவீர சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பொதுபல சேனாவின் செயற்பாடுகள் மற்றும் ஞான சார தேரரின் நடவடிக்கைகள் என்பன குறித்து சிங்கள மக்கள் வெறுப்படைந்துள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பொதுபல சேனா தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத்தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர்மேலும் தெரிவிக்கையில், ஞானசார தேரர் விடயத்தில் பௌத்த மக்களுக்குநம்பிக்கையில்லை. அதே போல் பிரதான தேரர்கள் மத்தியிலும் அவரைப் பற்றிய நல்லதொரு அபிப்பிராயம் கிடையாது.

அனைத்து சமூகத்தினருக்கும் முன்மாதிரியாக இருக்கவேண்டிய மதத் தலைவர்கள் இவ்வாறு இனவாதத்தில் ஈடுபடுவதாக கூறப்படுவது பௌத்த மதத்தினை பின்பற்றுபவர்களுக்கு அவமானமான விடயமாகும். பௌத்த கொள்கைகளை பின்பற்றி நடக்கும் தேரராகவுள்ள அவர், அதற்கேற்ப



நடந்துகொள்ள வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் என்பதுடன், பொது பல சேனா அமைப்பை அரசாங்கம் காப்பாற்ற வில்லை என அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### மனத் தயாரிப்புகள்

சிறு சத்தம் போட்டால் கூட எழுந்து உட்கார்ந்துகொள்ளும் எத்தனையோ பேர், தடதடாதடா என ஓடும் ரயிலில் செம்மையாகத் தூங்குகிறார்களே இது எப்படிச் சாத்தியமாகிறது? எல்லாம் மனம் தான் காரணம் .

ரயிலில் பயணம் செய்யப் போகிறோம் என்றதுமே நம் மனம் நம்முள் பல வேலைகளைச் செய்ய ஆரம்பித்து விடுகிறது. காற்றுச் சரிவர வராவிட்டாலும் வெளிச்சம் இருந்தாலும் தூங்கத் தயாராகி விட வேண்டும். மெத்தை, தலையணை போன்றவை இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்று அந்த மனம் நம் உடலைத் தயார் செய்து விடுகிறது. எனவே அவ்வளவு அசௌகரியம் இருந்தாலும் தூக்கம் வந்து விடுகிறது.எனவே இது ஒருவகை மனத்தயாரிப்பு.

ஒருவர் தன் நண்பர் வேலைக்கு ஆள் கேட்டார் என்பதற்காக ஒரு பையனைச் சேர்த்து விட்டார்.வேலைக்கு ஆளைச் சேர்த்துக்கொண்ட நண்பர் ரொம்பவும் கோபக்காரர். ஆனால் மனதிற்குப் பிடிக்கும் படி நடந்து கொண்டுவிட்டால் நல்ல சம்பளம் மட்டுமல்ல பல் வசதிகளையும் செய்து கொடுப்பார்.வேலைக்குப் பையனைச் சேர்த்து விட்டார் உன்னை வேலையில் சேர்த்துக் கொண்டிருக்கும் ஆள் ரொம்பக் கோபக்காரர் ஆனா கோபம் இருக்கிற இடத்தில் தான் குணம் இருக்கும். எனவே நீதான் பொறுமையா இருந்து அவர் மனதில் இடம் பிடிக்கணும் என்கிற பாணியில் நான்கு வார்த்தை சொல்லியிருந்தால் அந்தப் பையன் வேலையில் நாட்படத் தங்கி இருப்பான்.

சேர்த்துவிட்டவர் எதுவுமே சொல்லாமல் சேர்ந்து விட்டதால் பையன் தாக்குப் பிடிக்க முடியாமல் ஒரே வாரத்தில் வேலையை விட்டுவிட்டான். மனத்தயாரிப்பு இங்கு நிகழாதது தான் இந்த முயற்சி தோல்வி அடையக்காரணம்.

வங்கியில் கடன் தவணையைக் கட்டாத ஒரு நிறுவன ஊழியரை வங்கி முகாமையாளர் கோபித்துக் கொண்டார். ஊழியர் நொந்து போனார். நிறுவனத் தலைவர் கடன் கட்டப்போகும் ஊழியரிடம் இப்படி நடக்க வாய்ப்பு இருக்கிறது என்ற மனத் தயாரிப்புச் செய்திருந்தால் அதே ஊழியர் புண்பட்டிருக்கமாட்டார்.

மனத் தயாரிப்புகள் எந்த வடிவத்தில் வேண்டுமாலும் இருக்கலாம்.ஆனால் இப்படிச் செய்யாமல் விடுகிறது குழப்பத்திற்கு ஏதுவாகிறது.மன வருத்தமும் கோபமும் உண்டாகின்றன.

மலைப்பான வேலைகளைப் பிறரிடம் ஒப்படைக்கும் போதும் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்பதைச் சொல்கிற போதும் சற்று முன்கூட்டியே சொன்னாலும் அவர்கள் மனம் அதற்குத் தயாராகி விடுகிறது.திடுதிப்பென்று சொன்னால் ஒத்துழைப்புச் சரிவரக் கிடைப்பதில்லை

மனத் தயாரிப்பின் இரகசியத்தைப் புரிந்து கொண்டவர்கள் தோல்வி அடைவதே இல்லை.

**லேனா தமிழ்வாணன்**

# வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை குறித்து

# அமைச்சர் ஐங்கரநேசன் தன்னிலை விளக்கம்

(தொடர்ச்சி...)

**குற்றச்சாட்டு இல 4.8**

ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் இதுவரையில் நன்கு வெற்றி யளிக்கவில்லை எனத் தெரிந்திருந்தும், தவறான செல் வாக்கைச் செலுத்தி சாத்தியக்கூற்று அறிக்கையைப் பெற்று புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை முன்னெடுத்து 32 *Million* ரூபாவை வீண்விரயம் செய்தமை.

- முத்தையன்கட்டு திட்டத்தில் மீள ஆரம்பிக்கப்பட்ட ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் பூரண வெற்றியளிக்கவில்லை எனவும் நீர் இறைப்பு இயந்திரங்களை இயக்குவதற்குக் கூடிய செலவுகள் ஏற்பட்டதன் காரணமாகவே உச்ச பயன்பாட்டினைப் பெற முடியவில்லை எனவும் விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முத்தையன்கட்டு திட்டமானது 1990ஆம் ஆண்டு யுத்தச் சூழ்நிலை காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு நிலவியதால் கைவிடப்பட்டு மீள்குடியேற்றத்தின் பின்னர் 2011ஆம் ஆண்டு 17இறைக்கும் பம்பிகள் பொருத்தப்பட்டு 944 ஏக்கர் விவசாய நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டது. இதன்பிரகாரம் 2013ஆம் ஆண்டுவரை முழுமையாக மேட்டுநிலப் பயிர்ச் செய்கை செய்யப்பட்டு 487 பயனாளிகள் உரிய விளைச்சலைப் பெற்று மிகவும் பயனடைந்தார்கள். 2014ஆம் ஆண்டு கடும் வரட்சி காரணமாக 200 ஏக்கர் அளவிலேயே பயிர் செய்யப்பட்டது. எனினும் 2015ஆம் ஆண்டு 900 ஏக்கர் அளவில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. குளப்புனரமைப்பின் காரணமாக சென்ற ஆண்டு எவ்வித பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்களை வெற்றியளிக்காத திட்டமாக காட்ட முயல்வது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

- விவசாயத் திட்டம் ஒன்றை செயற்படுத்த திட்டமிடும் போது நீர்ப்பாசனத்தை மட்டும் நம்பியிருக்காது விவசாய பொருளாதார சாத்தியக்கூற்று அறிக்கையைப் பெற்று முதலீடு செய்ய வேண்டும் என விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புழுதியாறு ஏற்றுநீர்ப்பாசனத் திட்டத்தினை ஆரம்பிக்கும்போது விவசாய, நீர்ப்பாசன, சுற்றுச்சூழல், பொருளாதாரம் மற்றும் நீடித்து நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்திக்கான சாத்திய ஆய்வுகள் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை நியமங்களின் பிரகாரம் நிதி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுமதிக்கப்பட்டே திட்டத்துக்கான முதலீடு செய்யப்பட்டுள்ளது. எனவே விசாரணைக்குழுவின் சபையின் பரிந்துரையைவிட மேலதிக ஆய்வுகளை நிறைவேற்றியிருக்கின்றோம் என்பதனை தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

- விவசாயத் திணைக்களம் முறையாக இச் செயற்றிட்டத்தில் இணைக்கப்படவில்லை எனவும் விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் மற்றும் அப்பகுதிக்கான விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் திட்டம் ஆரம்பிக்கப்பட முன்னரே பல கள விஜயங்களை மேற்கொண்டு மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் அனுபவத்தைப் பெற்றும் மண்வளத்தை ஆராய்ந்தும் எவ்வாறான பயிர்களை நாட்ட முடியுமென தீர்மானித்ததுடன் இத்திட்டத் தொடக்க விழாவின்போது 100 பயனாளிகளுக்கும் ஓர் பொதி வழங்கி இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர். அப்பொதியில் அக்காலபோகத்திற்கான விதைகள் மற்றும் உபகரணங்கள் அடங்கியிருந்தன. அவர்கள் கண்காணிப்பையும் ஆலோசனையும் தற்போதுவரை வழங்கி வருகின்றனர்.

- திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நீர் இறைக்கும் இயந்திரம் இயக்கப்படவில்லை எனவும், தங்களுடன் கலந்துரையாடப்படாமல் செயற்படுத்தப்பட்ட திட்டமெனவும், இத்திட்டத்துக்குப் பதிலாக ஒவ்வொரு காணிக்கும் ஒவ்வொரு கிணற்றினை அமைத்துத் தந்திருக்கலாம் எனவும் பயனாளிகள் குறிப்பிட்டதாகவும் விசாரணை அறிக்கை தெரிவிக்கின்றது.

2015 ஆம் ஆண்டு விவசாய நடவடிக்கை குறித்த பகுதியில் இடம்பெற்றிருக்கின்றது என்பது சகலரும் அறிந்த விடயம். நீர் இறைக்கப்படவில்லையெனில் எவ்வாறு பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க முடியும். அவ்வாறு இயக்கப்படவில்லையெனில் தற்போது எவ்வாறு இயந்திரங்களை இயக்கி விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது? எனவே இது ஊகத்தின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்ட கருத்தாகும். வடமாகாண சபையால் இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் பல கலந்துரையாடல்கள் இப்பகுதி விவசாயிகளுடனும் ஏனைய பங்குதாரர்களுடனும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக நிதி ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டிய சாத்திய அறிக்கை தயாரித்தலின்போது பல தடவைகள் எமது நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளும் விவசாயத் திணைக்கள அதிகாரிகளும் இப்பகுதி மக்க



ளுடன் கலந்துரையாடல்களை நிகழ்த்தியுள்ளனர். எனவே பயனாளிகளுடன் கலந்துரையடப்படவில்லை எனக் கூறப்படுவது உண்மைக்குப் புறம்பானதாகும்.

ஒவ்வொரு காணிக்கும் ஒவ்வொரு கிணற்றினைத் தந்திருக்கலாம் என அபிப்பிராயம் தெரிவித்திருப்பது அறியாமையினால் ஆகும். இப்பகுதியில் காணப்படுகின்ற ஒருசில கிணறுகளில்கூட ஆனி, ஆடி மாதத்தின் பின்னர் நீரினைக் காண்பது மிகவும் அரிதாகும். இவ்வாறான நிலையில் கிணற்றினை அமைத்துக் கொடுத்திருந்தால் நீரற்ற குழிகளை வெட்டிக் கொடுத்ததாக இன்று விசாரணைக்குழு குற்றம் சுமத்தியிருக்கும். உண்மையில் இவ் ஏற்றுநீர்ப்பாசனத் திட்டத்தினை முழுமையாக பயன்படுத்துவார்களேயானால் நிச்சயமாக நிலத்தடி நீர் மேம்படுவதனூடாக கிணறுகளிலும் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும். இத்திட்டம் நடைமுறையில் இல்லையாயின் தனித்தனிக் காணிகளுக்கு கிணறு வெட்டுவதிலும் எந்தப் பயனும் இருக்கப் போவதில்லை.

- விசாரணைக்குழு முன் சாட்சியமளித்த பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் விவசாய அமைச்சரின் கோரிக்கையின் பிரகாரமே இத்திட்டத்தினை செயற்படுத்தியதாகவும், அமைச்சரின் நெருக்குதல் காரணமாக நிர்மாணிக்கப்பட்ட இத்திட்டம் எதிர்பார்த்த இலக்கை அடையாத காரணத்தால் இதற்கு விவசாய நீர்ப்பாசன அமைச்சரே பொறுப்புக்கூற வேண்டும் எனத் தாங்கள் அபிப்பிராயப்படுவதாக விசாரணைக்குழுவினர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இவ்வறிக்கை ஊடகங்களில் வெளியானதன் பின்னர் என்னைச் சந்தித்த பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப்போன்று எனது கோரிக்கையின் அடிப்படையிலேயே இத்திட்டம் செயற்படுத்தப்பட்டதாகத்தான் எதனையும் விசாரணைக்குழுவுக்கு தெரிவிக்கவில்லையெனவும் தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து மூலமான அறிக்கையில் உள்ள தகவல்களையே தனது வாக்கு மூலத்திலும் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார். சாத்தியம் இல்லாத திட்டங்களை அதிகாரிகளை நிர்ப்பந்தித்து செய்வதற்கு நான் ஒன்றும் சித்தசுவாதீனம் அற்றவன் அல்ல. உண்மையில் இத்திட்டம் நீண்டகாலமாக இப்பிரதேச மக்களால் விடப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு திட்டமாகும். எனினும் வடமாகாண சபை தோற்றம் பெற்ற பின்னர் மாகாண சபையின் அமர்விலே கிளிநொச்சி மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் கௌரவ சு.பசுபதிப்பிள்ளை அவர்களின் முன்மொழிவைத் தொடர்ந்தே விவசாய அமைச்சினுள் இது உள்வாங்கப்பட்டு திணைக்களத்தினூடாக, இத்திட்டத்தினை செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் செயலாளரால் பணிக்கப்பட்டிருந்தது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான டீசல், நீர் இறைக்கும் இயந்திரத்தின் இயக்கச் செலவு அதிகமாக இருக்கும் என்பது வெளிப்படை. ஆனால் மலையகத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்து இப்பகுதியில் ஏழ்மையில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு இந்தத் திட்டத்தை எந்த விலை கொடுத்தேனும் செயற்படுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு எங்களுக்கு உண்டு. விவசாயம் அங்கு கைவிடப்படவில்லை. நடைபெற்று வருகிறது. காலதாமதம் ஆனாலும் இத்திட்டம் அதன் எதிர்பார்த்த இலக்கை அடையும். இத்திட்டத்தினால் ஏற்படும் நேரடியானதும், மறைமுகமானதுமான விளைவுகள் பொது நிதியில் இருந்து செலவிடப்பட்ட 32 மில்லியனுக்கு உரிய மீள்பெறுகையை அனுமானித்தே இத்திட்டம் நிதி ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டது என்பதை இங்கு தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

**குற்றச்சாட்டு இல 4.9 (அ)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்கோ பாற்பண்ணை கூட்டுறவுச்சங்கத்துக்கு 2014 ஆம் ஆண்டு மே மாதம் வரை தலைவராக இருந்த திரு. பெரியதம்பி இராசநாயகம் ரஞ்சன் என்பவரை நியாயமான காரணங்களின்றிக் கூட்டுறவு ஆணையாளர்ருக்கு ஊடாக அதிகார துஷ்பிரயோகம் மூலம் பதவி நீக்கம் செய்தமை

- அரசாங்க அதிபரின் சிபார்சின்படி பொதுச்சபைக்கு நியமிக்கப்பட்டு, பொதுச்சபையால் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு 30.04.2014 வரை தலைவராகக் கடமையாற்றிய திரு.இ.ரஞ்சனது பதவி பறிக்கப்பட்டு, அப்பதவிக்கு அரசாங்க அதிபரின் சிபார்சினால் நியமிக்கப்படாத திரு. இ.சர்வேஸ்வரா நியமிக்கப்பட்டுள்ளார் என விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு.இராசநாயகம் ரஞ்சன் அவர்கள் அரசாங்க அதிபரின் சிபார்சுப்படி பொதுச்சபைக்கு நியமிக்கப்பட்டு, பொதுச்சபையால் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டவர் என்பது தவறான கருத்தாகும். இவர் ஒரு நியமனத் தலைவர் ஆவார். இவர் சங்கத்தின் துணைவிதிப் பிரிவு 35.1 இன் கீழ் அரசாங்க அதிபரினால் பெயர் குறித்து விதப்புரை செய்யப்பட்டு கூட்டுறவு உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்டவர். எனினும் இவர் மீது சங்கத்தின் உறுப்பினர்களாக உள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் தொடர்ச்சியாக முறைப்பாடுகளைத் தெரிவித்து வந்ததன் அடிப்படையிலும், யாழ்கோவின் செயற்பாடுகள் குறித்து மாகாண கால்நடை அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையிலும் இவர்மீது விசாரணைகளை மேற்கொள்வதற்கு வசதியாகத் தலைவராக திரு. இரத்தின சிங்கம் சர்வேஸ்வரா 01.05.2014 இல் கூட்டுறவு உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்டார். இந் நியமனத்தின் மூலம் திரு.பெரியதம்பி இராசநாயகம் ரஞ்சன் தலைவர் பதவியில் இருந்து நீங்கி, இயக்குநர் சபையின் ஒரு உறுப்பினராகப் பதவி நீடித்தார்.

- திரு. இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா அரசாங்க அதிபரின் சிபார்சு இன்றி நியமிக்கப்பட்டது தவறு என்று விசாரணைக்குழு தெரிவித்துள்ளது.

கூட்டுறவு உதவி ஆணையாளருக்கென 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் கீழ் வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 1973 நவம்பர் 20ஆம் திகதிய தேசிய அரசப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டதுமான விதி 20க்கு அமைவாக ஒரு தலைவரை அல்லது உபதலைவரை அல்லது இருவரையும் நியமிப்பதற்கு அதிகாரம் உண்டு. இந்தத் தத்துவத்தின் அடிப்படையிலேயே அரசாங்க அதிபரின் பரிந்துரை இல்லாமல் உதவி ஆணையாளர் திரு. இரத்தின சிங்கம் சர்வேஸ்வராவை சங்கத் தலைவராக நியமனம் செய்துள்ளார் இது முறை கேடானது அல்ல. சட்டபூர்வமானது.

- விசாரணை அறிக்கையில் தம்மால் முறைகேடாக நியமிக்கப்பட்ட திரு. இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா மற்றும் திரு.கந்தையா மகாதேவன் ஆகியோரது பெயர்களை தனது கடிதத்தில் உள்ளடக்கி அதுவும் நியமனம் வழங்கப்பட்டபின் ஏறக்குறைய ஒருவருடத்தின் பின்னரே கூட்டுறவு உதவி ஆணையாளரால் அரசாங்க அதிபருக்கு விண்ணப்பம் செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நான் விசாரித்து அறிந்தவரையில் இத்தகவல் உண்மையேயாகும்.எனினும், அரசாங்க அதிபரிடம் இந்நியமனத்துக்கு விண்ணப்பித்து அனுமதி பெறப்பட்டது அவசியம் அற்ற ஒன்றாகும். ஏனெனில், தொடர்ந்தும் இவர்களது நியமனம் கூட்டுறவு உதவி ஆணையாளரால் அவருக்கு உரித்தான தத்துவத்தின் கீழ் விதிப்பிரிவு 20இன் கீழேயே இடம்பெற்று வந்துள்ளது. எனவே இதன் முறைகேட்டை மறைப்பதற்கான ஒரு நடவடிக்கையாகக் கொள்ள இயலாது.

- இந் நியமனக்காலத்தில் கூட்டுறவுத் திணைக்களம் எனது அமைச்சிடம் இணைக்கப்பட்டு இருக்கவில்லை. கௌரவ முதலமைச்சர் அவர்களது அமைச்சுடனேயே இணைக்கப்பட்டு இருந்துள்ளது என்பதைக் கவனத்தில் கொள்வதாக விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கௌரவ முதலமைச்சர் அவர்கள் தனது வேலைப்பளு காரணமாக, கால்நடைத் திணைக்களம் எனது அமைச்சுக்கு உட்பட்டது என்ற வகையால் யாழ்கோ விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துமாறு என்னைக்கேட்டிருந்தார். அதன் அடிப்படையில் கூட்டுறவு ஆணையாளர் கடிதம் மூலம் என்னிடம் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக, யாழ்கோவின் இயக்குநர் சபைக்கு நியமனம் செய்வதற்குரிய நால்வரின் பெயர்களை எனது செயலாளரின் ஊடாகப் பரிந்துரை செய்திருந்தேன். கூட்டுறவு ஆணையாளர், கௌரவ முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்றே இந் நியமனங்களை மேற்கொண்டுள்ளார். அந்த வகையில் இங்கு முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாக நான் கருதவில்லை.

(தொடரும்...)

## வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை குறித்து

# அமைச்சர் குருகுலராசா தன்னிலை விளக்கம்

(தொடர்ச்சி...)

கௌரவ வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் அவர்கள் இது தொடர்பாக எந்த முறைப்பாட்டினையும் எனக்கு மேற்கொள்ளவில்லை. நான் அறிந்தவரையில் குற்றச்சாட்டில் குறிப்பிட்டிருப்பது போல 2015ஆம் ஆண்டில் கிளி/பாரதிபுரம் வித்தியாலயத்தில் இவ்வாறான சம்பவம் எதுவுமே நடைபெறவில்லை. எனவே இக்குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது. ஆதலினால் இதிலிருந்து கௌரவ வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் அவர்கள் முற்றிலும் ஆதாரமற்ற அடிப்படையில் உண்மைக்கு மாறான குற்றச்சாட்டினை இவ்விசாரணைக் குழுவிற்கு சமர்ப்பித்திருந்தமை புலனாகின்றது.

ஆயினும் 2014ஆம் ஆண்டிலே அப்பாடசாலையில் இவ்வாறான சம்பவம் ஒன்று தொடர்பாக கிளி/பாரதிபுரம் வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திருமதி.ச.ஜெயகாந்தன் என்பவரினால் எனக்கு 2014.07.25ஆம் திகதியிட்ட கடிதமூலம் முறைப்பாடு செய்திருந்தார். இது குறித்து விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு ஒழுக்காற்று அதிகாரியான கல்வி அமைச்சின் செயலாளருக்கு எனது tkh/mm/fgtp,/f/05 இலக்க 2014.07.28 ஆம் திகதிய கடிதமூலம் அறிவுறுத்தியிருந்தேன்.

இக்கடிதத்தை முன்னிலைப்படுத்தி கல்வி அமைச்சின் செயலாளரினால் NP/3/2/GA/Kil இலக்க 2014.08.13 திகதிய கடிதமூலம் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு முகவரியிட்டு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்குப் பிரதியிட்டு "பாடசாலை விடுமுறை காலமாக இருப்பினும் இம்முறைப்பாட்டுக்கு முன்னுரிமை ளித்து சம்பந்தப்பட்டவர்களை அழைத்து உரிய விசாரணை நடத்தி தங்கள் அவதானிப்புடன் அறிக்கையினை அனுப்புமாறு" கோரி அதற்குரிய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்.

ஏற்கனவே குற்றச்சாட்டு 3.5 ஆ, 3.5 இ என்பன விசாரணைக்குழுவினால் நிராகரிக்கப்பட்டுள்ளமை இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது.

**முறைப்பாடு 3.6 இற்கான விளக்கங்கள்**

3.6 கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயத்திலும் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் பாடசாலையிலும் தனக்கேற்றவர்களை அதிபராக நியமனம் செய்ய கல்வி அமைச்சின் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்தமை. மேற்படி குற்றச்சாட்டு தொடர்பாக,

Governor's Memorandum 2013/01ன் பிரகாரம் பிரிவு 2 C ன் பிரகாரம் அதிபர்களை நிலைப்படுத்தல், இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன குறித்த அதிகாரம் ஆளுநரால் மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கே கையளிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பான வகைகூறலுக்கும் நடவடிக்கைக்கும் பொறுப்பானவர் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரே ஒழிய மாகாண கல்வி அமைச்சர் அல்லர் என்பது இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக எனது கருத்துக்கள் பின்வருமாறு

கல்வி அமைச்சின் செயலாளரால் 2015.04.29 ஆம் திகதியிட்டு பத்திரிகையில் வடமாகாணத்தில் வெற்றிடமாக இருந்த 153 பாடசாலை அதிபர்களுக்கான விளம்பரம் செய்யப்பட்டது. அதன் பிரகாரம் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் அதிபர் நேர்முகத்தேர்விற்கு தோற்றிய இருவரில் திருமதி.ஜெ.தனபாலசிங்கம் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றிருந்தார்.

அவ்வேளை கிளி/கனகபுரம் மகா வித்தியாலயத்திற்கும் கிளி/புனித திரேச பெண்கள் கல்லூரிக்கும் திரு மதி. இராசரஞ்சிதம் இரவீந்திரநாதன் மாத்திரமே இவ்விரு பாடசாலைகளுக்கும் நேர்முகத்தேர்விற்கு தோற்றியிருந்தார். இக்குறித்த அதிபர் கிளி/கனகபுரம் மகா வித்தியாலயத்திற்கு அதிபராக கடமையாற்றுவதற்கே தனது சம்மதத்தை தெரிவித்திருந்தார். இதனால் திருமதி.ஜெ.தனபாலசிங்கம் ஏற்கனவே அதிபராக கடமையாற்றியிருந்த கிளி/புனித திரேச பெண்கள் கல்லூரிக்கு அதிபர் பதவி வெற்றிடம் ஆகியது.

எனவே 1AB தரத்திலான கிளிநொச்சியின் ஒரே மகளிர் பாடசாலையான கிளி/புனித திரேச பெண்கள் கல்லூரிக்கு சேவையின் தேவை கருதி உடனடியாக தரம் 1 இலுள்ள பெண் அதிபர் ஒருவரை நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தரம் 1 இலுள்ள பெண் அதிபர்கள் வடமாகாணத்தில் மிகவும் அருகிக் காணப்பட்டமையால், அக்காலப் பகுதியில் சங்கானைக் கோட்டக் கல்வி அலுவலராக இருந்த செல்வி. அன்ரனி சாந்தா அவர்கள் இப்பணியை பூரண விருப்புடன் மேற்கொள்வதற்கு தனது சம்மதத்தை தெரிவித்திருந்தார்.

இச்சந்தர்ப்பத்தில் வடமாகாண கல்வி அமைச்சின்



செயலாளர் NP/03/01/02/06/01 இலக்க 2015.06.23 ஆம் திகதிய கடித மூலம், தம்மால் நேர்முகத்தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான அதிபர்களின் பெயர்ப்பட்டியலை எனது ஆலோசனைக்காகவும், அனுமதிக்காகவும் சமர்ப்பித்திருந்தார். இப்பட்டியலில் கிளி/புனித திரேச பெண்கள் கல்லூரிக்கான அதிபர் பதவி வெற்றிடமாக காணப்பட்டது.

எனவே சேவையின் தேவை கருதி செல்வி.அன்ரனி சாந்தா அவர்களை கிளி/புனித திரேச பெண்கள் கல்லூரிக்கு நியமனம் செய்யுமாறு என்னால் ஆலோசனை வழங்கப்பட்டது. இவ் ஆலோசனை அரசியலமைப்புச் சட்டத்தின் 154F 1 பிரிவுக்கு அமைவானது என்பது இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது. இங்கு இது தொடர்பாக எதுவிதமான அழுத்தத்தையும் யார் மீதும் நான் பிரயோகித்திருக்கவில்லை. மேலும் சேவையின் தேவை கருதியும், நேர்முகப் பரீட்சையினதும் அடிப்படையிலேயே இவ்வதிபர்கள் நியமிக்கப்பட்டார்களே ஒழிய எனக்கு வேண்டியவர்கள் எனக் குறிப்பிடுவது முற்றிலும் தவறானதாகும். எனவே இக்குற்றச்சாட்டு வெற்றும் வெறிதானதுமாகும் (Null & Void).

**முறைப்பாடு 3.7 இற்கான விளக்கங்கள்**

3.7 வட மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் ஆசிரியர் மாநாடு என்ற பெயரில் பெருமளவில் நிதி செலவழித்து வீண்விரயம் செய்தமை.

நிதி விடயம் தொடர்பான வட மாகாண சபையின் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் பிரதம செயலாளர் ஆவார் (Chief Accounting Officer). செலவினத் தலைப்பு 440 இற்குரிய (Vote Head) கணக்கீட்டு உத்தியோகத்தர் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆவார். செலவினத் தலைப்பு 441 க்குரிய (Vote Head) கணக்கீட்டு உத்தியோகத்தர் மாகாண கல்விப் பணிப்பாளர் ஆவார்.

எனவே அரச நிதிப் பிரமாணங்களின் படி இவ்விடயம் தொடர்பாக வகை கூற வேண்டியவர்கள் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரும், கணக்கீட்டு உத்தியோகத்தர்களுமே ஆவர்.

மாகாண கல்வி அமைச்சர், பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரோ அன்றி கணக்கீட்டு உத்தியோகத்தரோ அல்லர். எனவே இக்குற்றச்சாட்டினை மாகாண கல்வி அமைச்சர் மீது சுமத்துவது எவ்விதத்திலும் பொருத்தமானது அன்று என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே என்மீது சுமத்தப்பட்ட இக்குற்றச்சாட்டு வெற்றும் வெறிதானதுமாகும்(Null & Void). ஆயினும் இவ்விடயம் தொடர்பாக பின்வரும் கருத்துக்களை முன்வைக்கிறேன்.

இந்நிதியானது நிதி ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு, திறைசேரி மூலம் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரான பிரதம செயலாளருக்கும், அவரிடமிருந்து 441 செலவுத்தலைப்பிற்குரிய மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் வழங்கப்பட்டது. எனவே அரச நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் இந்நிதிக்கான பூரண வகை கூறலுக்குரியவர்கள் மாகாண கல்விப் பணிப்பாளரும், பிரதம செயலாளருமே ஆவர்.

வடக்கு மாகாண சபையின் 2015ஆம் ஆண்டிற்கான கல்வி அமைச்சுக்கான வரவு- செலவு திட்டத்தில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியாக ரூபாய் 969 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவை நிதி ஆணைக்குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. குறித்த திட்டங்கள் நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டலுக்கமையவே ஒதுக்கீடு செய்யப்பட முடியும். அந்த வகையில் 2016 ஆம் ஆண்டிற்காக 969 மில்லியன் எவ்வாறு செலவு செய்யப்பட வேண்டும் என்கிற விபரம் நிதி ஆணைக்குழுவின் 2015.11.26 ஆம் திகதி FC/03/02/2016 இலக்க கடிதம் மூலம் அனுப்பப்பட்டிருந்தது. இங்கு ஆசிரிய மாநாட்டிற்காக ரூபாய் 80 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. தொடர்ந்து இம்மாநாடு எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்கிற வழிகாட்டி நிதி ஆணைக்குழுவின் 10.12.2015 ஆம் திகதிய FC/3/2/2016 இலக்க கடிதம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இவ்வழிகாட்டியின் ஏற்பாடுகளுக்கமைய திட்டம் தயாரிக்கப்பட்டு நிதி ஆணைக்குழுவிற்கு அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. வடக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தியில் வேறு பல தேவைகள் முன்னுரிமை பெறுவதால் ஆசிரிய அதிபர் மாநாட்டிற்கு ரூபாய் 40 மில்லியன் மட்டுமே ஒதுக்கீடு செய்வதற்காக திட்ட வரைவு நிதி ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து நடைமுறைப்படுத்தும் போது ஆசிரிய அதிபர் மாநாட்டிற்கான ஒதுக்கீடு ரூபாய் 24 மில்லியனாக மேலும் குறைக்கப்பட்டிருந்தது.

மிகுதி ஆசிரியர்களுக்கான கதிரை, மேசைகள், மாணவர் தளபாடங்கள் ஏனைய கட்டுமானங்களுக்காக ஒதுக்கப்பட்டன. இவ் ஆணைக்குழுவின் வழிகாட்டலுக்கமைய ஆசிரியர் மாநாடு நடைபெற்றதா? என்பது மாகாண திட்டமிடல் பிரிவினரால் கண்காணிக்கப்பட்டு செயற்பாட்டு அறிக்கையும் பெறப்பட்டிருந்தது.

நிதி நடைமுறைகள், சிக்கனத்தன்மை என்பன பேணப்பட்டு மொத்தமாக ரூபாய் 23.5 மில்லியன் மட்டுமே ஆசிரிய அதிபர் மாநாட்டிற்காக செலவு செய்யப்பட்டிருந்தது. வலய ரீதியான செலவு விபரம் வருமாறு.

| இல. | விபரம் | ஆசிரியர் மாநாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி | ஆசிரியர் மாநாட்டிற்கான செலவீனம் | அதிபர் மாநாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி | அதிபர் மாநாட்டிற்கான செலவீனம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | மாகாணக்கல்வித் திணைக்களம் | - | - | 16000000.00 | 417475.00 | 417475.00 |
| | யாழ்ப்பாணம் | 2990000.00 | 2326945.58 | | 207170.00 | 2534115.58 |
| | வலிகாமம் | 3040000.00 | 2650706.23 | | 262162.00 | 2912868.23 |
| | வடமராட்சி | 1910000.00 | 1859185.00 | | 221350.00 | 2080535.00 |
| | தென்மராட்சி | 1310052.00 | 1310042.00 | | 193615.06 | 1503657.00 |
| | தீவகம் | 840000.00 | 811923.00 | | 211010.00 | 1022933.00 |
| | கிளிநொச்சி | 2000000.00 | 1370098.90 | | 196451.90 | 1566550.80 |
| | முல்லைத்தீவு | 2700000.00 | 2438202.78 | | | 2438202.78 |
| | துணுக்காய் | 1300000.00 | 1103107.00 | | 153960.00 | 1257067.00 |
| | வவுனியா வடக்கு | 1700000.00 | 1668893.50 | | 192070.00 | 1860963.50 |
| | வவுனியா தெற்கு | 2730000.00 | 1889034.60 | | 85392.50 | 1974427.10 |
| | மடு | 1250000.00 | 1250000.00 | | 166815.00 | 1416815.00 |
| | மன்னார் | 2750000.00 | 2359193.00 | | 235855.00 | 2595048.00 |
| | மொத்தம் | 24520052.00 | 21037331.59 | | 2543326.40 | 23580657.99 |

ஆசிரியர் மாநாடு என்பது வெறும் இரண்டு நாட்களில் நடத்தி முடிக்கப்படும் விடயமல்ல. ஒரு ஆசிரியர் மூாநாடு என்பது பின்வரும் பல விடயங்களை உள்ளடக்கியது.

- முன்னாயத்தப்படுத்தல் - மாகாண வலய ரீதியாக
- விளக்கக் கூட்டங்கள் நடத்துதல் - மாகாண வலய ரீதியாக
- கண்காட்சி நடத்துதல் தொடர்பான ஏற்பாடுகள்
- ஆசிரியர்களின் ஆய்வுக்கட்டுரைகள் பெறல்
- கலை நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தல்
- பேருரைகள்
- துறைசார்ந்த நிபுணத்துவம் உடையோரிடமிருந்து ஆய்வுக் கட்டுரைகள் பெறல்
- ஆய்வரங்கு ஒழுங்கு செய்தல்
- மண்டப ஒழுங்குகள்
- சஞ்சிகை வெளியிடல்

என பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய ஒன்றாகும். அத்துடன் இது 12 வலயங்களிலும் நடத்தப்பட்ட ஒரு நிகழ்வாகும்.

இம் மாநாட்டை நடத்துவதற்கு பல நாட்கள் பலரது கடின உழைப்பு தேவைப்பட்டது. முதலில் ஒவ்வொரு வலயக்கல்விப் பணிப்பாளர்களையும் அழைத்து அவர்களுக்கு மாநாட்டின் நோக்கம், அது எவ்வாறு நடத்தப்பட வேண்டும், என்ன நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும் போன்ற விபரங்கள் கொடுக்கப்பட்டன.

தொடர்ந்து வலயக்கல்விப் பணிப்பாளர்களால் பல தடவைகள் ஆசிரியர்கள் அதிபர்களையும் அழைத்து பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன. அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு பொறுப்பும் நிறைவேற்றப்பட பல நாட்கள் எடுத்தன. உதாரணமாக கண்காட்சி நடத்துவதற்கு ஒவ்வொரு பாடத்திற்குமான உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டு அவர்கள் ஒவ்வொரு பாடத்திற்குமான காட்சிப் பொருளை தயாரிக்கும் பணியில் அமர்த்தப்பட்டனர். இதற்காக ஒவ்வொரு பாடசாலைக்கும் அவர்கள் சென்று காட்சிப்பொருட்களை உருவாக்குவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரணி மத்திய கல்லூரியில் கற்றல் வளநிலைய கண்காட்சி நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஆரம்பமானது.கற்றல் வள நிலைய ஆசிரியர் திருமதி க.உமாபாலன் தலைமையில் நடந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வரணி பிரதேச நூலக உதவி நூலகர் வை.சிவானந்தன் கலந்து கொண்டு காட்சிக் கூடத்தை திறந்து வைத்தார். இந் நிகழ்வில் ஆசிரியர்கள். மாணவர்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டு கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

# முதல்வர்-தமிழரசுக் கட்சி இடையே விரைவில் சமரசம் ஏற்பட வேண்டும்

## அமைச்சர் மனோ கணேசன் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தில் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் பாரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அப்பிரச்சினைக்கு விரைவில் சமரச தீர்வு ஏற்பட வேண்டும். அப்போது தான் தமிழ் மக்கள் நிம்மதியோடு வாழ முடியும் என அமைச்சர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.**

ஹற்றன்புகையிரத நிலையம் மற்றும் புதிய கடைத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் உருவாக்கத்தின் பின் எமது சமூகம் தலை நிமிர்ந்து சுய மரியாதையுடன் வாழும் சூழல் ஏற்பட்டுள்ளது.

அதன் ஒரு கட்டமே இன்றைய அடிக்கல் நாட்டும் நிகழ்வு விரைவில் ஹற்றன் டிக்கோயா நகரசபையும் தலவாக்கலையும் மாநகரசபையாக மாற்றம் பெறும். இது வரை நகரசபை தலைவர்களே இருந்தனர்.

மாநகரசபையான பின் மேயர்களே எமக்கு கிடைப்பார்கள் இதையும் எதிர்காலத்தில் சிலர் தானே செய்ததாக செல்வார்கள் அவ்வாறு செய்வதாயின் 40 ஆண்டுகள் அமைச்சராக இருந்த போது செய்திருக்க வேண்டும். தற்போது நாங்கள் செய்கின்றோம்.

நீங்கள் வேடிக்கை மட்டும் பாருங்கள் என சொல்லி வைக்க விரும்புகிறேன் இன்று நாங்கள் தேசிய இனமாக அடையாளப்படுத்தி வருகின்றோம். தற்போது வடக்கு மாகாணத்தில் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் பாரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

அவை விரைவில் சமரசமடையவேண்டும் தமிழ் மக்கள் நிம்மதியோடு வாழ வேண்டும் என்பது தமிழ் முற்போக்கு கூட்டணியின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

நமது சமூகம் அபிவிருத்தியடைந்து வருகின்றது வீட்டுத்திட்டம் பாதை அபிவிருத்தி,கல்வி,காணி உரிமை போன்ற விடயங்களில்நாம் அபிவிருத்தியடைந்து வருகின்றோம். தொடர்ந்தும் நாம் ஒற்றுமையுடன்இருந்து எமது அரசியல் ரீதியான உரிமைகளை வென்றெடுப்போம் என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (இ-7)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1108

Search for people, places and things Nagendram Home

**கேசவன்**




**பிருத்தி**




**மோகன்**




**நர்மதா**




**கிரிசன்**

வீட்டுக்கு வந்த விருந்தாளியிடம்...
பெண்: இலையை மடிக்காதீங்க அப்படியே இருக்கட்டும்.
விருந்தினர் : ஏன் மடிக்க வேண்டாம்னு சொல்றீங்க
பெண் : அடுத்து வர்றவங்க சாப்பிடத்தான்.
விருந்தினர் : ஐய்யோ! அவங்க கோவிச்சுக்க மாட்டாங்களா?
பெண் : இப்போ நீங்க கோவிச்சிட்டீங்களா என்ன?

**லோஜி**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் நீர்வள மேம்பாடும் யாழ். பல்கலையில் நீரியல் துறை அமைய வேண்டிய தேவையும்

மாகாணத்திற்குள்ள ஆற்று வடிநிலங்களுள் பெரியது கனகராயன் ஆற்றுவடிநிலமாகும். இதற்கு அடுத்து பரங்கியாறு, நெய்யாறு, பாலியாறு, பேராறு, மண்டல்கல் ஆற்று வடிநிலங்கள் பெரிளனவாக இருக்கின்றன. அநேகமாக எல்லா ஆறுகளிலும் நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆறுகளின் உற்பத்தி பகுதியில் இருந்து கடலையடையும் வரையும் பிரதான ஆற்றிலும் மற்றும் கிளையாறுகளிலும் குறுக்கே இடையிடையே குளங்கள் காணப்படுகின்றன. இதனை Cascade மாதிரி என அழைக்கப்படும். பெருநிலத்தில் 2 ஆயிரம் சிறிய, நடுத்தர, சிறிய குளங்கள் காணப்படுகின்றன.

இப்பெரு நிலப் பிரதேசம் 7557 சதுரகிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டது. மேலும் 500 சதுர கிலோமீற்றர் பெரிய நீர்ப் பரப்புக்களைக் கொண்டுள்ளது. மொத்த நிலப்பரப்பில் 50 வீதத்திற்கு மேற்பட்ட பிரதேசம் காட்டுப் பகுதிகளாக இருப்பதனால் நீர் இயற்கையாக வழிந்தோடும் பண்பைக் கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அட்டவணை II)

பெருநிலப் பரப்பில் இருக்கும் முக்கிய நீர்ப்பாசன குடியேற்றத் திட்டங்கள் மாவட்ட ரீதியில் பின் வருமாறு, (அட்டவணை II)

நீர்ப்பாசன மேட்டுநிலப் பரப்புக்களின் அளவு ஹெக்டரில் தரப்பட்டுள்ளன.


பெருநிலப் பகுதியில் இரண்டு வகையான புவிச்சரிதவியல் பண்புகள் கொண்ட பிரதேசங்கள் காணப்படுகின்றன.

I. பெருநிலப் பகுதியின் மத்திய பகுதி

II. பெருநிலப் பிரதேசத்தின் மேற்கு, வடக்கு, கிழக்கு கரையோரப் பிரதேசங்கள்

பெருநிலப் பகுதியின் மத்திய பகுதி கேம்பிரியன் காலத்துக்கு முந்திய உருமாறிய பாறைகளைக் கொண்டது. இங்கு கருங் கற்கள், பளிங்கடுக்குப் பாறைகள், படிகப்பார் போன்றன காணப்படுகின்றன. இப்பிரதேசம் 100 மீற்றருக்கு உயரம் குறைந்த பகுதியாக இருப்பினும் மூன்று கரையோரச் சமவெளிகளையும் விட உயரமான பகுதியாக உள்ளது. அருவிகளின் பாதைகள், குறைகள், பிளவுகள்ஆகியவற்றைஅண்டி மட்டுப்படுத்தப்பட்ட தரைகீழ் நீர் வளம் காணப்படுகிறது. முல்லைத்தீவு பிரதேசத்தில் தண்ணீரூற்றுக் கிராமத்தில் காணப்படும் நீரூற்று ஒரு பிளவில் ஏற்பட்டுள்ளதெனக் கூறப்படுகின்றது.

| கிளிநொச்சி மாவட்டம் | நீர்ப்பாசனம் (H) | மேட்டுநிலம் (H) | மொத்தம் (H) |
|---|---|---|---|
| இரணைமடு | 8451 | 3380 | 11831 |
| புதுமுறிப்பு | 399 | 160 | 559 |
| வன்னேரிக்குளம் | 140 | 56 | 196 |
| கல்மடு | 182 | 87 | 259 |
| அக்கராயன் குளம் | 1285 | 490 | 1775 |
| பிரமந்தனாறு | 244 | 98 | 342 |
| கனகாம்பிகைக்குளம் | 105 | 42 | 147 |
| **முல்லைத்தீவுமாவட்டம்** | | | |
| கணுக்கேணிக்குளம் | 734 | 294 | 1028 |
| வவுனிக்குளம் | 2428 | 2249 | 4677 |
| பணங்காமம்குளம் | 121 | 48 | 169 |
| தண்ணிமுறிப்புக்குளம் | 960 | 384 | 1344 |
| முத்தையன்கட்டு | 2473 | 3556 | 6029 |
| அம்பலப்பெருமாள்குளம் | 280 | 162 | 442 |
| கோட்டைகட்டிய குளம் | 344 | 170 | 514 |
| முறிகண்டிக்குளம் | 144 | 131 | 275 |
| உடையார் கட்டுக்குளம் | 486 | 69 | 555 |
| விஸ்வமடுக்குளம் | 157 | 63 | 220 |
| தென்னியன்குளம் | 304 | 245 | 549 |
| கொல்லவிளான்குளம் | 108 | 108 | 216 |
| ஐயன்குளம் | 385 | 154 | 539 |
| தேராங்கண்டல் குளம் | 121 | 48 | 169 |
| மருதங்குளம் | 182 | 73 | 255 |
| நித்திகைக்குளம் | 154 | 62 | 216 |
| மல்லாவிக்குளம் | 132 | 53 | 185 |
| மதவெலசிங்கள குளம் | 161 | 64 | 225 |
| **மன்னார் மாவட்டம்** | | | |
| கட்டுக்கரைக்குளம் | 9890 | 3956 | 13846 |
| பெரியமடு | 304 | 202 | 506 |
| பண்டிவிரிச்சான் | 245 | 172 | 147 |
| வியாடிக்குளம் | 1180 | 472 | 1652 |
| கரியாலை நாகபடுவான் | 607 | 468 | 1075 |
| கூரைக்குளம் | 214 | 86 | 300 |
| முள்ளிக்குளம் | 152 | 101 | 253 |
| அடம்பன் குளம் | 162 | 65 | 227 |
| அகந்தி முறிப்பு | 1837 | 735 | 2572 |
| **வவுனியா மாவட்டம்** | | | |
| ஈரப் பெரிய குளம் | 245 | 98 | 343 |
| மருதமடு | 177 | 71 | 248 |
| முகத்தான் குளம் | 313 | 125 | 438 |
| பெரிய தம்பானை | 117 | 76 | 193 |
| கல்மடுக்குளம் | 162 | 65 | 227 |
| சேமமடு | 243 | 162 | 405 |
| பாவற்குளம் | 1392 | 275 | 1667 |
| கல்விளான்குளம் | 162 | 88 | 250 |
| கல்லாறு அணைக்கட்டு | 243 | 97 | 340 |


வடமாகாணத்தின் காட்டுப் பரம்பல்

பெருநிலத்தின் மேற்கு, வடக்கு, கிழக்குக் கரையோரப்பகுதிகள் மயோசீன் காலத்திலும் பிளிஸ்ரோசின் காலத்திலும் மற்றும் அண்மைக் கால படிவுகளைக் கொண்டுள்ளன. மேற்கு கரைகளில் சுண்ணாம்புக் கல் காணப்படும் இடங்களில் தரைகீழ் நீர்தாங்கு படுக்கைகள் இருப்பதாக அறியக் கிடக்கின்றன.

பெருநிலப்பரப்பின் வடக்கு கிழக்கு கரையோரப் பகுதியில் காணப்படும் வண்டல் மண் படிவுகளிலும் தரைகீழ் நீர் காணப்படுகின்றது. பெரு நிலப்பரப்பில் காணப்படும் உள்ளார்ந்த தரைகீழ் நீர் சரியாக அறியப்படவு மில்லை. முழங்காவில், முருங்கன், கொண்டாச்சி ஆகிய மூன்று பிரதேசங்களில் நீர்தாங்கு வளமான தரைகீழ் நீர் இருப்பதாக அறிக்கிடக்கிறது. பெருநிலப் பரப்பின் வடக்கு கிழக்கு கரையோரப் பகுதிகளில் காணப்படும் வண்டல் மண் மற்றும் மணல் படிவுகளில் தரைகீழ் நீர் காணப்படுகின்றது.

பெருநிலப்பரப்பில்காணப்படும் தரைகீழ்நீர் வளம் இன்னும் நுணுக்கமாக ஆராயப்பட வில்லை. மேலும் இந்தவளத் தைச் சரியாக பயன்படுத்தப் படவுமில்லை.

தற்பொழுது பெருநிலப்பரப்பில் தரைகீழ் நீரைப் பயன்படுத்தும் முறை வளர்ந்து வருகின்றது. மேலும் இயந்திர வசதிகளுடன் கிணறுகள் அமைக்கக் கூடிய வசதிகளும் கிட்டியுள்ளன.

இன்று கிராமங்களுக்கு மின்சார வசதி கிட்டியுள்ளதால் குழாய் கிணறுகள் கிண்டிய திறந்த கிணறுகளின் எண்ணிக்கை அதி கரித்து வருகின்றன. மேலும் கடின பாறைபகுதிகளிலும் இருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட தரை கீழ் நீர் நல்ல முறையில் இன்றைய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பயன்படுத்தலாம். தமிழ் நாட்டில் மொத்த நீர்ப்பாசனத்தில் 55% கிணறுகளிலிருந்தும் குழாய் கிணறுகளிலிருந்தும் செய்யப் படுகின்றன.

இதுபோல பெரு நிலப்பரப்பில் தரைகீழ் நீரைப்பயன்படுத்துவதன் மூலம் புதிதாக பெருமளவு நிலப்பரப்பை விவசாயத்திற்குக் கீழ் கொண்டு வர முடிவதுடன் கிராமங்களின் வாழ்வை மேம்படுத்துவதுடன் குடிநீர்த் தேவைகளை பூர்த்தி செய்ய முடியும்.

இத்திட்டத்தை அறிவு சார் பின்புலத்தில்முன்னெடுக்கவேண்டும். பெருநிலப்பரப்பில் குறிப் பாக வவுனியா மாவட்டத்தில் மக்கள் தரைகீழ் நீரை குடி நீராகப் பயன்படுத்துவதில் பெரும் பிரச் சினைகளை எதிர்கொள்கின் றனர். இம் மாவட்டத்திலும் அயல் மாவட்டமான அநுராதபுரத்திலும் கடுமையான சிறுநீர் நோய்க்கு (CKD) உட்பட்ட நோயாளர்கள் பலர் இருக்கின்றார்கள்.

வடமாகாணத்தின் நீர்வள பயன்பாடு, பொருத்தமான நிலப் பயன்பாடு நீர் முகாமைத்துவம், அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்றவற்றை மேம்படுத்த, நெறிப்படுத்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தனித்துவமான நீரியல்துறை அமைக்கப்படுவது மிகவும் முக்கியமாகும். இன்று பொறியியல், விவசாயம், மருத்துவம், விஞ்ஞானம், புவியியல் போன்ற பட்டப்படிப்புகளில் நீர் சார்ந்த விடயங்கள் உட்படுத்தப்பட்டு இருப்பினும் அவ்வவ் பாடப்பரப்புகளுடன் தொடர்புடைய நீர் விடயங்கள் மாத்திரமே கற்பிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட பாடங்களில் மாத்திரமல்ல சமூகவியல், சமய நாகரிகங்களிலும்கூட நீரியல் விடயங்கள் இடம்பெறுகின்றன. அரசியல் சர்வதேவ விவகாரங்களில் நதிநீர் பங்கீடுகள் மற்றும் நீர்ப்பாவனை குறித்து ஆராயப்படுகின்றன. இதனால் நீரியல் சார்ந்த ச கல விடயங்களைக் கற்பிக்கும் ஆராய்ச்சிகள்ள முன்னெடுக்கும்நீரியல்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்படுவது மிக முக்கியமானதாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நீரியில்துறை Department of Hydrology அல்லது நீர்கற்கைகள் துறை Department of water studies என ஒரு துறை அமைக்க வேண்டும். இத்துறை ஆரம்ப நிலையில் பல்கலைக்கழகத்தில் வெவ்வேறு பீடங்கள் துறைகளில் இருக்கும் நீரியியல் புலைமையான பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் சேவைகளைப் பெற்று இக் கற்கையை முன்னெடுக்க முடி யும்.

கால ஓட்டத்தில் இத் துறை கற்பிப்பதிலும் ஆராய்ச்சியிலும் வளர்ந்து முக்கிய இடத்தை வகிக்கலாம். மேலும் நாட்டிற்குத் தேவையான நீரியில் பட்ட


பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

தாரிகளைக் கொடுக்க முடியும்.

இன்று இலங்கையில் எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் தனித்துவமான நீரியில் துறை இருப்பதாகத் தெரியவில்லை. வடக்கு மாகாணம் வரண்ட பகுதியாக இருப்பதும் இங்கு பல்வகையான புவிச் சரிதவியல் சூழலில் பின்புலத்தில் தரைகீழ் நீர் காணப்படுகின்றது. மேலும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் செறிவான சிக்கலான நிலப் பயன்பாட்டு முறை கிணற்று நீர்ப்பாசனத்திலேயே கட்டி எழுப்பப்பட்டது. இன்று குடாநாட்டு தரைகீழ் நீரில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இத்தகைய தரைகீழ் நீர் வளமும் பிரச்சினைகளும் இலங்கையில் வேறு எங்கும் காணப்படவில்லை.

இது போல பெருநிலப்பரப்பு, மக்களின் வாழ்வாதாரம், சிறிய நடுத்தர மற்றும் ஒரு சில பெரிய குளங்களில் தங்கியுள்ளது. நீரியியல் முகாமைத்துவம் சிறப்புற்று இருந்த காலத்தில் பெருநிலம் நல்லநிலையில் இருந்தது. நீர் முகாமைத்துவம் குன்றியதாலும் நோய்களாலும் யுத்தங்களாலும் வன்னிப்பெருநிலப் பரப்பு 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை மிகவும் குறைந்த குடித்தொகை யையும் மிகவும் பின் தங்கிய குடியானவர் பயிர் செய்கையைத் தழுவிய பொருளா தாரத்தை கொண்டு இருந்தது.

1940 களுக்கு பின்பே பெருநிலப்பரப்பில் நீர் வளங்கள் விருத்தி செய்யப்பட்டன. இதன் மூலமே இன்றைய வளர்ச்சி நிலை எய்தப்பட்டது. மேலும் இன்று தரைகீழ் நீரைப் பயன்படுத்தி பெரு நிலப்பிரதேசத்தை விருத்தி செய்யக் கூடிய நிலை உருவாகியுள்ளது. இச் சூழ்நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நீர் வள மேம்பாடு, நீர் முகாமைத்துவத்தில் சரியான வழிகாட்டுதல் செய்யுமாயின் இம் மாகாணத்தின் பொருளாதாரத்தை விருத்தி செய்யவும், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கவும், மக்களின் வாழ்வாதாரமும் வாழ்வும் மேம்பட வழிபிறக்கும். மேலும் பெரு நிலப் பிரதேசத்தின் அபிவிருத்திமூலமே குடாநாட்டில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியும்.

இச் சூழ்நிலைவேறு எந்த பல் கலைக்கழகத்திலும் பார்க்க நீரியல் துறை அமைக்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு நிறைவான நியாயங்கள் உண்டு. (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீயின்பசிக்கு இரையான காடுகளும் மனிதர்களும்

## போர்த்துக்கல்லில் 3 நாள் துக்கம் அனுஷ்டிப்பு



(லிஸ்பன்)

போர்த்துக்கல் நாட்டில் ஏற்பட்ட காட்டுத்தீயில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 62ஆக உயர்ந்துள்ளது. பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக மூன்று நாட்கள் துக்கம்அனுஷ்டிக்கப்படும்என அரசு தெரிவித்துள்ளது.

ஐரோப்பா கண்டத்தின் தென்பகுதியில் உள்ள போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பன் நகரில் இருந்து சுமார் 200 கிலோ மீற்றர் தூரத்தில் தென் கிழக்கு வனப்பகுதியில் கடந்த சனிக்கிழமை திடீரென்று காட்டுத்தீ உண்டானது.

வேகமாக பரவிய தீ காட்டில் இருந்த மரங்களை பதம் பார்த்ததுடன் காட்டின் ஓரமாக செல்லும் வீதியோரம் இருந்த மரங்களையும் பற்றியது. இதனால் அந்த வீதி வழியாக வாகனங்களில் கடந்து சென்றவர்கள் எரிந்த நிலையில் வீதியில் விழுந்த மரங்களால் முன்பக்கமோ, பின்பக்கமோ போக முடியாமல் வீதியின் நடுவில் வசமாக சிக்கிக் கொண்டனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்துவந்த தீயணைப்பு துறையினர் தீயை அணைத்தவாறு முன்னேறி சென்று கொண்டிருந்த நிலையில் வீதியில் நின்றிருந்த வாகனங்கள் தீயில் எரிந்து நாசமாகின.

40இற்கும் அதிகமானோர் காரின் உள்ளேயே உடல்கருகி பலியாகினர். படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 21 பேர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தனர். பலரது உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (3-8)

# கைவிடப்பட்டது நளினியின் உண்ணாவிரதம்

(வேலூர்)

புழல் சிறைக்கு மாற்றுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் உறுதி அளித்ததையடுத்து, வேலூர் மத்திய பெண்கள் சிறையில் உண்ணாவிரதம் இருந்த நளினி அதனை வாபஸ் பெற்றார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு கைதிகள் முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோர் வேலூர் மத்திய ஆண்கள் சிறையிலும், பெண்கள் சிறையில்முருகனின்மனைவி நளினியும் அடைக்கப்பட்டு உள்ளனர். இந்த நிலையில் கடந்த 12 ஆம் திகதி தன்னை புழல் சிறைக்கு மாற்ற வேண்டும் என்று தமிழக சிறைத்துறை தலைவருக்கு சிறை கண்காணிப்பாளர் மூலம் நளினி மனு அளித்துள்ளார்.

அதைத் தொடர்ந்து கடந்த 13 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை பெண்கள் சிறை கண்காணிப்பாளரும் பெண்கள் சிறையின் சில அலுவலர்களும் மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் துன்புறுத்துவதால் தன்னை உடனடியாக புழல் சிறைக்கு மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தி சிறையில் நளினி உண்ணாவிரதம் இருந்து வந்தார்.



அவரிடம் சிறைத்துறை கண்காணிப்பாளர்கள் சண்முகசுந்தரம், ராஜலட்சுமி ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தையில், இன்னும் ஒரு மாதத்திற்குள் புழல் சிறைக்கு மாற்றுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் நளினியிடம் உறுதி அளித்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து நளினி உண்ணாவிரதத்தை நேற்று வாபஸ் பெற்றார் என்று சிறைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (3-8)

# பிரான்ஸ் பாராளுமன்ற தேர்தலில் ஆளும் கட்சிக்கு அபார வெற்றி

(பாரீஸ்)

பிரான்ஸ் நாட்டின் பாராளுமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் செஞ்சுறிஸ்ட் கட்சி அபார வெற்றி பெற்று பெரும்பான்மை இடத்தை பிடித்தது.

சமீபத்தில் நடைபெற்ற பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலில் 39 வ்யதே ஆன இம்மானுவேல் மக்ரோன் வெற்றி பெற்று ஜனாதிபதியர்னார். அவர் செஞ்சுறிஸ்ட் கட்சி என்ற பெயரில் கட்சியை தொடங்கி ஓராண்டுக்குள் வெற்றி வாகை சூடினார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததையொட்டி கடந்த 11 ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் நடந்தது. பிரான்ஸ் பாராளுமன்றத்தின் எம்.பி.க்கள் எண்ணிக்கை 577 ஆகும். அவற்றுக்கு நடந்த வாக்குப்பதிவில் பெரும்பான்மையான இடங்களில் ஜனாதிபதி மக்ரோனின் செஞ்சுறிஸ் கட்சி வெற்றி பெற்றது. பிரான்சை பொறுத்த வரை எம்.பி. தேர்தலில் போட்டியிடுபவர்கள் 50 சத வீத வாக்குகளை பெற வேண்டும். இதற்காக 2 கட்ட மாக தேர்தல் நடைபெறும். முதல்கட்ட தேர்தலில் 50 சதவீத வாக்கு கிடைக்காவி டில் குறைந்த வாக்குகள் பெற்றவர்கள் நீக்கப்பட்டு முன்னணியில் இருப்பவர்கள் மீண்டும் போட்டியிடு வார்கள். அவர்களில் 80 சதவீதம் வாக்குகள் பெறுபவர்கள் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவர்.



இதில், ஜனாதிபதி மக்ரோனின் செஞ்சுறிஸ்ட் கட்சி மொத்தம் உள்ள 577 தொகுதிகளில் 355இல் இருந்து 425 இடங்கள் வரை கைப்பற்றியது. பாராளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதியின் கட்சி வெற்றி பெற்றுள்ளதால், மக்ரோன் முன் வைத்த புதிய பொருளாதார திட்டங்கள், பிரிட்டனுடனான உறவு குறித்த கொள்கைகள் பாராளுமன்றத்தில் பெரிய எதிர்ப்பின்றி நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (3-8)

# முதல்வர் பழனிச்சாமி, அமைச்சர்கள் பதவி விலக வேண்டும் - ராமதாஸ்

(சென்னை)

வழக்கு விசாரணை நியாயமாக நடைபெற முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, அமைச்சர்கள் பதவி விலக வேண்டும் என்று டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.



சென்னை ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி இடைத் தேர்தலில் வாக்காளர்களுக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் அமைச்சர்கள் பணம் விநியோகித்தது தொடர்பாக அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்ய தமிழக பொலிஸாருக்கு பரிந்துரைத்திருப்பதாக தேர்தல் ஆணையம் தகவல் தெரிவித்துள்ளது. இத்தகைய குற்றச்சாட்டுக்கு ஒரு முதலமைச்சர் ஆளாவது இதுவே முதல்முறை.

இந்திய அரசியல் சாசனத்தின்படி முதலமைச்சர் களாகவும், அமைச்சர்களாகவும் பதவியேற்றவர்கள் அரசியல் சட்டத்திற்கு எதிரான வகையில் வாக்குக்கு பணம் கொடுத்ததன் மூலம் அமைச்சர்களாக பதவி வகிக்கும் தகுதியை இழந்துவிட்டனர். முதல் கட்டமாக சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மீது வழக்குப்பதிவு செய்து கைது செய்ய வேண்டும். ஆனால், அதை செய்ய பொலிஸ் துறை தவறி விட்டது.

வாக்காளர்களுக்கு பணம் கொடுத்ததற்காக முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் மீது வழக்கு ப்பதிவு செய்யும்படி தமிழக ஆளுநருக்கு தேர்தல் ஆணையம் வெளிப்படையாக ஆணையிட வேண்டும்.

அவ்வாறு வழக்குப் பதிவு செய்யப்படுவதற்கு முன்பாகவே, அந்த வழக்குகளின் விசாரணை நியாயமாக நடைபெற வசதியாக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியும், அமைச்சர்களும் பதவி விலக வேண்டும் என்று கூறியுள்ளார். (3-8)

# சிரியாவின் போர் விமானத்தை சுட்டு வீழ்த்தியது அமெரிக்கா

(டமாஸ்கஸ்)

சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல் நடத்திய அந்நாட்டு போர் விமானத்தை அமெரிக்க இராணுவம் சுட்டு வீழ்த்தியுள்ளது.

சிரியாவில் கடந்த 6 ஆண்டு களாக உள்நாட்டு போர் நடைபெற்று வருகிறது. கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக அமெரிக்காவும், அதன் ஆதரவு படைகளும் களம் இறங்கியுள்ளன.

மேலும் அங்கு ஐ.எஸ். தீவிர வாதிகள் ரக்கா உள்ளிட்ட சில பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். அங்கு அவர்களுக்கு எதிராக அமெரிக்க படைகள் முகாமிட்டு தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த நிலையில், ஜனாதிபதி பஷல் அல் ஆசாத் ஆதரவு இராணுவ போர் விமானங்கள் ரக்கா மீது குண்டு வீசி தாக்கின. அப் போது அங்கு ஏற்கனவே முகா மிட்டிருந்த அமெரிக்க இராணுவம் ஒரு போர் விமானத்தை சுட்டு வீழ்த்தியது.

இதற்கு சிரியா கண்டனம் தெரிவித்தது. ஆனால் தங்களை காப்பாற்றி கொள்ளவே விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

இம்மாத தொடக்கத்தில் சிரியா வின் ஆளில்லாத விமானத்தை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியது. தற்போது முதன் முறையாக சிரிய போர் விமானம் சுட்டு வீழ்த்தப் பட்டு ள்ளது. (8)

# நடுவானில் விமானத்தில் பிறந்த குழந்தைக்கு கிடைத்த அதிர்ஷ்டம்

(டில்லி)

வானில் விமானம் பறந்து கொண்டிருந்த போது பிறந்த குழந்தைக்கு ஆயுள் முழுவதும் இலவசப் பயணம் மேற்கொள்ளலாம் என ஜெட் ஏர்வேஸ் அறிவித்துள்ளது. இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது.

சவுதி அரேபியாவில் இருந்து கொச்சிக்கு ஜெட் ஏர்வேஸ் நிறுவன விமானம் 162 பயணிகளுடன் நேற்று முன்தினம் புறப்பட்டு வந்து கொண்டிருந்த போது பெண் ஒருவருக்கு பிரசவ வலி ஏற்பட்டது. இதையடுத்து வைத்திய அவசரமாகக் கோரி உடனடியாக மும்பைக்கு விமானத்தை விமானி திருப்பினார். விமானம் அரேபிய கடல் பகுதியில் சுமார் 35 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த போது அப்பெண் அழகான ஆண் குழந்தையை பெற்றெடுத்தார். விமானம், மும்பை விமான நிலையத்தில் தரையிறங்கியதும் பெண்ணும் அவரது குழந்தையும் வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். அங்கு குழந்தையும் தாயும் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவம் பற்றி மகிழ்ச்சி தெரிவித்துள்ள ஜெட் ஏர்வேஸ், தங்கள் நிறுவன விமானத்தில் இதுபோன்ற சம்பவம் நடைபெற்றிருப்பது இதுதான் முதல் தடவை எனவும் விமானத்தில் பிறந்த குழந்தை தன் ஆயுள் முழுவதும் இலவச பயணத்தை ஜெட் ஏர்வேஸ் நிறுவன விமானத்தில் மேற்கொள்ளலாம் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வாபஸ் பெறாவிட்டால் தமிழரசுக் கட்சியின் வெளிநாட்டு அலுவலகங்கள்

# முற்றுகை

வடமாகாண முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வாபஸ் பெறப்பாடாவிட்டால் தமிழரசுக்கட்சியின் வெளிநாட்டு அலுவலகங்கள் முற்றுகையிடப்படும் என புலம்பெயர் தமிழ் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்

இது தொடர்பில் பிரித்தானியாவை சேர்ந்த புலம்பெயர் தமிழ் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் அனுப்பியுள்ள அறிக்கையில்,

தாயகத்தின் வடமாகாண சபையில் ஏற்பட்டுள்ள எதிர் மறைச்சூழல் மூலம் மீதமிருக்கும் தமிழ்த் தேசியத்தின் வழிகாட்டல்களை தங்களின் பதவிக்காகவும் சுயநலத்திற்காகவும் எதிரிகளோடு இணைந்தும் தமிழர் விரோத சக்திகள் திட்டமிட்டு சூறையாட எத்தனித்துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளை கண்டித்து அதற்கான தீர்ப்பை வழங்கிய வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரன் அவர்களை முதலமைச்சர் பதவியில் இருந்து விரட்டுவதற்கு சில சதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசியல் தலைவர்களும் உடந்தையாக உள்ளார்கள் என்பது வேதனைக்குரிய விடயம்.

ஆகவே இதனைக் கண்டித்தும் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் நீதியான செயற்பாட்டை ஆதரித்தும், புலம்பெயர் தமிழர்கள் எப்போதும் நீதியின் பக்கம் நிற்பார்கள் என்பதை எடுத்துரைக்க பிரித்தானிய வாழ் இளையோர்களாகிய நாம் ஒன்று கூடுவோம்.

இந்த இக்கட்டான சூழலில் புலம்பெயர் தமிழர்கள் தாயகத்தில் வாழும் எமது உறவுகளுக்கு துணையாக இருப்போம்

முதலமைச்சருக்கு எதிரான செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டவர்கள் வெளிநாடு வரும் போது எமது எதிர்பை கடுமையாக தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்படும், ஒருபுலம்பெயர் அமைப்புக்களும் தமது நிகழ்வுகளில் அவர்களை மேடைகளில் ஏற்ற அனுமதிக்கமாட்டார்கள். எனவே முதலமைச்சர் தனது கடமைகளை செய்ய, அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மீளப்பெற வேண்டும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## புகையிரதச் சாரதிகள் இன்று தொழிற்சங்க நடவடிக்கை



(கொழும்பு)

பல கோரிக்கைகளை முன்வைத்து புகையிரதச் சாரதிகள் மற்றும் புகையிரத கட்டுப்பாட்டாளர்கள் இன்று நள்ளிரவு முதல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

பணிக்கு இணைத்தல், பதவி உயர்வு மற்றும் வேதன பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க நிர்வாக அதிகாரி நடவடிக்கை மேற்கொள்ள வில்லை என்பதாலேயே தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக புகையிரத சாரதிகள் சங்கத்தின் செயலாளர் இந்திக தொடங்கொட தெரிவித்துள்ளார். (இ-7)

## ஆஸி நாடு கடத்தப்படவிருந்த இலங்கையர் வழக்கில் வெற்றி



அவுஸ்திரேலியாவிலிருந்து நாடு கடத்தப்படவிருந்த இலங்கையருக்கு சாதகமான நிலைமை ஏற்பட்டுள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளாக அவுஸ்திரேலியாவில் நிரந்தரமாக வதிவதற்கும் பணியில் ஈடுபடுவதற்கும் அனுமதிக்குமாறு கோரி போராடி வந்த 60 வயதான எட்வின் அஸாரியாஸ் (Edwin Asariyas) க்கு சாதகமான நிலைஉருவாகியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் நிரந்தரமாக வதிவதற்கு அனுமதிக்காக செய்திருந்த விண்ணப்பம் கடந்த மாதம் அந்நாட்டு அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

இந்த உத்தரவினால் கடந்த மே மாதம் 14ம் திகதி முதல் எட்வினினால் பணிகளில் ஈடுபட முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது. நிரந்தர வதிவிட அனுமதி கோரி மூன்று தடவைகள் சமர்ப்பித்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் நேற்று நாடு கடத்தப்படவிருந்த எட்வினுக்கு இறுதி நேரத்தில் ஓர் சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றது. அவுஸ்திரேலிய குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் Alex Hawk நாடு கடத்தும் உத்தரவினை ரத்து செய்து அவரை தொடர்ந்தும் அவுஸ்திரேலியாவில் தங்கியிருக்க அனுமதி வழங்கியுள்ளார்.

நிரந்தரமாக வதிவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமை பெரு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக எட்வின் தெரிவித்துள்ளார். (இ-7)

## தரிப்பிடங்களை தவிர்த்து பயணிகளை ஏற்றும் பேருந்துகளின் அனுமதிப் பத்திரம் இரத்தாகும்

### துறைசார் அமைச்சர் எச்சரிக்கை



பேருந்து தரிப்பிடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் பயணிகளை ஏற்றும் மாகாணங்களுக்கு இடையில் சேவையில் ஈடுபடும் பேருந்துகளின் வண்டிகளின் அனுமதிப் பத்திரங்களைத் தடை செய்ய போக்குவரத்து மற்றும் சிவில் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இவ்வாறான சட்ட விரோத செயலில் ஈடுபடும் பேருந்துகள் குறித்து விசாரிப்பதற்காகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு விசாரணைக் குழுக்களை நியமித்துள்ளது.

குறிப்பிட்ட இடங்கள் தவிர்ந்த வேறு இடங்களில் பயணிகளை ஏற்றும் பேருந்துகளை சி.சி.ரி.வி கமரா மூலம் இனங்காண்பதற்கும் திட்ட மிடப்பட்டுள்ளது.

அந்தந்த இடங்களில்கமராக்களைப் பொருத்துமாறும் அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளார். (இ-7)

## தேசிய லொத்தர் சபை அமைச்சர் ரவி வசம்

### ட்ரான்ஸ்பரன்சி விசனம்

சட்டத்திற்கு முரணாக தேசிய லொத்தர் சபையை வெளி விவகார அமைச்சின் கீழ் கொண்டு வரும் வகையிலான வர்த்தமானியை வெளியிட்டமை குறித்து தாம் கவலையடைவதாக இலங்கை ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் தெரிவித்துள்ளது.

மீண்டும் நிதி அமைச்சின் கீழ் தேசிய லொத்தர் சபையை கொண்டு வரும் வகையிலான வர்த்தமானியை வெளியிட்டு ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்கு தீர்வு காணுமாறும் கோரியுள்ளது.

இலங்கை ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனலினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1963ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட நிதி சட்ட மூலத்திற்கு அமைய ஸ்தாபிக்கப்பட்ட தேசிய லொத்தர் சபை, 1997 மற்றும் 1998ம் ஆண்டுகளில் திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டது.

இதற்கமைய குறித்த சபை நிதி அமைச்சரின் கீழ் இதுவரை இயங்கி வந்தது.

இந்த நிலையில், தற்போதைய நிதி அமைச்சரான மங்கள சமரவீரவின் மேற்பார்வையின் கீழ் இந்த சபை இயங்க வேண்டும்.

எனினும், அதனை வெளி விவகார அமைச்சரான ரவி கருணாநாயக்கவின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க, நிதி அமைச்சர் தவிர்த்து வேறு எந்த அமைச்சரின் வசமும் தேசிய லொத்தர் சபை வழங்கப்படுவது சட்டத்திற்கு முரணானது என, இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கை ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனலின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அசோக ஒபேசேகர கூறியுள்ளார். (இ-7)

## ஆறுமுகம் எம்.பி. பங்கேற்கவில்லை

நுவரெலியா மாவட்ட செயலகத்தின் ஆச்சர்ய கேட்போர் கூடத்தில், நேற்று நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆறுமுகன் தொண்டமான் பங்கேற்கவில்லை.

"நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் என்ற அடிப்படையில், எனது ஆலோசனைகளுக்கும் எனது மனிதாபிமானச் செயலுக்கும் மதிப்பளிக்கவில்லை என்றால், அவ்வாறானதொரு பதவி எனக்குத் தேவையே இல்லை. அதனால், அப்பதவியைத் துறக்க, நான் தயார்" என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்திருந்ததுடன், தனது இராஜினாமாக் கடிதத்தை, உரிய அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே, நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர்களான ஆறுமுகம் தொண்டமான் எம்.பி மற்றும் மத்திய [illegible] நேற்றைய கூட்டத்தில் பங்கேற்கவில்லை. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 80 | 80 | 120 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 300 | 120 | 100 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 350 | 500 | 300 | 400 | 400 | 400 | 400 |
| தக்காளி | 120 | 200 | 80 | 160 | 140 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 80 | 80 | 60 | 70 |
| கோவா | 140 | 200 | 90 | 200 | 160 | 140 | 150 |
| கரட் | 200 | 400 | 150 | 300 | 400 | 350 | 240-300 |
| பூசணி | 100 | 100 | 60 | 100 | 80 | 80 | 80 |
| புடோல் | 60 | 120 | 70 | 100 | 120 | 140 | 80 |
| வாழைக்காய் | 60 | 100 | 40 | 80 | 80 | 60 | 60 |
| சின்னவெங்காயம் | 300 | 400 | 200 | 350 | 400 | 250 | 250 |
| பெரியவெங்காயம் | 90 | 120 | 80 | 100 | 120 | 100 | 100 |
| பாகற்காய் | 120 | 200 | 140 | 200 | 160 | 120 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 80 | 120 | 160 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 50 | -- | 160 | 140 | 100 |
| பயற்றங்காய் | 120 | 120 | 80 | 100 | 120 | 100 | 80 |
| லீக்ஸ் | 100 | 160 | 80 | 140 | 160 | 120 | 100 |
| பீற்றூட் | 100 | 160 | 80 | 160 | 120 | 140 | 160 |
| கறிமிளகாய் | 300 | 250-400 | 150 | 400 | 300 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 110 | 200 | 160 | 200 | 250 |
| போஞ்சி | 200 | 200 | 150 | 240 | 200 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 70 | 120 | 100 | 100 | 80 |
| கீரை - 1பிடி | 20 | 50 | 20 | 30 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 100 | 50 | 60 | 80 | 120 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 70 | 55 | 40-60 | 70 | 70 |
| இராசவள்ளி | 250 | 400 | -- | -- | 300 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 350 | 200 | -- | 320 | 280 | 250 | 200 |
| [illegible] | 80 | 160 | -- | 80 | 100 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 10 | 40 | 40 | 25 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 100 | 150 | -- | 80 | 120 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பற்றாக்குறை தீர்க்கப்பட கொள்கை ரீதியான தீர்மானம்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

ஆசிரியர்பற்றாக்குறையை தீர்ப்பதற்கு கொள்கை ரீதியான தீர்மானத்துக்கு வருதல் மற்றும் ஆசிரிய இடமாற்றங்களுக்காக சுயாதீனமான முறைமையை அமுல்படுத்தவேண்டியதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற மாகாண முதலமைச்சர்களுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற 33ஆவது முதலமைச்சர்கள் மாநாட்டில் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நோக்குடன் அனைத்து மாகாண முதலமைச்சர்கள் மற்றும் மத்திய அரசாங்க அமைச்சர்களின் பங்கேற்புடன் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

மாகாண மட்டத்தில் நிலவும் ஆசிரிய பற்றாக்குறைக்கு தீர்வு காண்பது தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், பட்டதாரி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்யும் முறைமை தொடர்பிலும் ஜனாதிபதி வினவினார்.

நிச்சயிக்கப்பட்டவாறு ஒவ்வோர் ஆண்டும் விண்ணப்பம் கோரி, பரீட்சைகளை நடத்தி புதியவர்களை நிர்வாக சேவையில் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் உள்ளூராட்சி நிறுவனங்களில் நிலவும் வெற்றிடங்கள் உள்ளிட்ட ஏனைய குறைபாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

கொழும்பில் நடைபெறும் கூட்டங்களுக்காக உள்ளூராட்சி நிறுவன அலுவலர்களை அழைக்கும் போது, அதற்காக நிச்சயிக்கப்பட்ட திகதிகளை ஒதுக்குவது தொடர்பில் அமைச்சரவையை தெளிவூட்டி தேவையான நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

மாகாண சபைகளால் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் ஏனைய சேவைகளை வினைத்திறனாகவும் உற்பத்தித் திறனாகவும் அமுல்படுத்துவது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டதுடன், மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளுக்கிடையில் சிறந்த உறவுகளைப் பேண வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

மாகாண சபைகளுக்கான நிதியொதுக்கீடுகள் முழுமையாக வழங்கப்பட்டமை தொடர்பில் வடமத்திய மாகாண முதலமைச்சர் பேசல ஜயரத்ன ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தார்.

அமைச்சர்களான வஜிர அபேவர்த்தன, மங்கள சமரவீர, ராஜித சேனாரத்ன, பைசர் முஸ்தபா, முதலமைச்சர்கள், நிதியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அமைச்சு செயலாளர்களும் மாகாண செயலாளர்களும் கலந்துரையாடலில் பங்கு பற்றினார்கள். (செ-11)

# கதை கூறும் அரசு - தினேஸ்

(கொழும்பு)

புதிய அரசமைப்பு உருவாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு உள்ளூராட்சி மன்ற தேர்தல்களையும் பொதுத் தேர்தல்களையும் அரசாங்கம் பிற்போடுவதாக கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன.

நாட்டில் சுகாதாரம் பின் தங்கியுள்ளதாகவும், பெரும் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்ததுடன் இந்த அரசாங்கம் கற்பனைக் கதைகளை கூறி ஆட்சியை பிடித்ததாகவும், இந்த அரசாங்க்த்தை மக்கள் கவிழ்ப்பதற்கு தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (செ)

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாண வைத்தீஸ்வராக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை கல்லூரி அதிபர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் காலை 9 மணிக்கு கல்லூரியின் விவேகானந்தா மண்டபத்தில் இடம்பெறும்.

104ஆம் ஆண்டில் காலடி வைத்துள்ள கல்லூரியின் நிகழ்வுகளில் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகள் மற்றும் கடந்த கால சாதனை மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

நிறுவுநர் நினைவுப் பேருரையை பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் "அறிவாற்றல் ஊடாக வளப்பயன்பாடும் அபிவிருத்தியும்" எனும் தலைப்பில் ஆற்றவுள்ளார். (செ-11)

# பற்றிஸினுள் தங்க மோதிரம்

மட்டக்களப்பு நகரில் உள்ள உணவகம் ஒன்றில், உணவருந்த சென்றவருக்கு பற்றிஸினுள் தங்க மோதி ரம் ஒன்று கிடைத்து உள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த ரவி என்பவர் வாங்கிய பற்றிஸினுள்ளே இவ்வாறு தங்க மோதிரம் இருந்து ள்ளது.

இதேவேளை, குறித்த மோதிரத்தை தான் திருப்பி கொடுக்க தயாராக உள்ளதாகவும் உரிய நபர்கள் சரியான ஆதாரங்களை முன் வைத்து பெற்றுக்கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் காத் தான்குடி உணவகங்களின் கறி ரொட்டியினுள் பீடி, இரும்பு ஆணி போன்றதனை வாடிக்கையாளர்கள் பெற்றதை தொடர்ந்து, மட்டக்களப்பு நகரில் நேற்று பரவலாக கடைகள் பூட்டப்பட்ட நிலையில் தங்க மோதிரம் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## முதல்வருக்காக

# மன்னாரில் இன்று போராட்டம்

(மல்லாவி)

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு எதிரான ஆதாயச் சூதாடிகளின் ஜனநாயக படுகொலையை கண்டித்து.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஜனநாயக போராட்டம் நடைபெறவுள்ளதாகவும், இதில் தமிழின உணர்வாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாபெரும் கண்டன போராட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு மன்னார் பேருந்து நிலையத்திற்கு முன்பாக நடைபெறவுள்ளதாகவும்,

இதில் தமிழின உணர்வாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (செ-15)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### தலச்சனுக்கு தலச்சன் திருமணம் சரியா?

தலச்சன் பிள்ளைக்கு உடன் பிறப்பு இருந்து தலச்சன் பெண்ணுக்கு உடன் பிறப்பு இல்லையென்றால் திருமணம் செய்யலாமா?

தலச்சன் பிள்ளைக்கு உடன் பிறப்பு இல்லாமல் இருந்து தலச்சன் பெண்ணுக்கு உடன் பிறப்புக்கள் இருந்தாலும் திருமணம் செய்யலாம்.

தலச்சன் பிள்ளைக்கு உடன் பிறப்பு இருந்தாலும் தலச்சன் பெண்ணுக்கு உடன் பிறப்புகள் இருந்தாலும் திருமணம் செய்யலாம்.

தலச்சன் பிள்ளைக்கு உடன் பிறப்பு இல்லாமல் இருந்து தலச்சன் பெண்ணுக்கும் உடன் பிறப்பு இல்லாமல் இருந்தால் திருமணம் செய்யக்கூடாது. (தொடரும்)




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

நாராயண மகரிஷி அறிந்து வந்து சொன்ன அசலம் அது!

அங்கே ஒரு பாம்புப்புற்று பாழடைந்து தெரிந்தது. அதனுள் சென்று அந்தகனைப் போல் கண் மூடிக் காலம் கழிக்கலானான்.

நாரதர் பிரம்மலோகம் சென்றார். பிரம்மதேவனிடம், எந்தையே திருமாலும் திருமகளும் சண்டையிட்டுப் பிரி ந்து தனித்தனியாக புவியடைந்து விட்டார்கள். தாரத்தை இழந்த தாமோதரன், ஆதிஷேனின் புற்றில் ஆழ்ந்த உறக்கம் கொண்டிருக்கின்றான் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி உழலுகிறான். திருமகளே கொல்லாபுரத்தில் தியானத்தில் திளைத்திருக்கிறாள். ஆகவே அனந்த நாராயணனுக்கு அமுது அளிக்கும் வேலை உம்மைச் சார்ந்தது என உரைத்தார். (தொடரும்)

# வகுப்புக்களை மீள ஆரம்பிக்க கல்வி அமைச்சு அனுமதி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வித் திணைக்களக் கட்டமைப்புக் குழுவின் 17.02.2017 ஆம் திகதிய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாகவும் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் அமைந்துள்ள யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரியில் இடைநிறுத்தப்பட்ட தரம் 01 முதல் தரம் 05 வரையான வகுப்புக்களில் தரம் 01க்கான வகுப்புக்களை 01.01. 2018 முதல் மீள ஆரம்பிப்பதற்கும் அடுத்துவரும் ஒவ்வொரு வருடமும் அடுத்த ஒவ்வொரு தரத்துக்குரிய வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கும் இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் அறிவித்துள்ளார்.(இ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மன்னார் பிரதேசத்தில் முருங்கன்பிட்டி, மாவிலங்கேணி, பிடாரிக்குளம், அளவக்கை, வாழ்க்கைப்பட்டான் கண்டல், பள்ளங்கோட்டை, நானாட்டான், சாளம்பன், நாகசெட்டி, எருவிட்டான், அறுகுக் குன்று, நொச்சிக்குளம், அச்சங்குளம்டொன்பொஸ்கோ ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# டெங்கு நோயாளர்களை வைத்தியசாலையில் அனுமதிக்க மறுப்பு

(கொழும்பு)

டெங்கு தொற்று நோயாளர்களை தற்காலி கமாக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில், அனுமதிக்க மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளதாக, வைத்தியசாலையின் தலைமை நிர்வாகப் பணிப்பாளர் டாக்டர் சுசித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இந்த தீர்மானத்தை நேற்று முன்தினம் இரவு எடுத்துள்ளதாகவும், இதனால் தற்போது வைத்தியசாலை யில் சிகிச்சைப் பெற்று வரும், டெங்கு தொற்று நோயாளர்களுக்கு மாத்திரம் சிகிச்சை வழங்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.(இ-7)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ தானத்தைவிட உயர்ந்த நன்மை வேறொன்றில்லை. யாருடைய கை வாங்குவதற்காக நீளுமோ அவன் மிகத் தாழ்ந்தவன். எவனது கை கொடுப்பதற்காக முன் செல்லுமோ அவன் மிக உயர்ந்தவன். கையைப் படைத்தது எப்போதும் கொடுப்பதற்கே. நீ பட்டினி கிடப்பதாயினும் உன்னிடமுள்ள கடைசிக் கவள உணவையும் கொடுத்து விடு. பிறருக்குக் கொடுப்பதனால் நீ உணவின்றி இறந்தால் அப்போது நீ விடுதலை பெறுவாய். உடனே நீ பூரணமடைவாய். நீ தெய்வமாவாய்.


❖ புகழை யார் பொருட்படுத்துவது? அதனை விட்டொழி. பசித்த வாய்க்கு உணவுக் கவளங்களை எடுத்துச் செல்லும் முயற்சியில் புகழும் உடைமையும் அனைத்தும் அழிவதானாலும் மும்மடங்கு [illegible] அன்பே ஒன்றே. அறிவல்ல. நூலும் அறிவும் யோகமும் [illegible] ஒப்பிடும்போது அனைத்தும் மண்ணாகும்.

❖ செல்வந்தர்களை வழிபடத் தொடங்கும் நாள் முதலே ஒரு சமயத்தின் கேடு ஆரம்பிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணியின் தோல்வியால் ரசிகர்கள் ஆத்திரம் டி.வி. உடைப்பு - வீரர்களின் உருவப்படம் எரிப்பு

## டோனி வீட்டிற்கு பொலிஸ் பாதுகாப்பு



சம்பியன்ஸ் டிராபி இறுதிப் போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்ததால் சில ரசிகர்கள் டி.வி.களை உடைத்தும், வீரர்களின் உருவப்படங்களை எரித்தும் ஆத்திரங்களை தீர்த்துக்கொண்டனர்.

இங்கிலாந்தில் சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், இந்திய அணியை பாகிஸ்தான் 180 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இதனால், அணியை விமர்சித்து இந்திய ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் தங்களது காரசாரமான கருத்துக்களை பதிவு செய்து வருகின்றனர்.

சில ரசிகர்கள் தோற்றாலும், ஜெயித்தாலும் இந்திய அணியின் பக்கம் நிற்போம் என ஆதரவாக கருத்துக்களை தெரிவித்துள்ளனர். உத்தரப்பிரதேச மாநிலத்தின் கான்பூர் நகரில் சில ரசிகர்கள் இந்திய வீரர்களின் உருவப்படங்களை வீதியில் நின்று எரித்து தங்களது ஆத்திரங்களை தீர்த்துக் கொண்டனர். மேலும், சிலர் தொலைக்காட்சிப்பெட்டிகளை உடைத்து, அணிக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

இதற்கு முந்தைய காலங்களில் இந்திய அணி தோல்வியடைந்தால் சில ரசிகர்கள் வீரர்களின் வீட்டில் கல் எறிவது வழக்கம். தற்போது, அதே போல நிகழக்கூடாது என்பதற்காக முக்கிய வீரர்களின் வீடுகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. ராஞ்சியில் உள்ள டோனியின் இல்லத்தின் முன் அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். (க)

# பாகிஸ்தானில் சர்வதேச கிரிக்கெட் நடைபெறவேண்டும் - சர்ப்ராஸ்



சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடரில் சம்பியன் பட்டம் வென்றுள்ள பாகிஸ்தான் அணியின் கப்டன் சர்ப்ராஸ், பாகிஸ்தானுக்கு வந்து மற்ற அணிகள் விளையாட வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார்.

இங்கிலாந்தில் சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், இந்திய அணியை பாகிஸ் தான் 180 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. நீண்ட வருடங்களுக்கு பின்னர் ஐ.சி.சி தொடர் ஒன்றில் பாகிஸ்தான் அணி சம்பியன் பட்டம் வென்றுள்ளதால் அந்நாட்டு ரசிகர்கள் உற்சாக வெள்ளத்தில் மிதக்கின்றனர்.

வெற்றி குறித்து கருத்து தெரிவித்துள்ள பாகிஸ்தான் அணி கப்டன் சர்ப்ராஸ், இந்த வெற்றி இன்று மற்றும் நாளை நினைவு கூரத்தக்கது அல்ல. பல வருடங்கள் கொண்டாடத்தக்கது. பாகிஸ்தானில் கிரிக்கெட் இருக்கும்வரை இந்த சாதனை இருக்கும் என்பதில் மகிழ்ச்சி என்றார்.

மேலும், நீண்ட நாட்களாக நாங்கள் டுபாயை தான் ஹோம் கிரவுண்டாக கொண்டு விளையாடி வருகிறோம். மற்ற அணிகளை போல் சொந்த மண்ணில் விளையாடும் சிறப்பு எங்களுக்கு இல்லை. இந்த வெற்றி மூலம் மற்ற அணிகள் பாகிஸ்தானுக்கு வந்து விளையாட வேண்டும்என வேண்டுகோள் விடுக்கிறேன் எனவும் கூறினார்.

கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்த இலங்கை அணியினர் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதிலிருந்து. அங்கு சர்வதேச போட்டிகள் எதுவும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# தேசியமட்ட சாதனையாளர்கள் கௌரவிப்பு





முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து குத்துச்சண்டை போட்டிக்கு பங்குபற்றி தேசிய ரீதியில் வெற்றி பெற்ற சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

பாடசாலைகளுக்கிடையிலான அகில இலங்கை ரீதியான குத்துச்சண்டை போட்டி அண்மையில் கண்டியில் நடைபெற்றது. இந்த போட்டியிலே முல்லைத்தீவு மாவட்டம் எட்டு பதக்கங்களை பெற்றுக் கொண்டது

அந்தவகையில் இந்த போட்டியில் வடமாகாண ரீதியில் முதலாமிடத்தையும் தேசிய ரீதியில் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்ட இந்த அணியின் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மாணவர்களையும் பாடசாலைகளுக்கிடையிலான அகில இலங்கை ரீதியான சமூக விஞ்ஞான போட்டியிலே 2 ம் மற்றும் 6 ம் இடங்களைபெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று முற்பகல் 10 மணியளவில் பாடசாலை கேட்போர் கூடத்தில் சிறப்புற நடைபெற்றது.

முன்னதாக தண்ணீரூற்று நெடுங்கேணி சந்தியிலிருந்து வீரர்கள் மாலை அணிவித்து பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்து செல்லப்பட்டு பாடசாலை கேட போர் கூடத்தில் நிகழ்வுகள் நடைபெற்றது.

இதன்போது பாடசாலைகளுக்கிடையிலான அகில இலங்கை ரீதியான குத்துச்சண்டை போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற யோகேஸ்வரன் கிரிதரன், முரளிதரன் தணுஜன் மற்றும் வெண்கல பதக்கம் வென்ற யோகநாதன் ஜெனனன் மற்றும் போட்டியில் பங்குபற்றிய சுப்பிரமணியம் அருண், பாடசாலைகளுக்கிடையிலான அகில இலங்கை ரீதியான சமூக விஞ்ஞான போட்டியிலே 2 ம் இடம் பெற்றுக் கொண்ட இந்திரகுமார் யஜ்னா மற்றும் 6 ஆம் இடம் பெற்றுக்கொண்ட ஜெகதீஸ்வரன் சஜிந்தன் உள்ளிட்டோர் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பயிற்றுவிப்பாளர்கள், பெற்றோர், பாடசாலை பிரதி அதிபர் மற்றும் மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இவர்களை வள்ளுவன் மாஸ்ரர் உள்ளிட்ட அணியினர் பயிற்றுவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஈ-281)

# நவரத்தினராசா ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## துறையூர் ஐயனார் வெற்றி





வலிகாமம் லீக்கின் முன்னாள் தலைவர் அமரர் நா.நவரத்தினராசா ஞாபகார்த்தமாக நடத்தப்படும் உதைபந்தாட்ட போட்டியில் குருநகர் பாடும் மீன் அணியினருடன் துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம் 18.06.2017 அன்று மாலை 3.30 மணிக்கு இளவாலை மைதானத்தில் மோதிக்கொண்டன.

இதில் ஐயனார் அணியினரின் ஆதிக்கம் பலமாக இருந்த போதும் கோல் போடும் வாய்ப்புகள் எதிர் அணியின் கடும் தடுப்புக்களால் தகர்ந்து போயின. ஆயினும் ஆக்ரோசமான ஆட்டம் ஆடிய இரு அணிகளும் வாய்ப்புகள் வருவதும், அவை நழுவி செல்வதுமாக இருந்தது. இறுதியில் சமநிலையில் முடிந்ததனால், தண்ட உதை மூலம் வெற்றி தீர்மானிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

வாய்ப்பை சரியாக பயன்படுத்திய ஐயனார் வீரர்கள் திறமையாக தமது வாய்ப்புகளை கோலாக்கினார்கள். எதிர் அணியினரின் திணறடிக்கும் பந்துகளை தடுத்து அணியின் வெற்றிக்கு தனது சிறப்பான பங்குகளையும் வழங்கினர் கோல்கீப்பர். இறுதியில் பாடும் மீன் அணியை 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது துறையூர் ஐயனார் அணி. (க)

# சென்.அன்ரனிஸ்சை வீழ்த்தியது ஊரெழு றோயல் அணி



வலிகாமம் லீக்கின் முன்னாள் தலைவர் அமரர் நா.நவரத்தினராசா ஞாபகார்த்தமாக நடத்தப்படும் உதைபந்தாட்ட போட்டி தொடரின் (18.06.2017) அன்று நடைபெற்ற போட்டியில் கஜந்தன் தலைமையிலான ஊரெழு றோயல் அணி மணல்காடு சென் அன்ரனீஸ் அணியுடன் மோதியது

போட்டியின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ஊரெழு றோயல் அணி 3 : 1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது றோயல் அணி சார்பில் கஜகோபன், எடிசன், சயந்தன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களை அடித்தனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுமுகமான தீர்வு...

பதற்காகவே சுமுகமான தீர்வுக்கு இணங்கியுள்ளோம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

வடக்கு முதலமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்தினை அடுத்து வடக்கு மக்கள் மத்தியிலும் அரசியலிலும் ஏற்பட்ட அசாதாரண நிலை தொடர்பில் அதை சுமுகமான முறையில் தீர்த்து வைப்பதற்கென குறித்த இரு தரப்பினருடனும் நேற்றைய தினம் மதத்தலைவர்களுடன் சந்திப்பினை மேற்கொண்டிருந்தனர். அந்த வகையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசாவை மதத் தலைவர்கள் யாழில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மாவை எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சபையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் அந்த விடயத்தை அமைதியான முறையில் அணுக உதவுமாறு நாம் மதத்தலைவர்களிடம் கேட்டிருந்தோம். அந்த வகையில் அவர்கள் தலையிட்டு இரு தரப்பினருடனும் பேச்சு நடத்தினார்கள். அத்துடன் இவ்விடயம் தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், வடக்கு முதலமைச்சருடன் பேசியுள்ளார். இப்பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் இப் பிரச்சினையை சுமுகமாக தீர்ப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளோம்.

குற்றம் காணப்படாத அமைச்சர்கள் இருவரும் விடுமுறையில் இருக்காது பதவிக்கு வருவதற்கு முதல், விசாரணைக்கு இடையூறாக இருக்க மாட்டோம் என கடிதம் தர வேண்டும் என முதலமைச்சர் வற்புறுத்தினார். அது தேவையற்ற விடயம் என தெரிவித்தோம். அத்துடன் அந்த இரு அமைச்சர்களும் தமது பதவிதான் மாகாண சபையின் எதிர்கால நடவடிக்கைக்கு குந்தகம் என்றால் அமைச்சுப் பதவியை துறப்போம் எனவும் எனக்கு தெரிவித்திருந்தனர்

கடந்தமுறை அமைத்த விசாரணைக் குழு சட்டபூர்வமற்றது. அதை அமைப்பதற்கு முதலமைச்சருக்கு அதிகாரம் இல்லை என கருத்து உள்ளது. குற்றமற்ற அமைச்சர்களை விடுப்பில் இருக்க கூறும் அதிகாரம் முதலமைச்சருக்கு இல்லை எனவும் தெரிவித்துள்ளார்கள். உத்தரவாத கடிதம் கொடுப்பதில் குழப்பம் இருந்தால் அதை செய்வதற்கு ஆயத்தமாக் இருந்தோம். இருப்பினும் கட்சிகளுக்கு அப்பால் தீர்வை கொண்டு வர வேண்டும் என எண்ணினோம்.

எமது இப்பிரச்சினை தொடர்பில் மக்களை நம்பிக்கையீனப்பட வைக்க முடியாது. அரசாங்கம் எங்களை பயன்படுத்தி விட முடியாது. எமக்குள் பிளவு ஏற்படுத்தி விட முடியாது என்றதன் அடிப்படையில்தான் இப்பிரச்சினைக்கு தீர்வை கொண்டுவர இணங்கியுள்ளோம்.

அத்துடன் சர்வதேச சமூகத்தினர் இந்த விடயம் தொடர்பாக என்னிடம் பேசினார்கள். இப் பிளவுகள் தமக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்தார்கள்.

இந்த குழப்ப சூழ்நிலை தொடர்பில் இரு அமைச்சர்கள் மனவருத்தப்பட்டுள்ளார்கள்.

முதலமைச்சரின் நடவடிக்கையில் சட்டபூர்வமற்ற தன்மை இருந்ததன் அடிப்படையில்தான் அவருக்கு எதிராக செயற்பட உந்தப்பட்டோம் என தெரிவித்ததுடன் கட்சி சொல்லும் நிலைப்பாட்டுக்கு தொடர்ந்து செயற்பட தயாராக உள்ளோம் என தெரிவித்துள்ளனர். முதலமைச்சரின் வேண்டுகோளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதை நாம் அறிவிப்பதாக இருந்தோம் அதற்கு முன்னர் மதகுருமார்கள் முயற்சி எடுத்துள்ளார்கள். எனவே சுமுகமான முறையில் முதலமைச்சரிடம் இருந்து கடிதம் கிடைத்தால் அதை ஏற்று அதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## ஆதரவாளர்கள்...

களுக்கும் இடையில் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்னால் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்னால் நேற்று காலை 10 மணிக்கு தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் வடமாகாண சுகாதார அமைச்சருக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இதன்போது வடமாகாண சுகாதார அமைச்சர் ஊழல் அற்றவர் எனவும் அவருக்கு சுகாதார அமைச்சு பதவியை தொடர்ந்தும் வழங்க வேண்டும் எனவும், முதலமைச்சர் நீதியாக செயற்பட வேண்டும் எனவும் அவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை ஏந்தியிருந்ததுடன் வடமாகாண சுகாதார அமைச்சரின் புகைப்படத்தையும் ஏந்தியிருந்தனர்.

இதன்போது அவ் இடத்திற்கு வந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலரும், இளைஞர்களும் குறித்த ஆர்ப்பாட்டத்தினை மேற்கொள்ள வேண்டாம் எனவும் முதலமைச்சருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய விடமாட்டோம் எனவும் தெரிவித்தனர். இதனால் இரு பகுதியினருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியிருந்தது.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்தில் ஏற்பட்ட குழப்பநிலையை அடுத்து வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் அவ்விடத்தில் குவிக்கப்பட்ட பொலிஸார் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர்.

இதனையடுத்து வீதியின் ஒரு பகுதியில் அமைச்சர் சத்தியலிங்கத்தின் ஆதரவாளர்களும், மறுபக்கம் முதலமைச்சருக்கு ஆதரவானவர்களும் நின்றிருந்தனர். இருப்பினும் பொலிஸார் இரு பகுதியினருடனும் பேசி அவ்விடத்தில் இருந்து கலைந்து செல்லுமாறு அறிவுறுத்தியதையடுத்து அவர்கள் சென்றனர்.

அமைச்சர் சத்தியலிங்கத்திற்கு ஆதரவான ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா மற்றும் தமிழரசுக் கட்சியின் வவுனியா கிளை உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-250)

## தம்பதியின் மீது...

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றும் மதியம் 12.50 மணியளவில் யாழ்ப்பாணம் கொட்டடி வில்லூன்றி கோயிலுக்கு அருகில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியை சேர்ந்த கந்தசாமி சாம்பசிவம் (வயது 77) மற்றும் அவரது மனைவியான சாம்பசிவம் சறோஜினிதேவி (வயது 70) என்ற இருவருமே வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

களவு நோக்கத்துடன் இனந்தெரியாதவர்கள் வீட்டினுள் உள்நுழைந்த நிலையில் பிரஸ்தாப தம்பதியினர் அவர்களை தடுக்க முற்பட்டவேளையிலேயே வாள்வெட்டை நிகழ்த்தி விட்டு மர்மநபர்கள் தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸில் முறையிட்டதனை தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-30)

## நடுவுநிலை தவ...

அவரது வாசஸ்தலத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

என்னை நீக்குமாறு வடக்கு மாகாண ஆளுநரிடம் கொடுத்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை அல்லது கடிதத்தை மீள பெறுவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர இரா.சம்பந்தன் அறிவித்துள்ளார். அது எப்போது நடக்கும் என எனக்கு தெரியாது. அதே வேளை இரு அமைச்சர்கள் சம்பந்தமாக மதகுருமார்களினால் பெறப்பட்ட உறுதிமொழி மற்றும் மூன்று கட்சிகளின் தலைவர்களும் சம்பந்தனோடு பேசியதாக கூறிய உறுதிமொழிகள் எல்லாவற்றையும் கணக்கில எடுத்து,

அமைச்சர்களான சத்தியலிங்கம், டெனிஸ்வரன் ஆகியோரை ஒரு மாத விடுமுறையில் நிற்குமாறு நான் கூறியதை திரும்ப பெற்றுள்ளேன். இப்போது சுமுகமான முடிவுக்கு வந்துள்ளோம். ஆனால் இதிலும் பல சிக்கல்கள் இருக்கின்றன. இவர்களுக்கு எதிரான விசாரணை நடைபெற வேண்டும். விசாரணைக்குரிய சாட்சிகள் திணைக்களங்களில் அமைச்சுக்களில் இருக்கின்றார்கள். அவர்கள் தங்களுடைய சாட்சியங்களை வழங்குவதற்கு பல பிரச்சினைகள் இருக்கின்றன.

அவர்கள் மனமுவந்து சாட்சியமளிக்க கூடிய சூழ்நிலை இருக்க வேண்டும். அவ்வாறு இருக்கின்றதோ எனக்கு தெரியவில்லை. ஆகவே இவை எல்லாவற்றையும் சமாளித்து கொண்டு உரிய முயற்சிகளை எடுப்பதற்கு முயற்சித்து கொண்டிருக்கின்றோம். இதை தொடர்ந்து எமது வடக்கு மாகாண சபையை சுமுகமாக நடத்த முடியும் என நம்புகின்றேன். அவைத்தலைவருடைய பங்கு இன்னும் சரியாக தெரியாது உள்ளது. அவையில் முதலமைச்சருக்கோ அல்லது அமைச்சர்களுக்கு எதிராகவோ நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவருவதாக இருந்தால் அதனை அவைத்தலைவருக்கு தான் கையளிக்க வேண்டும். இங்கு அவைத்தலைவரே தானாக முன்னின்று சிலரை தன்பக்கம் இழுத்து என்மீதான நம்பிக்கையில்லா பிரேரணையை ஆளுநரிடம் கையளித்துள்ளார். அவருடைய செயல் சட்டத்துக்கு புறம்பானது என்று தான் நான் கூறுவேன். அவ்வாறு பக்கச்சார்பாக நடந்து கொண்ட அவைத் தலைவர் தொடர்ந்து அந்த பதவியில் நிலைத்திருக்க முடியுமா என்ற கேள்வி எழுகின்றது.

இதனை எங்களுடைய உறுப்பினர்கள் பேச இருக்கின்றார்கள், விவாதிக்க இருக்கின்றார்கள். அதன் அடிப்படையில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படும் என நம்பப்படுகினறது. கல்வி அமைச்சர் தனது இராஜினாமா கடிதத்தை தருவதாக தொலைபேசியில் கூறியிருந்தார். இதுவரை எனக்கு எந்த கடிதமும் அவரிடமிருந்து கிடைக்கவில்லை. விரைவில் கிடைக்கும் என நம்புகின்றேன். வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் விசாரரணைக்குழுவில் நம்பிக்கை இல்லை என்றால் நீதிமன்றம் போகலாம்.

ஆனால் அவர் என்னிடமும் பேசியுள்ளார். குறித்த விசாரணைக்குழு தொடர்பில் மீளா ய்வு ஒன்று செய்ய முடியுமா என, அதனை நான் செய்வதாக கூறியிருந்தேன் என முதலமைச்சர் தனது கருத்தை வெளியிட்டுள்ளார். (செ-4)

## கர்ப்பிணிகொலை...

வான் ஏ.எம்.எம் றியால் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

சந்தேகநபர்கள் சார்பில் தொடர்ச்சியாக சட்டத்தரணிகள் ஆஜராகுவதில்லை என சுட்டிக்காட்டிய நீதவான், அடுத்த தவணையின் போது சட்டத்தரணிகள் கட்டாயம் ஆஜராக வேண்டும் எனவும், சந்தேக நபர்களின் உறவினர்கள் அதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் ஜூலை மாதம் மூன்றாம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ஊர்காவற்துறையில் கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி கர்ப்பிணித் தாயொருவர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தமை தெரிந்ததே. (செ-11)

## விக்னேஸ்வரனுக்கு...

மாக இருந்தால் மாகாண சபை என்பது தேவையில்லை. மாகாண சபை வருவதற்கு முன்பே இங்கு திணைக்களத் தலைவர்களின் கீழ் நிர்வாகம் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. அப்படியாயின் இந்த ஆட்சியே போதுமானதாக இருந்திருக்கும். நாங்கள் அதிகார மீறல் எனக் குறிப்பிடப்படுவது மாகாண சபையின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண அரசாங்கத்திற்கும் பொதுவான ஒழுங்கு நிரலில் இருக்கக் கூடிய விடயங்களை எங்களுக்குச் சாதகமாக வாசிப்புச் செய்தோம் இதில் தவறு எதுவும் இல்லை. இதில் சுற்றுச் சூழல் விடயம் தொடர்பில் மாகாண சபைக்கு எங்கேயும் அதிகாரம் இல்லை எனக் குறிப்பிடவில்லை.

ஆனால் அவ் அதிகாரத்தை மத்திய அரசாங்கத்திற்கு தாரைவார்க்கும் மனோநிலையில்தான் இத் தீர்ப்பை விசாரணையாளர்கள் எழுதியுள்ளார்கள். ஆகவே சுற்றுச் சூழலை தொடர்பில் காப்பாற்றவேண்டிய பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்குள்ளது. அரசாங்கம் விரும்பியது போன்று செய்வதற்கு நாங்கள் தடையாக இருக்கின்றோம் என்பதற்காகவே சுற்றுச் சூழல் அதிகாரம் வடக்கு மாகாண சபைக்கு செல்லாது என தீர்ப்பளித்துள்ளார்கள். இத் தீர்ப்பின் ஊடாக இனி எந்த ஒரு அமைச்சர் வந்தாலும் சுற்றுக்சூழலுக்கு பாதிப்பான கல், மணல், கனியவள அகழ்வுகள் இடம்பெற்றால் அல்லது சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பான எந்தவொரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாலும் .அதனை தடுப்பதற்கு முடியாது போகும் என்பதுடன் இத் தீர்ப்பை அதற்குச் சாதகமாகவும் பயன்படுத்துவார்கள்.எனவே இது விடயம் தொடர்பிலும் நாங்கள் நீதிமன்றம் செல்லவுள்ளோம்.

மேலும் வடக்கில் பாதிப்பான தொழிற்துறைகளை ஆரம்பிக்க தெற்கத்தைய பேரினவாத அரசாங்கம் முயற்சித்தபோது அதனை நான் நிராகரித்தமையால் அவர்கள் விரும்பியதை செய்யக்கூடிய ஒரு அமைச்சர் வடக்கிற்கு தேவையாக இருந்தமையினாலும், முதலமைச்சருக்கு பக்க பலமாக நான் இருப்பதால் அதனையையும் விலத்தவேண்டும் என்பதற்காகவுமே என் மீதான இவ் குற்றச்சாட்டுச் சதி நாடகம் அரங்கேற்றப்பட்டது. இவ் ஊடக சந்திப்பின் ஊடாக நான் கூறவருவது, வடக்கில் இப்போது ஏற்பட்டுள்ள இப்பிரச்சினையை ஊழல் குற்றச்சாட்டுக்களுடன் சுருக்கிப் பார்க்காது அதற்கும் அப்பால் எங்களுடைய தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆயுத வழிப்போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்பு ஜனநாயக வழியில் அடுத்த கட்டத்திற்கு இப் போராட்டத்தை கொண்டு செல்லுவதற்கு ஒரு தலைவர் தேவைப்படுகிறார். அந்தத் தலைவர் விக்னேஸ்வரனாக அமைந்துவிடக்கூடாது. அவ்வாறு அமைந்துவிட்டால் அது அரசாங்கத்திற்கும் பேரினவாதிகளுக்கும் உள்ளூர் ஆட்சியாளர்களுக்கும் பாதிப்பாக அமைந்துவிடும் என்பதனாலேயே இந் நாடகம் அரங்கேற்றப்பட்டது எனத் தெரிவித்தார். (செ-4)

## நம்பிக்கையில்லா...

ர்கள் பேரணியாக திரண்டனர். தொடர்ந்து மறுநாள் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூரண ஹர்த்தாலுக்கும் ஆதரவுப் பேரணிக்குமாக தமிழ் மக்கள் பேரவை அழைப்பு விடுத்தது.

மிகக் குறுகிய நேரத்தில் விடுக்கப்பட்ட இவ் அழைப்பை ஏற்று வடக்கு மாகாணம் முழுமையும் முடங்கியதுடன் ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்று திரண்டு பேரணியாக முதலமைச்சரின் வாசஸ்தலத்திற்குச் சென்று தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

அதேவேளை வடக்கு மாகாணம் முழுவதும் ஆதரவுப் போராட்டங்கள் நடந்தன. இதனையடுத்து தமிழரசுக் கட்சி மிகமோசமான நெருக்கடிக்கு ஆளாகியது.

இந்நிலையில் சமாதான முயற்சிகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் எடுத்த முயற்சிக்கு மேலாக.

நேற்றையதினம் மதத் தலைவர்கள் சமாதான முயற்சியில் களமிறங்கினர். நல்லை ஆதீன குரு முதல்வர் வணக்கத்துக்குரிய சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆகியோர் மேற்கொண்ட சமாதான முயற்சியையடுத்து முதலமைச்சர் விக்னேஸ்வரன், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா ஆகியோருக்கிடையில் ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இதனையடுத்து முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வாபஸ் பெறுவதாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் அறிவித்தார்.

இதேவேளை சில நிபந்தனைகளுடன் அமைச்சர்கள் பா.சத்தியலிங்கம், ப.டெனீஸ்வரன் ஆகியோர் தமது அமைச்சுப் பொறுப்புக்களை கவனிப்பர் எனவும் அவர்கள் மீதான விசாரணை தொடரப்படும் எனவும் இணங்கிக் கொள்ளப்பட்டது.

முதலமைச்சர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வாபஸ் பெறப்பட்டது என அறிவிக்கப்பட்டதும் மக்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர். (ஞ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்று ஆலோசனை...

வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் மற்றும் யாழ்.மறை மாவட்ட ஆயர் பேரருள் வண பிதா ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆகியோரால் மேற்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது.

18.06.2017

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்
எதிர்க்கட்சி தலைவர்.
மேதகு இராஜவரோதயம் சம்பந்தன்.

தலைவர், தமிழரசுக் கட்சி,
பாராளுமன்ற உறுப்பினர்,
மேதகு மாவை சேனாதிராசா.

வட மாகாண முதலமைச்சர்,
நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

கனம் அன்புடையீர்.

மதத் தலைவர்களாகிய நாங்கள் அண்மைக்காலமாக வட மாகாணசபை தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக எமது மக்களுடன் கலந்துரையாடியதன் விளைவாக இவ் விடயத்தை பொறுப்புள்ளவர்களுடன் கலந்துரையாடி ஒரு உகந்த தீர்வை மக்களின் நன்மை கருதி ஏற்படுத்த வேண்டிய அவசியத்தின் பிரகாரம் பின்வரும் ஆலோசனைகளை உங்கள் முன் வைக்கலாம் என கருதுகின்றோம்.

01. விசாரணையின் போது குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட இரு அமைச்சர்களும் மீண்டும் தமது அமைச்சர் பணிகளை தொடர அனுமதிக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் அவர்கள் சம்பந்தமான குற்றச்சாட்டுக்களுக்கான விசாரணைகளை இடையூறுகள் இன்றி செய்வதை அவ் அமைச்சர்கள் ஒத்துழைப்புடன் பொறுப்பான மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் சகல உறுப்பினர்களும் கட்சி தலைமைகளும் விசாரணைகளை சரியான முறையில் நடத்துவதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும். இதன் மூலமே நல்லாட்சியினை வட மாகாண சபையில் கொண்டு வர முடியும்.

02. வட மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை முதலமைச்சராக கொண்ட மாகாண சபையை திறம்பட இயங்க சகலரும் பூரண ஒத்துழைப்பு வழங்க கேட்டுக்கொள்கிறோம்.

03. ஆளுநரிடம் கையளிக்கப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்தை மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டு அதனை உறுதிப்படுத்த வேண்டுகின்றோம்.

தமிழ் மக்களின் அரசியல் பலம் சிதைவடைவதற்கு இடமளிக்காமல் சம்பந்தப்பட்ட தரப்பினர் விட்டுக்கொடுப்புடனும் புரிந்துணர்வுடனும் மேற்குறிப்பிட்ட பரிந்துரைகளை ஏற்று உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டிக்கொள்கின்றோம் என குறிப்பிட்டு மதத் தலைவர்களால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அக்கடிதத்தின் பிரதிகள்,

தலைவர்- தமிழீழ ஈழ விடுதலை இயக்கம், தலைவர்- தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தலைவர் - ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தலைவர்- தமிழ்த் தேசிய திற்கான மக்கள் முன்னணி, தலைவர் - தமிழ் மக்கள் பேரவை, தலைவர்- ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (செ-11)

## முதல்வரின் நிபந்த...

மூலம் அறிவித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் நேற்று எழுதிய கடிதத்துக்கு. நேற்றைய தினமே அனுப்பியுள்ள பதில் கடிதத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அக்கடிதத்தில்,

19.06.2017

கௌரவ நீதியரசர் சி.வி .
விக்னேஸ்வரன்
முதலமைச்சர் வட மாகாணம்

அன்புக்குரிய விக்னேஸ்.

தங்களது 19.06.2017 திகதியிடப்பட்ட கடிதத்திற்கு நன்றி.

நீங்கள் கூறியுள்ள அனைத்து விடயங்களையும் கவனத்தில் கொண்டுள்ளேன்.

மேலும் மூன்று நிபந்தனைகளின் அடிப்படையில் இந்த விடயம் முடிவிற்கு கொண்டு வரப்பட வேண்டும் என தெரிவித்து ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் மற்றும் பேரருட்திரு. வண பிதா ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆகியோர் அனுப்பியுள்ள கடிதமும் கிடைத்துள்ளது.

சட்டபூர்வமானதும் சுதந்திரமானதுமான எந்தவொரு விசாரணைக்கும் இடையூறு விளைவிக்ககூடாது என்பதனை குறித்த இரண்டு அமைச்சர்களுக்கும் நான் தெரியப்படுத்துவேன்.

நான் தற்போது தொலைபேசியில் கௌரவ வட மாகாண ஆளுநரை தொடர்பு கொண்டு குறித்த நம்பிக்கை இல்லாப் பிரேரணை வாபஸ் பெறப்படும் என தெரிவித்துள்ள அதேவேளை, சம்பந்தப்பட்ட நபர்களோடு தொடர்பிலுள்ளேன்.

எல்லாம் நலமாகவே அமையட்டும்.

நாம் வெகுவிரைவில் சந்தித்தது பல பிரச்சினைகள் தொடர்பில் மேலதிகமான கலந்துரையாடலில் ஈடுபட எதிர்பார்க்கிறேன்.

உண்மையுள்ள,
இரா. சம்பந்தன்

தலைவர் தமிழ் தேசிய கூட்டமைப்பு என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

## அமைச்சர்கள் பணியி...

"அன்புக்குரிய சாம்" என்று விழித்து. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு அவர் ஆங்கிலத்தில் (நேற்று) அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு கூறியுள்ளார். '17.06.2017 நாளிடப்பட்ட உங்களின் கடிதம் கிடைத்தது. நன்றி.

இன்று (நேற்று) காலை யாழ். ஆயர் வண. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், நல்லை ஆதீனம் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமி ஆகியோரின் குறிப்பும் கிடைத்தது. முதலில் ஒரு விளக்கம்.

சம்பந்தப்பட்ட இரண்டு அமைச்சர்களுக்கும் எதிராக தண்டனை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவர்கள் தமது ஊதியம், வாகனம் மற்றும் ஏனைய வசதிகளைப் பெறும் உரிமை உள்ளது.

விசாரணை அமர்வு நடைபெறும் போது, சாட்சிகளின் பாதுகாப்பு கருதி அவர்கள் விடுப்பில் செல்ல வேண்டும் என்றே உத்தரவிடப்பட்டது. அவர்களுக்கு எதிராக புதிய குற்றச்சாட்டுகளும் உள்ளன.

இந்த விடயத்தில் இரண்டு அமைச்சர்கள் தொடர்பாக உங்களால் உத்தரவாதம் அளிக்க இயலவில்லை என்பதை புரிந்து கொள்கிறேன். ஆனால் சுதந்திரமான விசாரணைக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது என்று நீங்கள் அவர்களுக்கு ஆலோசனை வழங்கியது மகிழ்ச்சி அளிக்கிறது.

சுதந்திரமான விசாரணையை உறுதிப்படுத்தவே அவர்களை கட்டாய விடுப்பில் அனுப்பும் முறைமையை வரைந்தேன்.

நீங்கள் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருக்கிறீர்கள். சுதந்திரமான விசாரணைக்கு முட்டுக்கட்டை போடக் கூடாது என்று குறிப்பிட்ட இரண்டு அமைச்சர்களுக்கும் நீங்கள் ஆலோசனை கூற வேண்டும்.

நீதி விசாரணையில் தலையீடு செய்யாமல். இரண்டு அமைச்சர்களும் விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று இரண்டு மதத் தலைவர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் மதிப்புக்குரியவர்களான செல்வம் அடைக்கலநாதன், சுரேஸ் பிரேமச்சந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரும் என்னைச் சந்தித்து, சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இருவரும் நீதி விசாரணைகளில் தலையீடு செய்யாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதாக தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் சம்பந்தப்பட்டவர்களை விடுப்பில் அனுப்பும் நிபந்தனையை வலியுறுத்தப் போவதில்லை. என்று அந்தக் கடிதத்தில் முதலமைச்சர் கூறியுள்ளார்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள், நல்லை ஆதீனம், யாழ். ஆயர், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், சுரேஸ் பிரேமச்சந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், ஜனாதிபதி சட்டவாளர் கனகஈஸ்வரன் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (செ-11)


**காணி விற்பனைக்கு**

தட்டாதெரு சந்திக்கும், யாழ். இந்துக் கல்லூரிக்கும் அருகாமையில் ஓடை லேன் (ராதா லேன்) இல் அமைந்துள்ளது.

(9492) **தொடர்பு: 075 639 6761**

**ஆங்கில வகுப்பு**

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு : 0767070069**

(9491) **M.Suren**

**உடனடி வேலை வாய்ப்பு**
**V2 TRAVELS**




**விமானப் பயணச்சீட்டுக்கள்**
**விரைவுப் பொதிகள் சேவை**



நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
எமது அலுவலகத்திலேயே இலவசமாக கற்பித்து வேலையும் கொடுக்கின்றோம்
5,000/=(பயிற்சியின் போது) //15,000/=(பயிற்சியின் பின்னர்)
தகுதி :-40 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
இதுவரை சரியான வாய்ப்புக்கள் மற்றும் தொழில் அனுபவங்கள் கிடைக்காத வாழ்க்கையில் முன்னேற துடிக்கும் கடின உழைப்பாளிகளை எதிர்பார்க்கின்றோம்.
நேர்முகத்தேர்வு - 21-06-2017 புதன்கிழமை காலை 10 மணி
49A சப்பல்லேன், யாழ்ப்பாணம் (யாழ் பொது நூலகம் முன்னால்) **0768226236**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் அருளப்பு ஞானானந்தன்

மண்ணகத்தில் : 1936.08.24
விண்ணகத்தில் : 2017.05.21

கடந்த 21.05.2017 இறைபதம் அடைந்த அமரர் அருளப்பு ஞானானந்தன் மரணச் செய்தி கேட்டு வெளிநாடுகளிலும் உள்நாடுகளிலும் இருந்தும் முகநூல், தொலைபேசி, குறுந்தகவல்கள், மின்னஞ்சல், பத்திரிகை, துண்டுப்பிரசுரம், பதாகை வாயிலாகவும் மலர் வளையம், மலர்மாலையிட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மேலும் மரண அறிவித்தலை பத்திரிகையில் பிரசுரித்த வலம்புரி நிறுவனத்திற்கும் அன்ரா நிறுவனத்தினருக்கும் இலங்கை போக்குவரத்துச் சபை, பிரதேச சபை, சாவகச்சேரி, கிளிநொச்சி வைத்தியசாலை வைத்தியர்கள், பணியாளர்கள், ஊழியர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலி துண்டுப்பிரசுரங்களை வழங்கிய அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலை சமூகங்கள், யாழ். நவாலி மகா வித்தியாலயம், யா/ மயிலிட்டி R.C.T.M, கிளி/ பாரதிபுரம் மகா வித்தியாலயம், கிளி/ இரணைதீவு R.C.T.M, கிளி/ பரந்தன் மகா வித்தியாலயம், பொது அமைப்புக்கள், நவாலி தெற்கு முதியோர் சங்கம், J/136 ஓய்வூதிய சங்கம், நவாலி விஸ்வலிங்கம் குடும்பத்தினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இறுதி அஞ்சலியில் கலந்து கொண்டு ஆத்மசாந்திக்காக இறையருள் வேண்டி எம்மை ஆற்றுப்படுத்திய அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் உறவுகளுடன் பணிபுரியும் உத்தியோகத்தர்கள், பணியாளர்கள், அனைவருக்கும் நன்றிகள்.

இன்று 20.06.2017 செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணியளவில் நவாலி சென்.பீற்றேர்ஸ் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**நவாலி தெற்கு, மானிப்பாய். (மருதமடு மாதா ஒழுங்கை)**
**குடும்பத்தினர் 077 591 0563**
(சி-8331)

**COMPUTER PERSONAL CLASS**

அன்பாகவும் பண்பாகவும் விளங்கக்கூடிய வகையில் தனிப்பட்ட கவனத்துடன் கற்பிக்கப்படும்.

நேரம் : மாலை 5.00 - 8.00 மணிவரை நடைபெறும் (MON,TUE,WED,THU,FRI,SAT)

காலை 9.00 - 12.00 , மாலை 5.00 - 8.00 (SUNDAY ONLY)

**தொடர்பு : 077 020 0807, 021 459 0766**
138/3, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(மகேஸ்வரன் மணிமண்டபத்துக்கு அருகாமை)
(9495)

**தனியார் கல்வி நிலையம் - சங்கானை**
**ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பம்**

**தகைமை :- உயர்தரக் கல்வி கற்றவர்கள்**




| | |
|---|---|
| பாடங்கள் | 6 – 11 வரை |
| தமிழ் | - A/L தமிழ் |
| கணிதம் | - A/L கணிதம் |
| விஞ்ஞானம் | - A/L உயிரியல் |
| சமயம் | - A/L தமிழ் |
| ஆங்கிலம் | - கற்பிக்க விரும்புவோர் |
| சுகாதாரம் | - A/L |
| வரலாறு | - A/L |
| சுற்றாடல் | - A/L |
| வர்த்தகம் | - A/L |




தரம் 1 – 5 வரை உள்ள பாடங்கள் கற்பிக்க விரும்புவோர் [G.C.E (O/L), A/L]

விண்ணப்பதாரிகள் உங்கள் சுயவிபரங்களை கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பவும்.
(20.06.2017 - 30.06.2017)

முகவரி
தனியார் கல்வி நிலையம், சங்கானை.
ச.இராசரத்தினம்,
[illegible] கிழக்கு, சுழிபுரம்.

தொலைபேசி இலக்கம் : 0778522949

**V2 TRAVELS**
விமான பயணச்சீட்டுக்கள்
விரைவு பொதிகள் சேவை
விசா சேவைகள்
**முகவர்கள் தேவை**
நேர்முகத்தேர்வு 21-06-2017 புதன்கிழமை மதியம் 2 மணி
**0774836084**
49A சப்பல்லேன், யாழ்ப்பாணம். (யாழ் பொது நூலகம் முன்னால்)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org